إِلَّا مَا دُمْتَ عَلَيْهِ قَائِمًا ذَٰلِكَ بِأَنَّهُمْ قَالُوا لَيْسَ
عَلَيْنَا فِي الْأُمِّيِّينَ سَبِيلٌ وَيَقُولُونَ عَلَى اللَّهِ
الْكَذِبَ وَهُمْ يَعْلَمُونَ ۝

74.இன்னும், வேதத்தையுடையவர்களில் சிலர் இருக்கின்றனர். அவரிடத்தில் நீர் ஒரு (பணக்) குவியலை (ப்பாதுகாத்துத் தருவதற்காக) அமானிதம் வைத்தால் அதை (நீர் கேட்கும்போது) உம்மிடம் (திரும்பத் தந்து) நிறைவேற்றுவார். இன்னும், அவர்களில் சிலர் இருக்கின்றனர். அவரிடத்தில் நீர் ஒரு தங்க நாணயத்தை (ப் பாதுகாத்துத் தருவதற்காக) அமானிதம் வைத்தாலும் நீர் அவரிடம் (நிர்ப்பந்தித்து) நிற்பவராக இருந்தாலன்றி, அதை உம்மிடம் ஒப்படைக்க மாட்டார். (பாதுகாப்புக்காக வைத்ததை அபகரிக்கும்) இதுவாகிறது. (எழுதப்படிக்காதவர்களான) உம்மிகள் விஷயத்தில் எங்கள் மீது எந்தவித (பாவத்துக்குரிய) வழியுமில்லை என்று அவர்கள் நிச்சயமாகக் கூறிக் கொண்டிருப்பதனாலேயாகும். இன்னும், அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வின் மீது பொய்யைச் சொல்லுகின்றனர்.

அப்துல்லாஹிப்னு ஸலாம் என்பவரிடம் ஒரு குறைஷி ஒரு ஆயிரத்து இருநூறு ஔக்கியா வெள்ளிக் காசுகளை அமானிதமாக வைத்திருந்தார். அதனை அவர் கேட்டபோது எந்தவிதத் தாவாவுமில்லாமல் கொடுத்து விட்டார். இவர் யூதராக இருந்து பின்னர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினார். வேதக்காரர்களில் நம்பிக்கைத் துரோம் செய்யாமலிருந்தவர்கள் அவர்களில் ஈமான் கொண்டு இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி விட்டார்கள்.

கஃபுப்னுல் அஷ்ரப் என்ற யூதரிடத்தில் குறைஷியரிலுள்ள ஒருவர் ஒரு தங்கக் காசை அமானிதம் வைத்திருந்தார். அதனைத் திரும்பக் கேட்டபோது அவர் கொடுக்க மறுத்து “இல்லை” என்று சொல்லி விட்டார். இப்படிப்பட்டவர்கள் யூத மதத்திலேயே ஸ்திரமாக இருந்து விட்டனர். ஆகவே, யூதர்களில் நாணயமுள்ளவர்களைப் புகழ்ந்தும், நாணயமற்றவர்களை இகழ்ந்தும் அல்லாஹுதஆலா இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான்.

வேதக்காரர்களைத் தவிர மற்றவர்களிடத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்வதால் குற்றமில்லை என்றும், அவ்வாறு செய்வதை அவர்களது வேதம் அனுமதிக்கிறது என்றும் அந்த யூதர்கள் கூறிக் கொண்டிருந்தனர். அவர்களது இந்த எண்ணத்தினால்தான் அவர்கள் இவ்வாறு நம்பிக்கை மோசம் செய்து கொண்டிருந்தனர்.

بَلَىٰ مَنْ أَوْفَىٰ بِعَهْدِهِ وَاتَّقَىٰ فَإِنَّ اللَّهَ يُحِبُّ الْمُتَّقِينَ ۝

75. உண்மைதான். (அவர்கள் மீது குற்றம் ஏற்பட வழி இருக்கிறது) எவர் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி, (அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடக்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ் (அத்தகைய) பயபக்தியுள்ளவர்களை நேசிக்கின்றான்.

வாக்குறுதி என்றது தவ்ராத் வேதத்தில் அல்லாஹு தஆலா யூதர்களிடம் வாங்கிய வாக்குறுதியைக் குறிக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசிக்க வேண்டும் என்றும் அமானிதத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவ்வேதத்தில் அவன் வாக்குறுதி வாங்கி இருக்கிறான். இந்த ஆயத்தில் அமானிதத்தையும் வாக்குறுதியையும் நிறைவேற்றும்படி அல்லாஹு தஆலா வற்புறுத்தியுள்ளான்.

ஹதீஸ்:- நான்கு குணங்கள் எவரிடமிருக்கின்றனவோ அவர் சுத்தமான முனாஃபிக்காகி விடுவார். இன்னும் அவற்றிலிருந்து ஒரு குணம் இருந்தால் அவர் அதனை விடும்வரை அவரிடம் முனாஃபிக் தனத்திலிருந்து நான்கு குணங்கள் இருந்து கொண்டிருக்கும். (அவைகளாவன) அமானிதம் வைக்கப்பட்டால் நம்பிக்கை மோசம் செய்வார், பேசினால் பொய்யுரைப்பார், வாக்குறுதி அளித்தால் மாறு

செய்வார், போரிட்டால் சத்தியத்தை விட்டு விலகி விடுவார் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِنَّ الَّذِينَ يَشْتَرُونَ بِعَهْدِ اللّٰهِ وَأَيْمَانِهِمْ ثَمَنًا قَلِيلًا
أُولٰٓئِكَ لَا خَلَاقَ لَهُمْ فِي الْآخِرَةِ وَلَا يُكَلِّمُهُمُ اللّٰهُ وَلَا
يَنْظُرُ إِلَيْهِمْ يَوْمَ الْقِيٰمَةِ وَلَا يُزَكِّيهِمْ ۖ وَلَهُمْ عَذَابٌ
أَلِيمٌ ۝

76. நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதிக்கும், தங்களின் சத்தியங்களுக்கும் (பதிலாக) அற்பப் பொருளை வாங்குகின்றனரோ – அவர்கள் – அவர்களுக்கு மறுமையி(ன்) பேறுகளில் எந்தவிதப் பங்குமில்லை; இன்னும், அல்லாஹ் அவர்களுடன் பேசவுமாட்டான்; இன்னும் இறுதி நாளில் அவர்களைப் பார்க்கவுமாட்டான்; இன்னும், அவர்களைப் புனிதப்படுத்தவுமாட்டான். மேலும், அவர்களுக்கு நோவினை செய்யக் கூடிய வேதனையுமுண்டு.

இந்த ஆயத்து பொதுவாக தவ்ராத் வேதத்தையும் முக்கியமாக அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ள வர்ணனைகளையும் திரித்துக் கூறி லஞ்சம் வாங்கிய யூதர்களைக் குறித்து இறக்கப்பட்டது.

وَإِنَّ مِنْهُمْ لَفَرِيقًا يَلْوٗنَ أَلْسِنَتَهُمْ بِالْكِتٰبِ لِتَحْسَبُوهُ
مِنَ الْكِتٰبِ وَمَا هُوَ مِنَ الْكِتٰبِ ۚ وَيَقُولُونَ هُوَ مِنْ
عِنْدِ اللّٰهِ وَمَا هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ ۚ وَيَقُولُونَ عَلَى اللّٰهِ

الْكَذِبَ وَهُمْ يَعْلَمُونَ ۝

77. மேலும், அவர்களில் ஒரு கூட்டத்தினர் நிச்சயமாக நீங்கள் வேதத்தில் உள்ளதென்று எண்ணிக் கொள்வதற்காக தங்களுடைய நாவுகளில் வேதத்தைப் புரட்டுகின்றனர். ஆனால், அது வேதத்தில் உள்ளதல்ல. இன்னும், அது அல்லாஹ்வின் புறத்தில் உள்ளது என்று கூறுகின்றனர்; ஆனால், அதுவோ அல்லாஹ்வின் புறத்திலிருந்து (உள்ளதாக) இல்லை. இன்னும், அவர்கள் அறிந்துகொண்டே அல்லாஹ்வின் மீது பொய்யுரைக்கின்றனர்.

கஃஹுப்னுல் அஷ்ரப், மாலிக்குப்னுஸ்ஸைப் ஆகியவர்களும், அவர்களைப் போன்றவர்களும் தவ்ராத் வேதத்தை ஓதும்போதே, இடையில் தாங்களாகவே இட்டுக்கட்டி வைத்திருப்பவைகளையும் சேர்த்து ஓதி விட்டு, இதுவும் வேதத்தில் உள்ளதுதான் என்று கூறுவார்கள். இவர்கள் தாங்களாக இட்டுக் கட்டிக் கூறுவது வேதத்தில் உள்ளதில்லை யென்றும், இவர்கள் இப்படிக் கூறுவது அல்லாஹு தஆலாவின் மீது பொய்யாகக் கூறுவதாகுமென்றும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

مَا كَانَ لِبَشَرٍ أَنْ يُؤْتِيَهُ اللّٰهُ الْكِتٰبَ وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ
ثُمَّ يَقُولَ لِلنَّاسِ كُونُوا عِبَادًا لِي مِنْ دُونِ اللّٰهِ وَلٰكِنْ
كُونُوا رَبّٰنِيّٖنَ بِمَا كُنْتُمْ تُعَلِّمُونَ الْكِتٰبَ وَبِمَا كُنْتُمْ
تَدْرُسُونَ ۝

78. ஒரு மனிதருக்கு அல்லாஹ் அவருக்கு, வேதத்தையும் ஞானத்தையும், நபித்துவத்தையும் கொடுத்திருக்க, பின்னர் "அல்லாஹ்வைத் தவிர்த்து எனக்கே அடிமையாகுங்கள்" என்று

மனிதர்களுக்கு அவர் சொல்வதற்கு (உரிமை) யில்லை. எனினும், **நீங்கள் வேதத்தை ஓதிக் கொண்டிருந்ததனாலும், இன்னும், (அதை) நீங்கள் கற்பித்துக் கொண்டிருந்ததனாலும் ரப்புக்குரியவர்களாகி விடுங்கள் (என்று கூறுவதுதான் அவருக்குத் தகுதியானது).**

நஜ்ரானிலிருந்த கிறிஸ்துவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து "தம்மை றப்பாக எடுத்துக் கொள்ளும்படி எங்களுக்கு ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கட்டளையிட்டார்கள்" என்று கூறினார்கள். இவ்வாறு வேதக்காரர்கள் தங்களது நபிமார்கள் மீது இட்டுக் கட்டிக் கூறிய விஷயத்தை இங்கு கூறி, அவர்கள் அவ்வாறு கூறமாட்டார்கள் என்றும், அல்லாஹு தஆலாவுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து அவனுக்குரிய அடியார்களாக ஆகும்படியே மனிதர் களுக்கு ஏவுவார்கள் என்றும் இந்த ஆயத்தில் கூறப் பட்டிருக்கிறது.

அல்ஹுக்மு என்பதற்கு அறிவு, விவேகம், விளக்கம் என்பது பொருள். ஷரீஅத்தைப் பற்றித் தெரிந்திருப்பதும், வேதத்தில் உள்ளதையும் வேதக் கட்டளைகளின் கருத்துகளையும் உணர்ந் திருப்பதும் இப்பதத்தின் கருத்தாகும்.

அர்றப்பானீ என்பதற்கு றப்பைச் சேர்ந்தவர் என்பது பொருளாகும். கல்வியில் பாண்டித்துவமடைந்து ஷரீஅத்தில் சொல்லப் பட்டபடி அல்லாஹு தஆலாவிற்கு அதிகமாக இபாதத் தென்னும் வணக்கம் புரிபவர்களுக்கு **றப்பானீ** என்று சொல்லப்படும்.

وَجَاءَ رَجُلٌ مِنَ الْمُسْلِمِيْنَ فَقَالَ يَارَسُوْلَ اللهِ صَلَّي اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نُسَلِّمُ عَلَيْكَ كَمَا يُسَلِّمُ بَعْضُنَا عَلَى بَعْضٍ أَفَلَا نَسْجُدُ لَكَ فَقَالَ مَعَاذَ اللهِ اَنْ نَعْبُدَ غَيْرَ اللهِ اَوْ اَنْ نَأْمُرَ بِعِبَادَةِ غَيْرِ اللهِ

ரிவாயத்து:- முஸ்லிமான ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "அல்லாஹு தஆலாவின்

ரசூல் அவர்களே! ஸலாம் சொல்லுகிறோம். ஆனால், தங்களுக்கு நாங்கள் சுஜூது செய்ய வேண்டாமா?" என்று கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ளவைகளை நாம் வணங்குவதையும் அல்லது அல்லாஹு தஆலா அல்லாததை வணங்கும்படி நாம் ஏவுவதையும் விட்டு அல்லாஹு தஆலா நம்மைக் காப்பாற்றுவானாக" என்று கூறினார்கள்.

وَلَا يَأْمُرَكُمْ أَنْ تَتَّخِذُوا الْمَلٰٓئِكَةَ وَالنَّبِيّٖنَ أَرْبَابًا ۗ أَيَأْمُرُكُمْ بِالْكُفْرِ بَعْدَ إِذْ أَنْتُمْ مُسْلِمُوْنَ ۞

79. இன்னும், அமரர்களையும், நபிமார்களையும் ரப்புகளாக நீங்கள் ஆக்கிக் கொள்ளும்படி உங்களை அவர் ஏவமாட்டார். நீங்கள் முஸ்லிம்களாகி விட்ட பின்பு, நிராகரிப்பாளர்களாய் ஆகி விடுங்கள் என்று உங்களுக்கு அவர் கட்டளையிடுவாரா?

இந்த ஆயத்து இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்ட விஷயங்களுடன் சேர்ந்ததேயாகும்.

நீங்கள் முஸ்லிம்களாகி விட்ட பின்னர் நபிமார்களுக்கு சுஜூது செய்யும்படியும், மலக்குகளை வணங்கும்படியும் நபிமார்கள் ஏவமாட்டார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

அறிந்துகொள்:- நபிமார்கள் அவ்வாறு ஏவினால் அவர்களை விட்டு நுபுவ்வத்தும் ஈமானும் பறிக்கப்பட்டு விடும். அவர்களும் காஃபிராகி விடுவார்கள். ஒருவருக்கு அல்லாஹு தஆலா வேதத்தையும் விளக்கத்தையும் நுபுவ்வத்தையும் கொடுத்தால் அவர் எல்லா மனிதர்களைப் பார்க்கினும் சிறந்தவராகவும் மிகுந்த அறிவுள்ள வராகவுமிருப்பார். இவைகள் அவரை இவ்விதமான காரியங்களைச் செய்வதை விட்டு விலக்கி விடும்; பரிசுத்தமானவர்களுக்கும், மணமான ரூஹுகளுக்குமே அல்லாஹுதஆலா வஹியையும் வேதத்தையும் அருளுவான். மற்றவர்களுக்கு அருளமாட்டான். நுபுவ்வத்தும்,

அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ள மற்றவைகளை வணங்கும்படி ஏவுவதும் ஒருவரிடம் ஒன்று சேர மாட்டா.

وَإِذْ أَخَذَ اللَّهُ مِيثَاقَ النَّبِيِّينَ لَمَا آتَيْتُكُمْ مِنْ كِتَابٍ
وَحِكْمَةٍ ثُمَّ جَاءَكُمْ رَسُولٌ مُصَدِّقٌ لِمَا مَعَكُمْ
لَتُؤْمِنُنَّ بِهِ وَلَتَنْصُرُنَّهُ قَالَ أَأَقْرَرْتُمْ وَأَخَذْتُمْ
عَلَىٰ ذَٰلِكُمْ إِصْرِي قَالُوا أَقْرَرْنَا قَالَ فَاشْهَدُوا
وَأَنَا مَعَكُمْ مِنَ الشَّاهِدِينَ ۝

80. மேலும், "உங்களுக்கு வேதத்தையும், அறிவையும் கொடுத்தேன். பின்பு, உங்களிடமிருக்கிற வேதத்தை உண்மைப் படுத்துகிற ஒரு தூதர் உங்களிடம் வருவார்; அவரை நீங்கள் நிச்சயமாக விசுவாசித்து அவருக்கு உதவி புரிய வேண்டும்" என்று அல்லாஹ் நபிமார்களிடத்தில் உறுதிமொழி வாங்கிய வேளையை (எண்ணிப்பாரும்). இதை நீங்கள் உறுதிப்படுத்தினீர்களா? இன்னும், இதன்படி என்னுடைய வாக்குறுதியை நீங்கள் (ஏற்று) எடுத்துக் கொண்டீர்களா? என்று (அல்லாஹ்) கேட்டான்; (அதற்கு) அவர்கள் உறுதிப் படுத்தினோம் என்றார்கள்; அவ்வாறாயின் (இவ்வாக் குறுதிக்கு) நீங்களும் சாட்சிகளாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சிகளில் உள்ளவனாக இருக்கிறேன்" என்று அவன் கூறினான்.

அல்லாஹுதஆலா நபிமார்களிடத்தில் பிரத்தியேகமாக ஒரு வாக்குறுதி வாங்கி இருக்கிறான். அதாவது "நபிமார்கள் ஒருவரை யொருவர் விசுவாசிக்க வேண்டும், ஒவ்வொரு நபியும் தனக்குப் பின்னால் வருகிற நபிமார்களை விசுவாசித்து அவருடைய காலம் வரை உயிருடனிருந்தால் பின்னால் வருகிற அந்த நபிக்கு உதவி புரிய வேண்டும், அவரது காலத்தை அடையாமலிருந்தால், அவர் வரும்போது அவரை விசுவாசித்து அவருக்கு உதவி புரிய வேண்டு

மென்று, தமது உம்மத்துகளுக்குக் கட்டளையிடவேண்டும்" என்று கட்டளையிடப்பட்டிருந்தார்கள். எனவே, இதன்படி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விசுவாசம் கொள்ள வேண்டுமென்றும் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விசுவாசங் கொள்ள வேண்டுமென்றும் உறுதிமொழி வாங்கப்பட்டிருந்தார்கள். இவ்விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. நபிமார்களுடைய நிலையே இவ்வாறிருப்பதால், சாதாரண உம்மத்துகள் எல்லா நபிமார்களையும் விசுவாசித்து ஈமான் கொள்வது மிகவும் அவசியமென்பது இந்த ஆயத்திலிருந்து வெளியாகின்றது.

فَمَنْ تَوَلَّىٰ بَعْدَ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الْفَاسِقُونَ ۝

81. ஆகவே, இதற்குப் பின்னும் எவர்கள் (இவ்வேதத்தையும், நம்முடைய தூதரையும் விசுவாசிக்காமல்) பின்வாங்குகின்றனரோ அவர்கள்தாம் பாவிகள்.

நபிமார்களிடமிருந்து வாக்குறுதியை புறக்கணிக்கும் செய்கை நிகழாது, அவர்கள் பாவம் செய்யக்கூடியவர்களாகவும் ஆக மாட்டார்கள். என்றாலும் இந்த ஆயத்தில் ஒருவர் இதற்குப் பின்னால் (அந்த வாக்குறுதியைப்) புறக்கணித்தால், அவர்கள்தாம் (வாக்கு றுதிக்குக்) கீழ்ப்படியாதவர்கள் என்று நபிமார்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பதற்குக் காரணமென்னவெனில், இதற்கு முந்திய ஆயத்தில் கூறப்பட்டபடி நபிமார்களிடம் வாக்குறுதி வாங்கப்பட்டாலும் அந்த வாக்குறுதி அவர்களைப் பின்பற்றிய அவர்களுடைய உம்மத்துகளையும் கட்டுப்படுத்துகிறது. வாக்குறுதியை மீறுவது உம்மத்துகளில் விசேஷமாக இருக்கிறது. ஆதலால்தான் இந்த ஆயத்தில் வாக்குறுதியைப் புறக்கணிக்கிறவர்கள் எவர் என்பதைப் பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வாக்குறுதியைப் பற்றிய விபரம் வேதக்காரர்களது வேதங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் இதனை அறிந்தும் இருக்கின்றனர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபியாக வந்திருப்பது உண்மைதான் என்பதையும் அவர்கள் தெரிந்தும் இருக்கின்றனர். அவ்வாறு இருக்க அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பொறாமையும் பகையும் கொண்டதால் தங்களது நிராகரிப்பிலேயே இருந்து விட்டனர்.

أَفَغَيْرَ دِينِ اللَّهِ يَبْغُونَ وَلَهُ أَسْلَمَ مَنْ فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ طَوْعًا وَكَرْهًا وَإِلَيْهِ يُرْجَعُونَ ۝

82. அல்லாஹ்வின் மார்க்கம் அல்லாததைத் தேடுகின்றனரோ? ஆனால், வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள் (யாவரும்) திருப்தியாகவும், அதிருப்தியாகவும் அவனுக்கே கீழ்ப்பட்டிருக்கின்றனர். இன்னும் அவன் பக்கமே மீள்விக்கப் படுவார்கள்.

யூதர்கள் கிறிஸ்துவர்கள் தங்கள் வேதத்தின் மூலமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கடைசி காலத்து நபி யென்பதாக அறிந்திருந்தும் பொறாமையினாலும், பகைமை யினாலும் அவர்கள் ஈமான் கொள்ளாமலிருந்ததால், அவர்கள் அல்லாஹு தஆலாவின் மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்தைத் தேடுகிறார்கள் என்பதும், அல்லாஹு தஆலாவைத் தவிர்த்து வேறு நாயனை வணங்கி வருகிறார்கள் என்பதும் வெளியாகிறது என்பதைக் குறித்து أَفَغَيْرَ دِينِ اللَّهِ يَبْغُونَ **அல்லாஹ்வின் மார்க்கம் அல்லாததையா அவர்கள் தேடுகிறார்கள்** என்ற வசனம் அருளப்பட்டது. இவ்வுலகில் எவர் அல்லாஹு தஆலாவிற்கு மாறு செய்கிறாரோ அவர் திரும்பச் செல்ல வேண்டிய இடம் அல்லாஹு தஆலாவிடத்தில்தான் இருக்கிறது. அங்கு அவனைத் தவிர வேறு யாரும் கதியில்லை. அவன்தான் நன்மைப் பயனை யளிக்கவோ தீமைப் பயனை யளிக்கவோ முடியும் என்பது இந்த ஆயத்தின் கருத்து. இந்த ஆயத்து சன்மார்க்கத்திற்கு

மாறு செய்பவர்களுக்கு மிகவும் கடுமையான எச்சரிக்கையாகும். ஆகவே, அல்லாஹு தஆலாவுக்கு வழிப்பட்டு, அவனது வாக்குறுதிக்கு மாறு செய்யாமலிருப்பது அறிவுடையோரின் கடமையாகும்.

அல்லாஹுதஆலா நபிமார்களிடத்திலும், ஒலிமார் களிடத்திலும் மூமின்களிடத்திலும் தவ்ஹீதைக் குறித்தும், மார்க்கத்தை நிலை நிறுத்துவதைக் குறித்தும், அதற்கு மாறுபடாமலிருப்பதைக் குறித்தும் அவர்கள் ஒருவரை யொருவர் உண்மைப்படுத்த வேண்டும் என்பதைக் குறித்தும், அல்லாஹு தஆலாவுக்கு வழிப்பட வேண்டும் என்று மனிதர்களை அழைக்க வேண்டுமென்பதைக் குறித்தும், தன்னை மட்டும்தான் வணங்க வேண்டும் என்பதைக் குறித்தும் வாக்குறுதி வாங்கி இருக்கிறான். ஆகவே, அடியார்கள் தன்னை வணங்குவதில் உண்மையாக இருக்க வேண்டுமென்பதையும், அவனுக்குரிய பாத்தியதைகளைக் குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்பதையுமே அல்லாஹு தஆலா விரும்புகிறான்.

ஹிக்காயத்து:- தாங்கள் எங்களுக்காக பள்ளி வாசலில் தங்கி இருந்தால் உங்களிடம் நாங்கள் பல விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுவோம் என்று ஹளரத் இப்ராஹீமுப்னு அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் சொல்லப்பட்டது. அதற்கு ஹளரத் அவர்கள் "நான் நான்கு காரியங்களில் மூழ்கி இருக்கிறேன். அவற்றை நான் முடித்துக் கொண்டால் உங்களுடன் நான் உட்கார முடியும்" என்று பதில் கூறினார்கள்.

அப்பொழுது அந்த நான்கு காரியங்களும் என்னவென்று வினவியதற்கு, ஹளரத் அவர்கள்,

1. "இந்தக் கூட்டத்தினர் சுவர்க்கத்திற்குச் செல்வார்கள், அதனை நான் லட்சியம் செய்ய மாட்டேன். அந்தக் கூட்டத்தினர் நரகத்திற்குச் செல்வார்கள், அதனை நான் லட்சியம் செய்ய மாட்டேன்" என்று அல்லாஹுதஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் கூறி இருப்பதை நான் எண்ணிப் பார்த்தேன். இவ்விரண்டு கூட்டத்தில் நான் எந்தக் கூட்டத்திலிருக்கிறேன் என்பதை நான் அறியவில்லை.

2. ஒரு குழந்தையை அதன் தாய் வயிற்றில் அல்லாஹு தஆலா சிருஷ்டித்து, அதற்கு ரூஹை ஊதினால் அக்குழந்தைக்காகச் சாட்டப் பட்டிருக்கிற மலக்கு "என்னுடைய றப்பே! இது சீதேவியா? அல்லது மூதேவியா?" என்று இறைவனிடம் கேட்கிறார். எனது தாயின் வயிற்றில் நான் சிருஷ்டிக்கப்பட்டு எனக்கு ரூஹு ஊதப்பட்ட போது என் பால் சாட்டப் பட்டுள்ள மலக்கு என்னைக் குறித்துக் கேட்ட போது எனது றப்பு எவ்வாறு பதில் கூறினான் என்பதை நான் அறியவில்லை.

3. மலக்குல் மவ்த்து வந்து உயிரைக் கைப்பற்றும் போது "எனது றப்பே! இஸ்லாத்துடன் உயிரை வாங்கட்டுமா? குஃப்ருடன் வாங்கட்டுமா?" என்று அல்லாஹு தஆலாவிடம் கேட்பார். என்னைக் குறித்து மலக்குல் மவ்த்து அல்லாஹு தஆலாவிடம் கேட்கும் போது எந்தவிதமாக இறைவன் கூறுவான் என்பதை நான் அறிய வில்லை.

4. "குற்றவாளிகளே! இன்றைய தினம் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று கியாமத்து நாளில் அல்லாஹு தஆலா கூறுவான் என்று அவனது திருமறையிற் கூறப்பட்டுள்ள ஆயத்தைப் பற்றிச் சிந்தித்தேன். இதில் நான் எந்தக் கூட்டத்தில் இருக்கிறேன் என்பதை நான் அறியவில்லை.

இவ்வாறு நான்கு காரியங்களைப் பற்றிய சிந்தனையில் நான் இருப்பதால்தான் "உங்களுடன் உட்காரவும் உங்களுடன் பேசவும் என்னால் முடியவில்லை" என்று கூறினார்கள்.

قُلْ آمَنَّا بِاللَّهِ وَمَا أُنزِلَ عَلَيْنَا وَمَا أُنزِلَ عَلَىٰ
إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ وَالْأَسْبَاطِ
وَمَا أُوتِيَ مُوسَىٰ وَعِيسَىٰ وَالنَّبِيُّونَ مِن رَّبِّهِمْ
لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهُ مُسْلِمُونَ ۝

83. (ஆதலால்) "அல்லாஹ்வையும், எங்கள் மீது இறக்கப் பெற்றதையும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யாக்கூப், இன்னும் (இவர்கள்) சந்ததிகள் மீது இறக்கப்பட்டதையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும், இன்னும் (இதர) நபிமார்களுக்கும் அவர்களது ரப்பிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் விசுவாசித்தோம்; அவர்களில் ஒருவருக்கிடையிலும் வித்தியாசம் பாராட்டமாட்டோம்; இன்னும், நாங்கள் அவனுக்கே கீழ்ப்படிபவர்கள்" என்று (சொல்லும்படி நபியே நீர் அவர்களுக்குக்) கூறுவீராக.

"நாங்கள்தான் இப்ராஹீமுடைய மார்க்கத்திலிருக்கிறோம்" என்று யூதர்களும் கிறிஸ்துவர்களும் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்து கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பஞ்சாயத்திற்கு வந்தார்கள். நீங்களிருவரும் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இல்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தீர்ப்புச் செய்தார்கள். அவ்விருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கோபமாகி 'உமது தீர்ப்பும் உமது மார்க்கமும் எவ்வளவு லட்சணமாக இருக்கிறது?' என்று கூறிவிட்டுப் போனார்கள். அதற்காக இந்த ஆயத்து இறங்கியது" என்று **தஃப்ஸீர் பத்ஹுல் கரீமில்** சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கிக் கூறப்பட்டிருப்பதால் "நான் ஈமான் கொண்டேன்" என்று சொல்லும் படி இறைவன் கட்டளை யிட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் நாம் "ஈமான் கொண்டோம்" என்று பன்மையாகக் கூறும்படி சொல்லி இருப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உன்னத பதவியின் மகத்துவத்தை அறிவிக்கிறது.

وَمَا أُنزِلَ عَلَيْنَا **எங்கள் மீது இறக்கப்பட்டதையும்** என்பது திருக்குர்ஆனையும் وَمَا أُنزِلَ عَلَىٰ إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ وَالْأَسْبَاطِ **இப்ராஹீமுக்கும், இஸ்மாயீலுக்கும், இஸ்ஹாக்குக்கும் யஃகூபுக்கும் (அவர்களது) சந்ததிகள் மீது இறக்கப்பட்டதை** என்பது அந்த நபிமார்களுக்கு அல்லாஹு தஆலாவால் அளிக்கப்பட்ட

ஸுஹுஃபுகளையும், وَمَآ أُوتِيَ مُوسَىٰ وَعِيسَىٰ மூஸாவும் ஈஸாவும் கொடுக்கப்பட்டது என்பது **தவ்ராத் இன்ஜீல் வேதங்களையும் அவர்களுக்கிருந்த முஃஜிஸாத்துகளையும்** குறிக்கும்.

"எல்லா நபிமார்களையும், அவர்களுக்கு அருளப்பட்ட வேதங்களையும் சுஹுஃபுகளையும், முஃஜிஸாக்களையும் ஈமான் கொள்ள வேண்டுமென்பதும் அவர்களில் சிலரை மட்டும் ஈமான் கொண்டு சிலரை ஈமான் கொள்ளாமலிருக்கக் கூடாதென்பதும் இந்த ஆயத்தின் கருத்தாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யூதர்கள் கிறிஸ்துவர்களிடம் இம்மாதிரி கூற வேண்டும் என்று கூறி இருப்பதானது யூதர்கள் கிறிஸ்துவர்களும் இம்மாதிரியே ஈமான் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்த கொள்வதற்காகவேயாகும்".

وَمَن يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ ۚ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ ۝

84. இன்னும், எவர் இஸ்லாம் அல்லாததை (த் தனக்குரிய) மார்க்கமாகத் தேடுகிறாரோ, அவரிடமிருந்து (அது) ஒப்புக் கொள்ளப்படவே மாட்டாது; மேலும், அவர் மறுமையில் நஷ்டவாளிகளில் உள்ளவராக இருப்பார்.

இஸ்லாம் மார்க்கத்தைப் புறக்கணித்து விட்டு மற்றவைகளைத் தேடுபவர்கள் மறுமையில் நஷ்டவாளர்களாக இருப்பார்கள் என்பதும், இஸ்லாம் மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்தைத் தழுவினால் அதனை அல்லாஹு தஆலா அங்கீகரிக்க மாட்டான் என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

كَيْفَ يَهْدِي اللَّهُ قَوْمًا كَفَرُوا بَعْدَ إِيمَانِهِمْ وَشَهِدُوا أَنَّ الرَّسُولَ حَقٌّ وَجَاءَهُمُ الْبَيِّنَاتُ ۚ وَاللَّهُ لَا يَهْدِي

الْقَوْمَ الظَّالِمِينَ ۝

85. தங்களுடைய விசுவாசத்துக்குப் பின்னரும் - இத்தூதரானவர் உண்மையாளரே என்று நிச்சயமாகச் சாட்சியங் கூறி அவர்களிடம் (தெளிவான) அத்தாட்சிகளும் வந்திருக்கும் போது - நிராகரித்துவிட்ட கூட்டத்தினருக்கு அல்லாஹ் எங்ஙனம் நேர்வழி காட்டுவான்? மேலும், அல்லாஹ் அக்கிரமம் செய்யும் கூட்டத்தினருக்கு நேர்வழி காட்ட மாட்டான்.

கிராமப்புறத்து அரபிகள் ஈமான் கொண்ட பின்னர் முர்த்தத்துகளாகி மக்கத்து முஷ்ரிக்குகளுடன் சேர்ந்து கொண்டார் களென்றும், அவர்களைக் குறித்து இந்த ஆயத்து இறக்கப்பட்ட தென்றும் சொல்லப்படுகிறது.

குஃப்ரைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று நாடி அதையே விரும்பிக் கொண்டிருப்பவர்களிடத்தில் மஃரிஃபத்தையும் நேர்வழியையும் அல்லாஹு தஆலா உண்டாக்க மாட்டான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

أُولَٰئِكَ جَزَاؤُهُمْ أَنَّ عَلَيْهِمْ لَعْنَةَ اللَّهِ وَالْمَلَائِكَةِ وَالنَّاسِ أَجْمَعِينَ ۝

86. இவர்கள் (இவர்களின் பிரதிபலனானது) நிச்சயமாக இவர்கள் மீது அல்லாஹ், அமரர்கள், மனிதர்கள் யாவருடைய லஃனத்தும் உண்டாகி இருக்கிறது என்பதுதான்.

லஃனத்து என்பதற்கு சுவர்க்கத்தை விட்டுத் தூரமாக்கி வைத்து, வேதனையையும் தண்டனையையும் இறக்கி வைத்தல் என்பது கருத்து.

அன்னாஸ் அதாவது மனிதர்கள் என்பதற்கு இந்த ஆயத்தில் பொதுவாக எல்லா மனிதர்களும் என்பது கருத்தல்ல, மூமின்களான மனிதர்கள் என்பது கருத்தாகும்.

خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْظَرُوْنَ ۝

87. அதில் அவர்கள் எந்நாளுமிருப்பார்கள். அவர்களை விட்டு வேதனை இலேசாக்கப்பட மாட்டாது. இன்னும், அவர்கள் தவணை கொடுக்கப்படவுமாட்டார்கள்.

காஃபிர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனை நன்மை என்ற வாடை கூட இல்லாமல் சுத்தமான தீங்குள்ளதாக இருக்கும் என்பதும் அவர்களை விட்டு ஒரு நொடிப் பொழுது கூட நீங்காமல் நிரந்தரமாக அது இருக்கும் என்பதும் இதிலிருந்து தெரியவருகிறது.

اِلَّا الَّذِيْنَ تَابُوْا مِنْۢ بَعْدِ ذٰلِكَ وَاَصْلَحُوْا ۗ فَاِنَّ اللّٰهَ

غَفُوْرٌ رَّحِيْمٌ ۝

88. (ஆயினும்) இதற்குப் பின்னரேனும் (தங்கள் பாவங்களிலிருந்து) மீண்டு நல்ல காரியங்களைச் செய்தவர்களைத் தவிர. ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்போன், பேரன்புடையோன்.

முர்த்தத்தாகிவிட்ட ஸுவைத் என்பவர் தம்முடைய செய்கையைக் குறித்து கவலையடைந்து, தனக்கு தவ்பா உண்டா? என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டு விட்டார். அந்த நேரத்தில் இந்த ஆயத்து இறங்கிற்று. அவர் மதீனமா நகரம் சென்று மீண்டும் இஸ்லாமாகி உண்மை முஸ்லிமாகி விட்டார்.

தான் செய்த காரியத்திற்காக வருந்தி அதனை விட்டு விடுவதில் உறுதி கொள்வதற்கு தவ்பா என்று பெயர். இவ்வாறு தவ்பாச் செய்தால் மட்டும் போதாது என்பதும், தவ்பாச் செய்வதுடன் நற்செயல்களையும் செய்ய வேண்டும் என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بَعْدَ اِيْمَانِهِمْ ثُمَّ ازْدَادُوْا كُفْرًا

لَّنْ تُقْبَلَ تَوْبَتُهُمْ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الضَّآلُّوْنَ ۝

89. நிச்சயமாக எவர்கள் தாங்கள் விசுவாசங் கொண்டதன் பின்னும் நிராகரிப்பவர்களாகிப் பின்னர், (தங்கள்) நிராகரிப்பை அதிகப்படுத்திக் கொண்டே இருக்கின்றார்களோ அவர்களுடைய பாவமன்னிப்பு அங்கீகரிக்கப்படவே மாட்டாது. இன்னும், அவர்கள்தாம் வழி கெட்டவர்கள்.

முர்த்தத்தாகப் போனவர்களிற் சிலர் ஸுவைது என்பவருடன் மீண்டும் ஈமான் கொண்டு இஸ்லாத்தில் சேர்ந்தனர். ஆனால், வேறு சிலர் ஈமான் கொண்டும் மீளவில்லை. இவ்வாறு ஈமான் கொள்ளாதவர் களைக் குறித்து இந்த ஆயத்து இறக்கப்பட்டது.

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَمَاتُوْا وَهُمْ كُفَّارٌ فَلَنْ يُّقْبَلَ مِنْ

اَحَدِهِمْ مِّلْءُ الْاَرْضِ ذَهَبًا وَّلَوِ افْتَدٰى بِهٖ ۗ

اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ اَلِيْمٌ وَّمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ۝

90. நிச்சயமாக எவர்கள் நிராகரிப்பவர்களாகி, அவர்கள் நிராகரிப்பவராக இருக்கிற நிலையிலேயே மரணித்து விடுகின்றார்களோ, அவர்களில் ஒருவர் பூமி நிறம்பத் தங்கத்தை நஷ்ட ஈடு கொடுத்தாலும் அவர்களில் எவரிடத்திலிருந்தும் ஒப்புக் கொள்ளப்படவே மாட்டாது. இவர்களுக்குத்தான் நோவினை செய்யும்படியான வேதனை இருக்கிறது. மேலும், இவர்களுக்கு (மறுமையில்) உதவியாளர்கள் (யாரும்) இல்லை.

காஃபிர்கள் கியாமத்து நாளில் தங்கம் பொன்களை வைத்திருப்பார்கள் என்பதும், அவற்றைத் தங்களது குற்றங்களுக்கும் குஃப்ருகளுக்கும் பதிலாகக் கொடுத்து வேதனையை விட்டு விலகிக்

கொள்ள முயலுவார்கள் என்பதும், அவைகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது என்பதும் இந்த ஆயத்தின் கருத்தல்ல. ஆனால், கியாமத்து நாளில் அவர்கள் இதில் எதையும் வைத்திருக்க மாட்டார்கள். என்றாலும், காஃபிர்கள் தங்களுக்குள்ள மிகவும் உயரிய பொருட்களை மிகவும் அதிகமாக வைத்துக் கொள்ளச் சக்தி பெற்று அவற்றைப் பரிகாரமாகக் கொடுக்க முயன்றாலும் அங்கு அவர்கள் வேதனையை விட்டுத் தப்பிக் கொள்ள மாட்டார்கள் அதாவது வேதனையை விட்டுத் தப்பித்துக் கொள்ள அவர்களுக்கு அங்கு எந்தவித வழியுமில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

لَن تَنَالُوا الْبِرَّ حَتَّىٰ تُنفِقُوا مِمَّا تُحِبُّونَ ۚ
وَمَا تُنفِقُوا مِن شَيْءٍ فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ

91. நீங்கள் விரும்புவதிலிருந்து (சிலவற்றையேனும்) நீங்கள் செலவு செய்யும் வரை நீங்கள் நன்மையைப் பெறவே மாட்டீர்கள். இன்னும், நீங்கள் எந்த பொருளைச் செலவு செய்தாலும், நிச்சயமாக அதை அல்லாஹ் நன்கு அறிபவன்.

நன்றி யென்பது அல்லாஹு தஆலாவின் ரஹ்மத்தென்னும் கிருபை, அவனது சந்தோஷம், அவனிடமுள்ள சுவர்க்கம், நன்மையான காரியங்களுக்குக் கூலி கொடுத்தல் ஆகியவற்றைக் குறிக்கும்.

இந்த ஆயத்து இறங்கியபோது ஹளரத் அபூ தல்ஹா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "அல்லாஹு தஆலாவின் தூதர் அவர்களே! எனது சொத்துக்களில் எனக்கு மிகவும் பிரியமானது எனது தோட்டம்தான். அதனை உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்" என்று கூறினார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹளரத் அபூ தல்ஹா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைப் பார்த்து "சோபனம், சோபனம் அது

உங்களுக்குச் சிறந்த சொத்து; அதனை உமது உறவினர்களில் உமக்கு நெருங்கி இருப்பவர்களுக்குப் பங்கு வைத்துக் கொடுக்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறேன்" என்று கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளைப்படி அதனை அவர் தமது உறவினர்களுக்கு பங்கு வைத்துக் கொடுத்து விட்டார்.

"நன்றியை விரும்புபவர் தனக்குப் பிரியமானதிலிருந்து சிலதைச் செலவு செய்யட்டும். நன்றியுடைய நாயனை விரும்புபவர் தனக்குப் பிரியமான எல்லாவற்றையும் செலவு செய்யட்டும்" என்று குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

كُلُّ الطَّعَامِ كَانَ حِلًّا لِّبَنِي إِسْرَائِيلَ إِلَّا مَا حَرَّمَ
إِسْرَائِيلُ عَلَىٰ نَفْسِهِ مِن قَبْلِ أَن تُنَزَّلَ التَّوْرَاةُ ۗ
قُلْ فَأْتُوا بِالتَّوْرَاةِ فَاتْلُوهَا إِن كُنتُمْ صَادِقِينَ

92. தவ்ராத் (வேதம்) இறக்கப்படுவதற்கு முன் இஸ்ராயீல் (யாக்கூப் நபி அவர்கள்) தமக்கு விலக்கிக் கொண்டதைத் தவிர (ஏனைய) எல்லா உணவும் இஸ்ராயீலின் சந்ததியினருக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. (இப்ராஹீம் நபி அவர்கள் ஒட்டகை மாமிசத்தையும் அதன் பாலையும் அருந்துவதில்லை என்று கூறும் யூதர்களாகிய) "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் தவ்ராத் (வேதத்)தைக் கொண்டு வந்து அதை ஓதிக் காண்பியுங்கள்" என்று (நபியே) நீர் கூறுக.

யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "நீர் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இருப்பதாகச் சொல்லுகிறீர். ஆனால், இப்ராஹீம் ஒட்டகை இறைச்சியையும் அதன் பாலையும் அருந்த மாட்டார். அவ்வாறு இருக்க நீர் அவற்றைப் புசிக்கிறீரே" என்று வினவினார்கள். அதற்கு, நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் "இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவற்றை உண்ணாமலிருக்கவில்லை" என்று கூறினார்கள். அதற்கு "யூதர்கள் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் நூஹு அலைஹிஸ் ஸலாம் ஆகிய நபிமார்கள் ஹராமாக்கிக் கொண்டதைத்தான் நாங்களும் ஹராமாக்கிக் கொண்டோம்" என்றார்கள். அதற்கு மறுமொழியாக அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை இறக்கி இருக்கிறான். இந்த ஆயத்து இறங்கிய பின் அவர்கள் இது சம்மந்தமாகத் தர்க்கம் செய்ய இயலாமலாகி விட்டார்கள்.

ரிவாயத்து:- "அல்லாஹு தஆலா தமக்குப் பன்னிரண்டு மக்களைக் கொடுத்து, தமது மக்களுடன் பைத்துல் முகத்தஸுக்கு நலமுடன் வந்து சேர்ந்தால் அவர்களில் கடைசியான வரை அறுத்துக் குர்பானி செய்கிறேன்" என்று ஹளரத் யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நேர்ச்சை செய்து கொண்டார்கள். அதன்படி அல்லாஹு தஆலா அவருக்குப் பன்னிரண்டு மக்களைக் கொடுத்தான். என்றாலும், அவருடைய கடைசிப் புதல்வரை தனக்காக அவர் அறுத்துக் குர்பானி செய்வதை அல்லாஹு தஆலா விரும்ப வில்லை. ஆதலால், அவருக்கு அர்குன்னிஸா என்னும் ஒருவகை நரம்பு நோயை இறைவன் உண்டாக்கினான். இதனால் அவர் தமது கடைசிப் புதல்வரை அறுத்துக் குர்பானி செய்வதிலிருந்து விடுபட்டார். ஆனால், அவருக்கு இந்த நோயால் பெருங் கஷ்ட முண்டாயிற்று. இரவு நேரங்களில் அவர் இந்நோயின் வலியினால் தூங்குவதில்லை. அப்பொழுது அவர் "எனக்கு இந்நோய் குணமடைந்தால் எனக்கு மிகப் பிரியமான உணவை உண்ணமாட்டேன்" என்று சத்தியம் செய்து கொண்டார். ஆகவே, அதன்படி அவர் தமக்குப் பிரியமான உணவுகளாகிய ஒட்டகையின் மாமிசத்தையும் அதன் பாலையும் அருந்தாமலிருந்தார். இவ்விஷயத்தைக் குறித்துத்தான் இந்த ஆயத்தில் إِلَّا مَا حَرَّمَ إِسْرَائِيلُ عَلَىٰ نَفْسِهِ **இஸ்ராயீல் தம்மீது விலக்கிக் கொண்டதைத் தவிர** என்று ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ராயீல் என்பது ஹளரத் யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களது பெயர்.

தவ்ராத் வேதம் இறங்குவதற்கு முன் அவர்களுக்கு எல்லா உணவுகளும் ஹலாலாக இருந்தன என்பதும், அவர்கள் அக்கிரமம்

செய்து கொண்டும் அல்லாஹ்வின் கட்டளைகளை அடிக்கடி மீறிக் கொண்டும் இருந்ததால் சில உணவுப் பொருள்கள் அவர்களுக்கு ஹராமாக்கப்பட்டன. அவ்வாறு இருக்க இப்ராஹீம் அலைஹிஸ ஸலாம் நூஹு அலைஹிஸ்ஸலாம் ஆகிய நபிமார்கள் காலத்தில் அவைகள் ஹராமாக்கப்பட்டிருந்தன என்பது ஒரு போதும் பொருந்தாது என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

فَمَنِ افْتَرَىٰ عَلَى اللَّهِ الْكَذِبَ مِن بَعْدِ ذَٰلِكَ

فَأُولَٰئِكَ هُمُ الظَّالِمُونَ ﴿٩٤﴾

93. ஆதலால், எவர்கள் இதற்குப் பின்னும் அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்கின்றனரோ அவர்கள்தாம் அநியாயக்காரர்கள்.

தவ்ராத் வேதத்தைக் கொண்டு வந்து ஓதிக் காண்பியுங்கள் என்று கூறிய பிறகும் ஒட்டகையின் மாமிசம் அல்லது அதன் பால் ஆகியவைகள் முற்காலத்து நபிமார்கள் மீது ஹராமாக இருந்தன என்ற விபரம் தவ்ராத் வேதத்தில் இருப்பதாக கூறுபவர் பொய் உரைக்கிறார் என்பதும், அவ்வாறு அல்லாஹ்வின் மீது எவர் பொய்யுரைத்தாலும் அவர்கள் அநியாயக்காரர்களாவார்கள் என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

قُلْ صَدَقَ اللَّهُ ۗ فَاتَّبِعُوا مِلَّةَ إِبْرَاهِيمَ حَنِيفًا ۖ

وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ ﴿٩٥﴾

94. "அல்லாஹ் உண்மை சொல்லி இருக்கிறான்; எனவே, நீங்கள் (தவறை விட்டு உண்மையான இஸ்லாத்தின் பக்கம்) திரும்பி இருக்கின்ற இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் பின்பற்றுங்கள்; மேலும், அவர் இணைவைப்பவர்களில் உள்ளவராக இருக்கவில்லை" என்று (நபியே நீர் அவர்களுக்குக்) கூறும்.

ஸதகல்லாஹு அதாவது அல்லாஹ் உண்மை கூறினான் என்பதற்கு ஹராமான விஷயத்தில் அல்லாஹு தஆலா இறக்கி வைத்ததுதான் உண்மை என்று தெரிந்து விட்டது அல்லது நிரூபிக்கப்பட்டு விட்டது என்பது கருத்து.

மில்லத இப்ராஹீம் அதாவது இப்ராஹீமுடைய மார்க்கம் என்பது இஸ்லாம் மார்க்கமேயாகும். ஏனெனில், இதுதான் அசலில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மார்க்கமாக இருக்கிறது.

وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ இன்னும் அவர் முஷ்ரிக்குகளில் உள்ளவராக இருக்கவில்லை என்பது யூதர்கள் இணை வைக்கிறார்கள் என்பதையும் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் யூதர்களுக்கு எந்தவிதச் சம்மந்தமுமில்லை என்பதையும் அறிவிக்கிறது. ஏனெனில், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு ஸுப்ஹானஹு வத்தஆலாவைத் தவிர மற்றவைகளை வணங்குவதை விட்டு நீங்கி ஒரே இறைவனை வணங்குவதின் பால் திரும்பும்படி மனிதர்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

إِنَّ أَوَّلَ بَيْتٍ وُّضِعَ لِلنَّاسِ لَلَّذِيْ بِبَكَّةَ مُبٰرَكًا وَّهُدًى لِّلْعٰلَمِيْنَ

95. நிச்சயமாக மனிதர்களுக்கு (அவர்கள் வணங்குவதற்காக) முதன்மையாக வைக்கப்பெற்ற (இறை) ஆலயமானது பக்காவில் இருப்பதுதான். அது பாக்கியமுடையதாகவும் உலகத்தாருக்கு நேர்வழி காட்டியாகவும் (இருக்கிறது).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கஃபாவைக் கிப்லாவாக ஆக்கி, அதன் திசையை நோக்கி முஸ்லிம்கள் தொழுத போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நுபுவ்வத்தைக் குறித்து யூதர்கள் குறை கூறினர். "பைத்துல் முகத்தஸ்தான் கஃபாவைப் பார்க்கினும் மேலானது; முன்னோக்கித் தொழுவதற்கு அதுதான் மிகவும் அருகதையானது,

கஃபாவிற்கு முன்னதாகவே இதுதான் கட்டப்பட்டது; இதுதான் மஹ்ஷர் மைதானமுள்ள நாடு; நபிமார்கள் ஹிஜ்ரத்துச் செய்த இடம்; அவர்களுக்குக் கிப்லாவாக இருந்தது; அகிலத்தாருக்கு இறைவன் பரக்கத்துச் செய்த பரிசுத்தமான இடம்; ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறைவனுடன் பேசிய இடமாகிய தூர்ஸீனாமலை இந்நாட்டில் தானிருக்கிறது; ஆகவே, இதனை விட்டு விட்டு கஃபாவின் பக்கம் கிப்லாவை மாற்றியது தவறு" என்று யூதர்கள் கூறினார்கள். அவர்களது இவ்வாதத்திற்கு மறுமொழியாக இந்த ஆயத்தை இறைவன் இறக்கி வைத்தான்.

பக்கா என்பது திருமக்காவின் பெயர். மனிதர்கள் இங்கு நெருக்கமாகக் குடி இருந்ததால் இந்த ஊருக்கு இந்தப் பெயர் வந்தது.

ரிவாயத்து:- மனிதர்களது வணக்கத்திற்காகப் பூமியில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது வீட்டைப் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவப்பட்டார்கள். அதற்கவர்கள் "மஸ்ஜிதுல் ஹராம், பின்னர் பைத்துல் முகத்தஸ்" என்று கூறினார்கள். இவ்விரண்டிற்கு மிடையில் எத்தனை காலம் என்று வினவப்பட்டது. அதற்கு "நாற்பது வருடங்கள்" என்று கூறினார்கள்.

ரிவாயத்து:- அல்லாஹு தஆலா அர்ஷுக்குக்கீழ் ஒரு வீட்டை ஏற்படுத்தினான். அதற்கு பைத்துல் மஃமூர் என்று பெயர். அதனைத் தவாஃபு செய்யும்படி மலக்குகளை ஏவினான். பிறகு, அதனைப் போல் பூமியில் ஒரு வீட்டைக் கட்டும்படி பூமியில் நியமிக்கப்பட்ட மலக்குகளுக்குக் கட்டளை யிட்டான். அதன்படி கட்டினார்கள். பின்னர், வானிலுள்ளவர்கள் பைத்துல் மஃமூரைத் தவாஃபு செய்வது போல் அதனை அதாவது பூமியில் கட்டப்பட்ட வீட்டை தவாஃபு செய்யும்படி பூமியிலுள்ள மலக்குகளுக்குக் கட்டளை யிட்டான்.

ரிவாயத்து:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சிருஷ்டிப்பதற்கு முன்னர் இதனை மலக்குகள் கட்டினார்கள். பின்னர், பூமியில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கிய போது "இந்த வீட்டைச் சுற்றி நீர் தவாஃபு செய்ய வேண்டும்,

நாங்கள் உமக்கு முன்னர் இரண்டு ஆயிரம் வருடங்களாக தவாஃபு செய்து கொண்டிருந்தோம்" என்று அவருக்கு மலக்குகள் கூறினர். அதன்படி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தவாஃபு செய்தார்கள். அவருக்குப் பின்னருள்ளவர்களும் ஹளரத் நூஹு அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலம்வரை தவாஃபு செய்து கொண்டிருந்தனர். பின்னர், அல்லாஹு தஆலா பிரளயத்தைவிட நாடிய போது நான்காவது வானத்திற்கு அதனை உயர்த்திக் கொண்டான். இதுதான் பைத்துல் மஃமூர். இது கஃபாவிற்கு நேரிலிருக்கிறது. வானங்களிலுள்ள மலக்குகள் இதனை தவாஃபு செய்கின்றனர்.

ரிவாயத்து:- இதுதான் முதலாவது வீடு. இதனை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமியில் கட்டினார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கஃபாவைக் கட்டினார்கள் என்று கூறுவது அவர்தான் முதல் முதலாகக் கட்டினார்கள் என்ற கருத்திலன்று. அதன் அஸ்திவாரங்களை உயர்த்தினார்கள் என்ற கருத்திலேயாகும். கஃபா இருந்த இடம் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்து வெள்ளத்தில் அழிந்துவிட்டது. ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் இறைவன் அனுப்பும் வரை அந்த இடம் தரை மட்டமாகவே இருந்தது. ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதுவிருந்த இடத்தை அவருக்கு காண்பித்து அதனைக் கட்டும்படி கட்டளையிட்டார். எனவே, கஃபாவைக் கட்டும்படி ஏவியவன் அல்லாஹுதஆலாவாகவும், அதனை அறிவித்துத் திட்டம் போட்டுக் கொடுத்தவர் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகவும், அதன் அஸ்திவாரத்தை உயர்த்திக் கட்டியவர் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகவும், அவருக்கு உதவியாக இருந்த புதல்வர் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகவும் இருப்பதால்தான் கஃபாவைப் பார்க்கினும் மகத்துவமுள்ளது இவ்வுலகில் வேறு கட்டிடமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

فِيهِ آيَاتٌ بَيِّنَاتٌ مَقَامُ إِبْرَاهِيمَ ۖ وَمَنْ دَخَلَهُ

كَانَ آمِنًا ۗ وَلِلَّهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا ۚ وَمَنْ كَفَرَ فَإِنَّ اللَّهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِينَ ﴿٩٧﴾

96. அதில் தெளிவான அத்தாட்சிகள் இருக்கின்றன. இப்ராஹீம் நின்ற இடம் (அவற்றில் ஒன்றாகும்). இன்னும், எவர் அதில் நுழைகின்றாரோ அவர் அச்சம் தீர்ந்தவராகி விடுகிறான். மேலும், அவ்வீட்டை அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜுச் செய்வது மனிதர்களின் மீது – அங்கு செல்ல சக்தியுள்ளவர் மீது – கடமையாகும். இன்னும், எவன் (இதை) நிராகரிக்கின்றானோ (அதனால் அல்லாஹ்வுக்கு எந்தவித நஷ்டமுமில்லை). நிச்சயமாக அல்லாஹ் உலகத்தா(ர் அனைவ)ரை விட்டுத் தேவையற்றவன்.

பறவைகள் கஃபாவிற்கு நேராக மேலில் பறப்பதில்லை. ஹரம் ஷரீஃபில் இருக்கும் புறாக்கள் உயரத்தில் பறந்து கஃபாவிற்கு நேராக வந்தால் அதற்கு மேலே பறக்காமல் வலம், இடம் ஆகிய இரண்டு புறங்களில் ஒரு புறம் சாய்ந்து கொள்ளுகின்றன. பறவைகளைப் பிடித்துக் கொன்று தின்னும் பிராணிகள் அங்கு பறவைகளைக் கண்டால் வாய் கட்டி நின்று விடுகின்றன. கஃபாவை இடித்து விட வேண்டும் அல்லது சேத முண்டாக்க வேண்டும் அல்லது அவமரியாதை செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தால் வருகிற வம்பர்கள் எல்லோரும் நசுக்கப்பட்டு போய் விடுகிறார்கள் என்று ரிவாயத்துகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றைக் குறித்துத்தான் فِيهِ آيَاتٌ بَيِّنَاتٌ "அதில் தெளிவான அத்தாட்சிகளிருக்கின்றன" என்று சொல்லப்பட்டது.

مَقَامُ إِبْرَاهِيمَ "இப்ராஹீம் நின்ற இடம்" என்பது கஃபா ஷரீஃபை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயர்த்திக் கட்டிய போது ஒரு கல்லின் மீது ஏறி நின்று கொண்டு அதனைக் கட்டினார்கள். அந்தக் கல்லின் மீது ஹளரத் இப்ராஹீம்

அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலடி பதிந்து அடையாளமாக ஏற்பட்டு விட்டது. இந்தக் கல்லைத்தான் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது. தவிர ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது புதல்வர் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்ப்பதற்காக ஷாம் தேசத்தில் இருந்து மக்கமா நகருக்கு வந்தார்கள். அப்பொழுது ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வேட்டைக்குச் சென்றிருந் தார்கள். ஆனாலும், ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மனைவி ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை இன்னார் என்று தெரிந்து கொள்ளாமலிருந்தும் அவரை வாகனத்தை விட்டு இறங்கும்படியும் உணவருந்தும் படியும் கூறினார்கள். எனினும், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஷாம் தேசத்தை விட்டுப் புறப்படும் போதே தமது மனைவியான ஸாரா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களிடம், மக்காவில் இறங்குவதில்லையென்றும், இரவு தங்குவதில்லை யென்றும் கூறி வந்ததால் அங்கு இறங்கவில்லை. ஆதலின், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை வாகனத்தின் மீதே இருந்து கொள்ளச் செய்து, ஒரு கல்லை எடுத்துக் கொண்டு வந்து, அவருடைய ஒரு காலுக்குக் கீழ் போட்டு, அதன் மீது காலை வைக்கச் செய்து அந்தப் பக்கத்தைக் கழுவி விட்டார்கள். பிறகு மற்றொரு பக்கத்தில் அந்தக் கல்லை எடுத்துப் போட்டு, மற்றொரு காலை அதன் மீது வைத்துக் கொள்ளச் செய்து, அந்தப் பக்கத்தைக் கழுவி விட்டார்கள். இவ்வாறு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை வாகனத்தில் உட்கார வைத்துக் கொண்டே அவர்களது புதல்வரான ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மனைவி உபசரித்தார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது புதல்வரைப் பார்க்காமலே அங்கிருந்து சென்று விட்டதுடன், போகும் போது தமது புதல்வர் வரும்போது, தமது ஸலாமைச் சொல்லி இப்பொழுது வாசற்படி சரியாக இருக்கிறது என்று சொல்லும் படியும் கட்டளை யிட்டுச் சென்றார்கள். இந்தக் கல்தான் "மகாமு இப்ராஹீம்" (இப்ராஹீம் நின்ற இடம்) என்றும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

وَمَنْ دَخَلَهُ كَانَ آمِنًا **"இன்னும் எவர் அதில் நுழைகின்றாரோ அவர் அச்சந் தீர்ந்தவராகி விடுகிறார்"** என்று ஹரம் ஷரீபைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது. ஒருவர் ஹரமுக்கு வெளியில் ஒரு குற்றத்தைச் செய்து விட்டு ஹரமுக்குள் ஓடி வந்து விட்டால் அவரை பிடிக்க மாட்டார்கள். "ஹில்லில் அதாவது ஹரமுக்கு வெளியில் கிஸாஸினாலோ ஒருவர் கொல்லப்படத் தகுந்தவராக இருந்து ஹரமுக்குள் ஓடி வந்து விட்டால் அவரை அங்கு பிடிக்கக் கூடாது. ஆனால், அவருக்கு தண்ணீர் கிடைக்காமலும், உணவு கிடைக் காமலும், அவரிடம் வியாபாரம் முதலியவைகள் செய்யாமல் இருந்து அவரைத் தானாக வெளியேறும்படியும் நிர்ப்பந்திக்க வேண்டும்" என்று ஹளரத் இமாம் அபூ ஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆனால், ஒருவர் ஹரமுடைய எல்லைக்குள்ளாகவே கொலை அல்லது திருடினால் அதற்குரிய தண்டனையை நிறை வேற்றலாம். ஏனெனில், **இன்னும் மஸ்ஜிதுல் ஹராமில் உங்களை அவர்கள் வெட்டாமலிருக்கும்வரை அதில் அவர்களை நீங்கள் வெட்டாதீர்கள். ஆனால், உங்களை அவர்கள் வெட்டினால் அவர்களை நீங்களும் வெட்டுங்கள்** (சூரத்துல் பக்கரா 191) என்று அல்லாஹு தஆலா கூறி இருப்பதற்கிணங்க மஸ்ஜிதுல் ஹராமுக்குள் நம்மை வெட்டுபவர்களை நாமும் வெட்டுவதற்கு அல்லாஹு தஆலா அனுமதி யளித்திருக்கிறான். இதுபோல ஹத்துடைய சட்டங்களையும் அமல் படுத்தலாம். ஆனால், ஹரமுக்கு வெளியில் குற்றம் செய்துவிட்டு ஹரமுக்குள் வந்து விட்டால் அவனை ஹரமுக்குள் பிடிக்கக் கூடாது.

"எனது றப்பே! இதனை அச்சந்தீர்ந்த நகரமாக ஆக்குவாயாக" (சூரத்துல் பக்கரா 126) என்று ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் துஆக் கேட்டிருக் கிறார்கள்.

தவிர, "எவர் அதில் நுழைகிறாரோ அவர் நரகை விட்டு அச்சந் தீர்ந்தவராகி விடுகிறார்" என்றும் இந்த ஆயத்திற்குச் சிலர் விரிவுரை செய்திருக்கிறார்கள்.

ஹதீஸ்:- "எவர் இரண்டு ஹரம்களில் ஒன்றில் மரணிக்கிறாரோ அவர் கியாமத்து நாளில் அச்சந்தீர்ந்தவராக எழுப்பப்படுவார்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- எவர் பகலில் ஒரு ஸாஅத்து நேரம் மக்கத்து உஷ்ணத்தைப் பொறுத்துக் கொள்கிறாரோ அவரை விட்டு ஜஹன்னம் என்னும் நரகம் இருநூறு வருடத்துத் தொலை தூரத்திற்கு அகன்று விடுகிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

ரிவாயத்து:- "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹுஜூன் என்ற இடத்தில் நின்று கொண்டு இந்த இடத்திலும் இந்த ஹரமிலும் இருப்பவர்களில் 70 ஆயிரம் பேரை அல்லாஹு தஆலா எழுப்புவான். அவர்களது முகங்கள் பூரணச் சந்திரனைப் போலிருக்கும். கேள்வி கணக்கு இல்லாமலே அவர்கள் சுவர்க்கம் செல்வர். அவர்களில் ஒவ்வொருவரும் 70 ஆயிரம் பேருக்கு ஷஃபாஅத்துச் செய்வார்கள். அவர்களது முகம் பூரணச் சந்திரனைப் போலிருக்கும்" என்று கூறினார்கள். அப்போது ஹுஜூன் என்ற அந்த இடத்தில் ஒரு கப்ருகூட இருக்கவில்லை என்று இப்னு மஸ்ஊது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

அன்னாஸ் அதாவது மனிதர் என்றது மூமின்களைக் குறிக்கும், காஃபிர்களைக் குறிக்காது. ஏனெனில், ஷரீஅத்துடைய கிரியைகளை நிறைவேற்றும்படி காஃபிர்கள் ஏவப்படவில்லை என்று ஹனஃபி மதுஹபில் சொல்லப்பட்டிருக்கிறது. அனால், ஷாஃபிஈ மதுஹபில் காஃபிர்களும் ஷரீஅத்தின் கிரியைகளைச் செய்யும்படி ஏவப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹிஜ்ஜு என்பதும் **ஹஜ்ஜு** என்பதும் ஒன்றேயாகும். ஹஜ்ஜு என்று ஹிஜாஸ் வாசிகள் கூறுவர். ஹிஜ்ஜு என்று நஜத் வாசிகள் கூறுவர்.

مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا "அங்கு செல்லச் சக்தியுள்ளவர்கள் மீது" என்ற இந்த வாக்கியம் ஹஜ்ஜு எவருக்குக் கடமையாக இருக்கிறது என்பதை அறிவிக்கிறது. இதற்கு முந்திய வசனத்தில் பைத்துல்லாவை ஹஜ்ஜு செய்வது மனிதர்கள் மீது கடமையாக இருக்கிறது என்று கூறப்பட்டுள்ள விதியை இந்த வசனம் விபரித்துக் கூறுகிறது. அதாவது மனிதர்களில் அங்கு செல்லச் சக்தி பெற்றவர்களுக்குத்தான் ஹஜ்ஜுச் செய்வது கடமை என்பதை அறிவிக்கிறது.

وَمَنْ كَفَرَ இன்னும் எவர் நிராகரிக்கின்றாரோ என்பது ஹஜ்ஜுக்குச் செல்லச் சக்தி இருந்தும் ஹஜ்ஜு செய்யாமல் இருப்பவர்களைக் குறிக்கிறது. ஏனெனில், இவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்லச் சக்தி இருந்தும் ஹஜ்ஜு செய்யாமலிருந்து விட்டால் இவர்கள் குஃப்ருக்கு நெருங்கி விட்டார்கள் என்பதையும், ஹஜ்ஜை நிராகரிப்பவர்கள் செய்வது போன்ற காரியத்தைச் செய்து விட்டார்கள் என்பதையும் அறிவிக்கிறது.

ஹதீஸ்:- "வெளிரங்கமான தேவை அல்லது தடை செய்யும்படியான நோய் அல்லது அக்கிரமக்காரரான அரசன் ஆகிய தடைகளில் எதுவும் ஒருவருக்கு இல்லாமலிருந்து, அவர் ஹஜ்ஜுச் செய்யாவிடில் அவன் நாடினால் யூதராக அல்லது கிறிஸ்துவராக அவர் மரணிப்பார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

யூதர்களும் கிறிஸ்தவர்களும்தான் ஹஜ்ஜையும், கஃபாவின் சிறப்பையும் விரும்புவதில்லை. ஆதலால்தான் அவ்விரு கூட்டத்தினரையும் இந்த ஹதீஸில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- "கிரியைகளில் மிகவும் மேலானது அல்லாஹு தஆலாவையும் அவனது ரசூலையும் கொண்டு ஈமான் கொள்ளல், பின்னர், ஃபீஸபீலில் ஜிஹாது செய்தல், பின்னர் மப்ரூரான ஹஜ்ஜு" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

பாவங்கள் மன்னிக்கப்படுவதும், அதன் மூலம் சுவர்க்கத்தில் பிரவேசிப்பதும்தான் ஹஜ்ஜு மப்ரூரின் பயன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹஜ்ஜுக்குச் சென்றவன் ஹஜ்ஜுச் செய்து விட்டு

இவ்வுலகத்தைத் துறந்த ஜாஹிதாகவும் மறுமையின்பால் ஆசை கொண்ட ராகிபாகவும் திரும்ப வருவதுதான் ஹஜ்ஜே மப்ரூருக்கு அடையாளம் என்று சில மஷாயிகுகள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- ஒருவர் உடலுறவு கொள்வதை விட்டும் ஃபாஸிக் தனத்தை விட்டும் பேணினவனாக ஒரு ஹஜ்ஜுச் செய்தால் அவர் தனது பாவத்தை விட்டு அன்று பிறந்தவரைப் போல் சுத்தமாகி விடுகிறார் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். பைத்துல்லாவின் பால் நடந்த இரண்டு கால்களையும் இறைவன் நெருப்பில் வேதனை செய்யமாட்டான்.

“ஹஜ் அல்லாஹுதஆலாவையே நாடுவதையும் தேடுவதையும் அறிவிக்கின்றது. இஸ்லாத்திலுள்ள இதர ருக்னுகள் அவ்வாறில்லை. ஏனெனில், ‘இந்த வீட்டை அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜு செய்வது மனிதர்கள் மீது கடமையாகும்’ என்று இறைவன் கூறி இருக்கிறான். வேறு எந்த ருக்னுகள் வாஜிபுகளின் இறுதியிலும் இறைவன் இவ்வாறு கூறவில்லை. எனவே, இந்த வணக்கத்தின் முக்கிய நோக்கம் அல்லாஹுதஆலாதான் என்பதும், இதர வணக்கங்களின் முக்கிய நோக்கம் ஈடேற்றம் (குர்பத்) என்னும் அந்தஸ்துகள் முதலியவைகள் என்றும் தெரியவருகிறது” என்று நஜ்முத்தீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

قُلْ يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لِمَ تَكْفُرُونَ بِـَٔايَٰتِ ٱللَّهِ وَٱللَّهُ شَهِيدٌ عَلَىٰ مَا تَعْمَلُونَ ۝

97. “வேதத்தை யுடையவர்களே! நீங்கள் ஏன் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றீர்கள்? மேலும், அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றின் மீது சாட்சியாக இருக்கின்றான்” என்று (நபியே நீர்) கூறுவீராக.

யூதர்கள் கிறிஸ்துவர்கள் வேதம் என்று சொல்லிக் கொண்டு தாங்களாக எழுதிக் கொண்டதால் அவர்களுக்கு மட்டும் **வேதக்காரர்கள்** என்ற பெயர் வந்தது.

10

அல்லாஹ்வின் ஆயத்துகள் என்பன ஹஜ்ஜு சம்மந்தமாக திருக்குர்ஆனில் வந்த வசனங்களுக்கும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நுபுவ்வத்தைக் குறித்து தவ்ராத், இன்ஜில் வேதங்களில் வந்திருப்பவைகளுக்கும் பொதுவானவை.

قُلْ يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لِمَ تَصُدُّونَ عَن سَبِيلِ ٱللَّهِ مَنْ ءَامَنَ تَبْغُونَهَا عِوَجًا وَأَنتُمْ شُهَدَآءُ وَمَا ٱللَّهُ بِغَٰفِلٍ عَمَّا تَعْمَلُونَ ۝

98. “வேதத்தையுடையவர்களே! நீங்களோ, (அல்லாஹ்வின் மார்க்கம் உண்மையானதுதான் என்பதற்குச்) சாட்சிகளாக இருந்து கொண்டு அல்லாஹ்வின் பாதையை விட்டு - அதற்குக் கோணலைத் தேடியவர்களாய் - விசுவாசங் கொண்டவர்களை (இஸ்லாத்தில் சேரவிடாமல்) ஏன் தடுக்கின்றீர்கள்? ஆனால், நீங்கள் செய்வதைப் பற்றி அல்லாஹ் பாராமுகமாக இல்லை” என்று (நபியே நீர்) கூறும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டு இஸ்லாத்தில் சேர்ந்துவிட நாடுகிறவர்களை வேதக்காரர்கள் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று விலக்கி நிறுத்திவிட முயன்றதுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்த வர்ணனைகள் தங்கள் வேதங்களில் இல்லை யென்றும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிய முன்னறிவிப்புகளில் இல்லை யென்றும் அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். அத்துடன் மூமின்களிடமும் சந்தேகமான எண்ணங்களை உண்டாக்கி விடவும் முயன்றனர். இதனைக் குறித்தும் இந்த ஆயத்தில் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِن تُطِيعُوا۟ فَرِيقًا مِّنَ ٱلَّذِينَ

أُوتُوا الْكِتٰبَ يَرُدُّوْكُمْ بَعْدَ اِيْمَانِكُمْ كٰفِرِيْنَ ۝

99. விசுவாசங் கொண்டவர்களே! வேதம் கொடுக்கப்பட்ட (யூத கிருஸ்த)வர்களிலிருந்து ஒரு கூட்டத்தினருக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால் உங்களை அவர்கள் உங்கள் விசுவாசத்திற்குப் பின்பும் நிராகரிப்பவர்களாக மாற்றி விடுவார்கள் (என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்).

மதீனமா நகரிலிருந்த அவ்ஸ் கஜ்ரஜ் என்ற கோத்திரக்காரர்கள் ஒரு தந்தையின் மக்களாக இருந்தும் அவர்களுக்கிடையில் பல காலம் போர் நடந்தது. பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனமா நகருக்கு வரவே இக்கோத்திரத்தார் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி விட்டார்கள். இதன் பரக்கத்தால் அவர்கள் போரிடுவதை விட்டு நீங்கி சகோதரர்களைப் போலாகி விட்டார்கள். ஒரு முறை இவ்விரு கோத்திரத்தாரும் ஒரு மஜ்லிஸில் கூடி இருப்பதை ஷாஸுப்னு கைஸ் என்ற யூதர் பார்த்து பொறாமை கொண்டு அவ்விரு கூட்டத்தாரும் 'ஜங்கே புகாது' என்ற போரில் ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டதைக் குறித்துப் பாடப்பட்ட செய்யுள்களை ஒருவனிடம் கொடுத்து அவர்களிடம் சென்று அவற்றைப் பாடும்படி செய்தான். அந்தப் போரில் அவ்ஸ் கூட்டத்தினர்தான் வென்றனர். இரண்டு கட்சியிலுமுள்ள முக்கிய மானவர்கள் கொல்லப்பட்டனர். ஆகவே, இந்தச் செய்யுள்களைப் படித்தபோது அவர்கள் ஒருவருக்கொருவர் கோபமாகி சச்சரவு செய்து கொண்டனர். இந்தச் செய்தியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிந்து அங்கு சென்று அவ்விரு கூட்டத்தாருக்கு மிடையில் சமாதானம் செய்து வைத்தார்கள். ஷாஸுப்னு கைஸ் என்ற யூதரின் இந்தச் செய்கையைக் குறித்து இந்த ஆயத்து இறங்கியது என்று இக்ரிமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

வேதக்காரர்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசித்து இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியர்களும் இருப்பதால் இந்த ஆயத்தில் **வேதம் கொடுக்கப்பட்டவர்களிலிருந்து ஒரு கூட்டத்தினர்** என்று கூறப்பட்டது.

وَكَيْفَ تَكْفُرُوْنَ وَاَنْتُمْ تُتْلٰى عَلَيْكُمْ اٰيٰتُ اللّٰهِ
وَفِيْكُمْ رَسُوْلُهٗ ؕ وَمَنْ يَّعْتَصِمْ بِاللّٰهِ فَقَدْ هُدِيَ
اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ۝

100. மேலும், நீங்களோ அல்லாஹ்வின் வசனங்கள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டு, இன்னும் உங்களில் அவனது (இறைவனது) தூதர் (நபி) இருக்கிற நிலையில் எவ்வாறு நீங்கள் நிராகரிப்பீர்கள்? இன்னும், எவன் அல்லாஹ்வைப் பலமாகப் பற்றிக் கொண்டானோ அவன் நிச்சயமாக நேரான வழியின் பால் சேர்க்கப்பட்டு விட்டார்.

இந்த ஆயத்தில் **எவ்வாறு நீங்கள் நிராகரிப்பீர்கள்** என்று கூறி இருக்கிற வினா விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காகக் கூறப் பட்டதல்ல. காஃபிராக மாட்டீர்கள் என்பதை அறிவிப்பதற்காகவே யாகும்.

அல்லாஹு தஆலாவை கெட்டியாகப் பிடித்துக் கொள்வது அவனது சத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாத்தில் உறுதியாக நிலைத் திருப்பதேயாகும்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ
وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ ۝

101. விசுவாசங் கொண்டவர்களே! அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; நீங்களோ முஸ்லிம் (வழிப்பட்டவர்)களாக அல்லாமல் மரணமடைய வேண்டாம்.

அல்லாஹு தஆலாவிற்கு மாறு செய்யாமல் அவனுக்கு

வழிப்பட வேண்டும், நன்றி செலுத்த வேண்டும், அவனை மறக்காமல் திக்ரு செய்ய வேண்டும் என்பது يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ "ஈமான் **கொண்டவர்களே அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்**" என்ற ஆயத்தின் கருத்தாகும். இந்த ஆயத்து இறங்கிய போது தோழர்கள் "அல்லாஹ்வுடைய ரசூலே! இதற்கு யார் சக்தி பெற முடியும்" என்று கூறினார்கள். இந்த ஆயத்தின் சட்டத்தை இதற்குப் பிறகு இறங்கிய **ஆகவே அல்லாஹ்வை நீங்கள் இயன்ற வரை பயந்து கொள்ளுங்கள்** (சூரத்துத் தகாபுன் 16) என்ற ஆயத்து மாற்றி விட்டது.

وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ "**நீங்கள் முஸ்லிம்களாக இல்லாமல் நிச்சயமாக நீங்கள் மரணிக்க வேண்டாம்**" என்ற ஆயத்திற்கு "இஸ்லாத்தை விட்டு மாறாமல் மரணிக்கும்வரை அதிலேயே உறுதியாக இருக்க வேண்டும்" என்பது கருத்து.

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا ۚ وَاذْكُرُوا نِعْمَتَ اللَّهِ عَلَيْكُمْ إِذْ كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُمْ بِنِعْمَتِهِ إِخْوَانًا وَكُنْتُمْ عَلَىٰ شَفَا حُفْرَةٍ مِنَ النَّارِ فَأَنْقَذَكُمْ مِنْهَا ۗ كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَهْتَدُونَ ۝

102. இன்னும், நீங்கள் யாவரும் அல்லாஹ்வின் (வேதமாகிய) கயிற்றைப் பற்றிக் கொள்ளுங்கள்; எனவே, நீங்கள் (குரோதங் கொண்டு) பிரிந்து விடாதீர்கள்; உங்களுக்குக் கிடைத்த அல்லாஹ்வின் அருளை எண்ணிப்பாருங்கள்; நீங்கள் (உங்களுக்குள்) பகைவர்களாக இருந்தபோது (இஸ்லாத்தைக் கொண்டு நேர்வழி காட்டி) உங்களுடைய இருதயங்களுக்குள் அன்பை உண்டு பண்ணினான். ஆகவே, அவனது அருளினால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். மேலும், (இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்) நீங்கள் (நரக) நெருப்புக் கிடங்கின் அருகில் இருந்தீர்கள். அப்பால், உங்களை அதை விட்டுக் காப்பாற்றினான். நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு இம்மாதிரியே அல்லாஹ் உங்களுக்குத் தன் வசனங்களை விவரிக்கின்றான்.

ஹப்லுல்லாஹ் (அதாவது அல்லாஹ்வின் கயிறு) என்பதற்கு தீனுல் இஸ்லாம் அல்லது திருக்குர்ஆன் என்பது கருத்து. இவ்விரண்டும் ஈடேற்றத்திற்குக் காரணமாக இருப்பதால் இவ்விரண்டும் கயிறுக்கு ஒப்பாக இருக்கின்றன. ஒரு மனிதன் கஷ்டமான ஒரு பாதையில் ஏறும் போது அவனது கால் சருகி விழுந்து விடுவான் என்று பயந்தால், அந்தப் பாதையின் இரண்டு ஓரங்களிலும் இரண்டு கயிறுகளின் இரண்டு மூலைகளையும் பலமாகக் கட்டி வைத்துக் கொண்டு, அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு பயமில்லாமல் அப்பாதையில் செல்வான். இதுபோலவே நிரந்தரமான ஈடேற்றத்தையும், அல்லாஹு தஆலாவினது திருப்திகளையும் அளிக்கக் கூடிய பாதையில் ஒருவன் நடந்தால் அவனுடைய கால் சருகிவிடத்தக்க அநேக அபாயங்கள் அவனுக்கு வழியில் ஏற்படும். ஆகவே, அவன் திருக்குர்ஆனையும், ஷரீஅத்தின் சட்டங்களையும் பலமாகப் பிடித்துக் கொள்வானாயின் அந்தப் பாதையிலுள்ள அபாயங்களை விட்டு அவன் தப்பித்துக் கொள்ளலாம்.

அறிந்துகொள்:- மதீனமா நகரில் **அவ்ஸ்** என்றும் **கஜ்ரஜ்** என்றும் இரண்டு கூட்டங்களிருந்தன. அவ்விரு கூட்டத்தாரும் ஒரே தாய்க்கும் தந்தைக்கும் பிறந்தவர்கள். அப்படி இருந்தும் அவர்களுக் கிடையில் வேற்றுமை விரோத முண்டாகி நூற்று இருபது வருட காலமாக போரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதர்களை இஸ்லாமின்பால் அழைத்த காலத்தில் அவர்களில் ஆறுபேர் மக்காவிற்கு வந்தனர். அவர்களையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாமில் அழைத்தார்கள். அவ்வறுவரும் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களை நோக்கி

"நான் நாயனுடைய ரிஸாலத்தை எத்திவைக்கும் விஷயத்தில் எனக்கு நீங்கள் உதவியாக இருப்பீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் "எங்கள் கூட்டத்தினரையும் இந்த மார்க்கத்தினளவில் அழைப்போம். அவர்களும் நம்முடன் சேர்ந்தால் இனி உம்மை விடச் சிறப்பு வேறொருவருக்கு மில்லை" என்று கூறி மதீனா சென்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது புகழ் பரவியது. பிறகு மதீனாவிலிருந்து பன்னிரண்டு பேர் மக்காவிற்கு வந்து இஸ்லாமில் சேர்ந்து திரும்பவும் மதீனா சென்றார்கள். அங்கு இஸ்லாம் நன்றாய் பரவிற்று. திருக்குர்ஆனை அங்குள்ளவர்களுக்குக் கற்றுக் கொடுக்க அவர்கள் ஒருவரை அழைத்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்அபு ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர் கையில் பலர் இஸ்லாமானார்கள். பின்பு மறு வருடம் எழுபது பேர் வந்து இஸ்லாமாகி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மதீனாவிற்கு வரும்படியும், அவர்களுடன் சேர்ந்து பகைவரை வெட்டுவதாகவும் முடிவு செய்து கொண்டு அவர்கள் மதீனாவிற்குத் திரும்பச் சென்று விட்டார்கள். இப்படி அவர்கள் இஸ்லாமானதன் மூலமாக அவர்களுக்கிடையிலிருந்த பகை நீங்கி அவர்கள் ஒருவருக்கொருவர் நேசமாகி உடன் பிறந்த சகோதரர்களைப் போலாகி விட்டார்கள். இதனைக் குறித்துத்தான் இறைவன் இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான். இந்த எழுபது பேர் வந்து விட்டுப்போன பிறகுதான் ஹிஜ்ரத்து ஆரம்பமாயிற்று.

அறிந்துகொள்:- அல்லாஹுதஆலா இந்த ஆயத்திலும் இதற்கு முந்திய ஆயத்திலும் மூமின்களிடம் மூன்று கட்டளைகளை விதித்திருக்கிறான். முதலாவது தக்வா, இரண்டாவது பலமாகப் பிடித்துக் கொள்ளல், மூன்றாவது அவனளித்துள்ள அருட்கொடைகளை எண்ணிப் பார்த்தல், ஏனெனில், மனிதனது செய்கை பயத்தினால் அல்லது ஆசையினால் நிகழுகின்றது. ஆனால், ஆசையைப் பார்க்கினும் பயத்தைத்தான் முற்படுத்த வேண்டும், ஏனெனில் லாபத்தைத் தேடுவதற்கு முன் தீமை வராமல் தடுத்துக் கொள்வதுதான் முதன்மையான காரியம். பின்னர், அல்லாஹ்வின் மார்க்கத்தைப்

பலமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டளைக்கு இந்த தக்வாவைக் காரணமாக ஆக்கி இருக்கிறான். அதற்குப் பிறகு அவனது அருட்கொடைகளைக் கூறி ஆசையுண்டாக்கி இருக்கிறான், ஆகவே அறிவுள்ளவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வணங்குவதும், அவனது கயிற்றைப் பிடித்துக் கொண்டு சன்மார்க்கத்தையும் தக்வாவையும் விட்டுப் பிரிந்து போகாமலிருப்பதும் அவசியமாகும்.

وَلْتَكُن مِّنكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ
بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ ۚ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ ۝

103. இன்னும் (உங்களை) நன்மை யளவில் அழைத்து, நல்லதை ஏவித் தீயதை விலக்கும்படியான ஒரு கூட்டம் உங்களில் இருக்க வேண்டும். இன்னும் அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்.

நன்மையான காரியங்களை ஏவித் தீமையான காரியங்களை விலக்கி இஸ்லாமின்பால் அழைக்கக் கூடிய ஒரு கூட்டம் இருக்க வேண்டும் என்பது ஃபர்லு கிஃபாயா. இக்காரியத்தை ஒரு ஊரிலுள்ள சில மனிதர்கள் செய்தால் அங்குள்ள மற்றவர்கள் மீதுள்ள இக்கட்டமை நீங்கிவிடும். ஒருவருமே இதனைச் செய்யவில்லையாயின் எல்லோரும் பாவிகளாவார்கள். ஏனெனில், இக்காரியம் அனைவராலும் குறைவற நிறைவேற்ற முடியாது. மார்க்கக் கல்வியிற்றேர்ந்த உலமாக்கள்தாம் நன்மையான காரியங்களையும், தீமையான காரியங்களையும், சன்மார்க்கத்திற்கு முரணில்லாத காரியங்களையுஞ் சரியாக உணர முடியும். கல்வியில்லாதவர்களுக்கு அவற்றைப் பற்றிய அறிவு இருக்காது. ஆதலின் திறம்பட இவற்றை நிறைவேற்ற முடியாது. ஆதலால், இது ஃபர்லு கிஃபாயாவாக ஏற்படுத்தப்பட்டது.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மின்பர் மீது இருந்து கொண்டிருந்த போது ஒருமுறை "மனிதர்களிற் சிறந்தவர் யார்?" என்று வினவப்பட்டது. அப்பொழுது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அவர்களில் நன்மையை ஏவித் தீயதை விலக்கி அல்லாஹ்வை அஞ்சி உறவினர்களைச் சேர்த்து வைப்பவர்கள்” என்று பதில் கூறினார்கள்.

ரிவாயத்து:- “எவர் நன்மையை ஏவித் தீயதை விலக்குகிறாரோ அவர் பூமியில் அல்லாஹ்வுக்கும் கலீஃபா, அவனது ரசூலுக்கும் கலீஃபா அவனது வேதத்திற்கும் கலீஃபா” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

“ஒரு மனிதர் தனது அயலகத்தாருக்கு நேசராகவும், தனது சகோதரர்களிடத்தில் புகழப்பட்டவராகவும் இருந்து அவர் தயவு தாட்சண்யம் பார்ப்பவராக இருந்தால் சத்தியத்தை விட்டு விலகியவர் என்று நிச்சயமாக உணர்ந்து கொள்” என்று சுஃப்யானு தவ்ரீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- “வெறுக்கத்தக்க ஒரு காரியத்தை மனிதர்கள் பார்த்தும் அதனை அவர்கள் மாற்றாமலிருந்தார்களாயின் அல்லாஹு தஆலா தனது வேதனையை அவர்கள் எல்லோருக்கும் அனுப்பக் கூடும்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ரிவாயத்து:- “நபிமார்களைப் போல் அமல் செய்யக்கூடிய 18ஆயிரம் மனிதர்களையுடைய ஒரு கிராமம் வேதனை செய்யப் பட்டது” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்பொழுது மனிதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து “ஏன்? அவ்வாறு” என்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அல்லாஹ்வுக்காக அவர்கள் கோபப்படவுமில்லை, நன்மையை ஏவவுமில்லை, தீயதை விலக்கவுமில்லை” என்று கூறினார்கள்.

وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ تَفَرَّقُوْا وَاخْتَلَفُوْا مِنْ بَعْدِ

مَا جَآءَهُمُ الْبَيِّنٰتُ ۭ وَاُولٰۗىِٕكَ لَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿١٠٤﴾

104. இன்னும் தங்களிடம் (தெளிவான) அத்தாட்சிகள் வந்த பின்னும் தங்களுக்குள் (விரோதித்து) கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து விட்டவர்களைப்போல் நீங்கள் ஆகிவிடாதீர்கள். மேலும், அவர்களாகிறவர்கள் – அவர்களுக்கே கொடிய வேதனை இருக்கிறது.

யூதர்களும் கிறிஸ்துவர்களும்தான் வெவ்வேறு கூட்டங் களாகப் பிரிந்த போயினர். இன்னும் வழிகேடானவற்றை எழுதி வைத்துக் கொண்டும் சத்தியமான ஆயத்துகளை மறைத்து வைத்துக் கொண்டும் கருத்து வேறுபாடு கொண்டனர். ஆகவே, இவர்களைப் போல் வேறுபாடு கொள்ளாமல் ஒற்றுமையாக மார்க்க பக்தியுடனிருக்க வேண்டும் என்று இந்த ஆயத்தின் மூலம் மூமின்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஏனெனில், நன்மையை ஏவித் தீயதை விலக்குவது ஒருவருக்கொருவர் அன்பாகவும், மார்க்க பக்தியுடனும், ஒற்றுமையாகவுமிருப்பதைப் பொறுத்திருக்கிறது. ஒற்றுமை இல்லையேல் நன்மையை ஏவவோ தீயதை விலக்கவோ முடியாது.

يَّوْمَ تَبْيَضُّ وُجُوْهٌ وَّتَسْوَدُّ وُجُوْهٌ ۚ فَاَمَّا الَّذِيْنَ
اسْوَدَّتْ وُجُوْھُهُمْ ۣ اَكَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ
فَذُوْقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿١٠٦﴾

105. சில முகங்கள் வெளுத்தும் சில முகங்கள் கருத்தும் இருக்கும் (நியாயத் தீர்ப்பு) நாளை (எண்ணிப் பாருங்கள்). எனவே எவர்களுடைய முகங்கள் கருப்பாகி விட்டனவோ அவர்களிடம் உங்கள் விசுவாசத்துக்குப் பின்னர் நீங்கள் நிராகரிப்பவர்களாகி விட்டீர்களோ? எனவே, நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்த தனால் வேதனையை அனுபவியுங்கள் (என்று கூறப்படும்).

முகங்கள் கருத்து விடுவது என்பதும் முகங்கள் வெளுத்து விடுவது என்பதும் மனிதருக்கு மறுமையில் ஏற்படும் இரண்டு நிலைகளைச் சுட்டிக் காட்டுகின்றன. மூமின்கள் கியாமத்து நாளில் தங்களது கிரியைகள் நல்லவைகளாக இருப்பதைக் கண்டு சந்தோஷமடைவார்கள். அப்பொழுது அவர்களது முகங்கள் பளப்பளப்பாகிப் பிரகாசமாக இருக்கும். இதனைக் குறித்துத்தான் **"சில முகங்கள் வெளுத்திருக்கும்"** என்றும், காஃபிர்கள் தங்களது கிரியைகளைப் பார்த்து அவைகள் தங்களுக்குப் பயனற்று விட்டனவே என்று வருந்தித் துக்கமடைவார்கள். ஆதலின், அவர்களது முகங்கள் கருகிவிடும். இதனைக் குறித்துத்தான் **"சில முகங்கள் கருத்துவிடும்"** என்றும் கூறப்பட்டிருக்கிறது.

وَاَمَّا الَّذِيْنَ ابْيَضَّتْ وُجُوْهُهُمْ فَفِىْ رَحْمَةِ
اللّٰهِ‌ؕ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ۝

106. இன்னும், எவர்களுடைய முகங்கள் வெண்மையுற்றிருக்கின்றனவோ அவர்கள் அல்லாஹ்வின் கிருபையில் (அதாவது சுவனபதியில்) இருப்பார்கள். அதில் அவர்கள் என்னாளும் (தங்கி) இருப்பார்கள்.

அல்லாஹ்வின் ரஹ்மத்து என்பது சுவர்க்கத்தைக் குறிக்கிறது. மூமின்கள் தங்களது வாழ்நாள் முழுவதையும் அல்லாஹு தஆலாவுக்கு வழிப்படுவதிலேயே கழித்தாலும், அவனது ரஹ்மத் இல்லாமல் சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்கள் என்பதை உணர்த்துவதற்காகவே **"அல்லாஹ்வின் கிருபையில் இருப்பார்கள்"** என்று கூறப்பட்டிருக்கிறது.

تِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا عَلَيْكَ بِالْحَقِّ‌ؕ وَمَا اللّٰهُ يُرِيْدُ
ظُلْمًا لِّلْعٰلَمِيْنَ ۝

107. இவைகள் அல்லாஹ்வின் வசனங்களாகும். (நபியே) உமக்கு இவற்றை உண்மையைக் கொண்டு ஓதிக் காண்பிக்கின்றோம். மேலும் அல்லாஹ் உலகத்தாருக்கு அநியாயத்தை நாடுகிறதில்லை.

இவை என்றது நல்லோர்களுக்கு சுவர்க்கத்தை அளிப்பதையும் காஃபிர்களுக்கு வேதனை செய்வதையும் குறித்துச் சொல்லப்பட்டுள்ள வசனங்களைக் குறிக்கிறது.

அநியாயம் என்பது பிறருடைய உரிமையில் அல்லது பிறருடைய சொத்தில் நியாயமின்றித் தலையிடுவதாகும். இவ்வுலகமும் இனியுள்ள எல்லா உலகமும், அவற்றிலுள்ள சகலமும் அல்லாஹு தஆலாவிற்கே சொந்தமாகவும் பாத்தியமாகவும் இருப்பதால், அல்லாஹு தஆலாவுடைய செய்கையை எந்த விதத்திலும் அநியாயம் என்று சொல்வதற்கில்லை.

وَلِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ‌ؕ وَاِلَى اللّٰهِ
تُرْجَعُ الْاُمُوْرُ ۝

108. மேலும், வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அல்லாஹ்வுக்கே உரியன. இன்னும், அல்லாஹ்வின் அளவிலேயே (சகல) காரியங்களும் மீட்டுக் கொண்டு வரப்படும்.

அகிலத்தாருக்கு அல்லாஹு தஆலா அநீதியை நாடமாட்டான் என்று இதற்கு முந்திய 107வது ஆயத்தில் கூறப்பட்ட விஷயத்திற்கு இந்த ஆயத்திற் காரணஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ تَاْمُرُوْنَ
بِالْمَعْرُوْفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُوْنَ بِاللّٰهِ‌ؕ
وَلَوْ اٰمَنَ اَهْلُ الْكِتٰبِ لَكَانَ خَيْرًا لَّهُمْ‌ؕ مِنْهُمُ

الْمُؤْمِنُونَ وَأَكْثَرُهُمُ الْفَاسِقُونَ ۝

109. மனிதர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட மேலான வர்க்கத்தினராக நீங்கள் ஆகி இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். இன்னும், தீமையை விலக்குகின்றீர்கள். இன்னும், அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள். மேலும், வேதத்தையுடையவர்கள் (உண்மையாகவே) விசுவாசங் கொள்வார்களாயின் அவர்களுக்கு அது நன்மையாகும். அவர்களில் (உண்மையாகவே) விசுவாசங் கொண்டவர்களுமிருக்கின்றார்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலர் விசுவாச மற்றவர்களாக இருக்கின்றனர்.

خَيْرَ أُمَّةٍ **“மேலான வர்க்கத்தினராக நீங்கள் ஆகி இருக்கிறீர்கள்”** என்ற இந்த ஆயத்து நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் ஆரம்ப முதலாகவே நல்லவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், அந்த நிலையை விட்டு அவர்கள் மாறவில்லை என்பதையும் அறிவிக்கிறது.

تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ **நன்மையை நீங்கள் ஏவுகின்றீர்கள். இன்னும் தீமையை நீங்கள் விலக்குகின்றீர்கள். இன்னும் அல்லாஹ்வை விசுவாசிக்கிறீர்கள்** என்ற விஷயங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் சிறந்தவர்கள் என்பதற்குக் காரணங்களாக இருக்கின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற விபரத்தையும் அதற்குரிய காரணங்களையும் கூறியபின் வேதக்காரர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் ஈமான் கொண்டதுபோல் ஈமான் கொண்டிருந்தால் அவர்கள் பாமர மக்களிடம் லஞ்சம் வாங்கி, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி' வர்ணனைகளை மறைப்பதைப் பார்க்கினும் மிகவும் நன்மையாக இருந்திருக்கும் என்பது وَلَوْ آمَنَ أَهْلُ الْكِتَابِ لَكَانَ خَيْرًا لَهُمْ

வேதக்காரர்கள் (உண்மையாகவே) ஈமான் கொண்டார்களாயின் அவர்களுக்கு அது நன்மையாக இருந்திருக்கும் என்ற வசனத்தின் கருத்து. தவிர, வேதக்காரர்களில் யூதர்கள் தவ்ராத்தையும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஈமான் கொண்டுதான் இருந்தார்கள். கிறிஸ்துவர்கள் இஞ்ஜீலையும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஈமான் கொண்டுதான் இருந்தார்கள். ஆயினும், அவர்கள் தங்கள் வேதங்களிற் கிடையில் பாகுபாடு செய்து சிலரை ஈமான் கொண்டும் சிலரை நிராகரித்துக் கொண்டும் இருந்ததால், அவர்களது ஈமான் நிறப்பமானதாகவும், அங்கீகரிக்கப்பட்டதாகவும் இல்லை என்பதும் இந்த ஆயத்திலிருந்து விளங்குகிறது. ஆனால், வேதக்காரர்கள் எல்லோரும் ஒரே விதமாக அதாவது அல்லாஹு தஆலாவின் சட்டங்களை மீறிக் கொண்டிருக்க வில்லை. அவர்களிலும் அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு போன்ற உண்மை மூமின்களும் இருக்கின்றனர். ஆகவே, அவர்களிற் பெரும்பாலர்தாம் ஃபாஸிக்குகள் என்ற விபரம் இந்த ஆயத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

لَنْ يَضُرُّوكُمْ إِلَّا أَذًى ۖ وَإِنْ يُقَاتِلُوكُمْ يُوَلُّوكُمُ
الْأَدْبَارَ ثُمَّ لَا يُنْصَرُونَ ۝

110. (வழிப்படாதவர்கள்) உங்களுக்குத் துன்பம் தருவதைத்தவிர (வேறு அதிகமான) தீங்கு செய்யவே முடியாது. மேலும், அவர்கள் உங்களை எதிர்த்து யுத்தம் செய்தால் அவர்கள் உங்களுக்கு (முதுகுகாட்டிப்) பின்வாங்குவார்கள். பின்பு, அவர்கள் உதவி பெற மாட்டார்கள்.

மதீனாவிலுள்ள யூதர்கள் முஸ்லிம்களை மிரட்டிக் கொண்டும், புண்படுத்தக் கூடிய பேச்சுக்களைப் பேசி அச்சமூட்டிக் கொண்டும் இருந்தார்கள். ஆதலின், அவர்களைக் குறித்து இறைவன் இந்த ஆயத்தில் “அந்த யூதர்களால் உங்களுக்குத் தீங்கு விளைவிக்க முடியாது. ஆனால், அற்பமான தொந்தரவுகளை மட்டுந்தான் அவர்கள்

செய்ய முடியும். அவர்கள் யுத்தத்திற்கு வந்தால் கோழையராகிப் பின்வாங்கி ஓடிவிடுவார்கள். அவர்களுக்கு யாரும் உதவிக்கு வரவும் மாட்டார்கள்'' என்று இந்த ஆயத்தில் இறைவன் முஸ்லிம்களுக்கு ஆறுதல் கூறி இருக்கிறான். மதீனாவிலிருந்த பனூ குறைலா, பனூ நுளைர், பனூ கைன்காஉ, கைபரிலிருந்த யூதர்கள் ஆகியவர்களுக்கு இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட தன்மைகள் இருந்தன.

ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ أَيْنَ مَا ثُقِفُوٓا۟ إِلَّا بِحَبْلٍ
مِّنَ ٱللَّهِ وَحَبْلٍ مِّنَ ٱلنَّاسِ وَبَآءُو بِغَضَبٍ مِّنَ ٱللَّهِ
وَضُرِبَتْ عَلَيْهِمُ ٱلْمَسْكَنَةُ ۚ ذَٰلِكَ بِأَنَّهُمْ كَانُوا۟
يَكْفُرُونَ بِـَٔايَٰتِ ٱللَّهِ وَيَقْتُلُونَ ٱلْأَنۢبِيَآءَ بِغَيْرِ حَقٍّ ۚ
ذَٰلِكَ بِمَا عَصَوا۟ وَّكَانُوا۟ يَعْتَدُونَ ۝

111. (விசுவாசிகளான) மனிதர்களில் நின்றுமுள்ள (பாதுகாப்பு என்ற) கயிற்றைக் கொண்டும், அல்லாஹ்வில் நின்றுமுள்ள (சத்திய மார்க்கத்தில் சேருவதற்கான) கயிற்றைக் கொண்டுமேயன்றி (யூதர்களாகிய) அவர்கள் எங்கு காணப்பட்டாலும் அவர்கள் மீது இழிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும், அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தினளவில் மீண்டு விட்டனர். இன்னும், அவர்களின் மீது வறுமையும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. (அவர்கள் மீது ஏற்பட்டுள்ள) இதுவாகிறது. நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை மறுத்துக் கொண்டும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்து கொண்டும் இருந்ததனாலேயாகும். (இன்னும்) இதுவாகிறது, அவர்கள் மாறு செய்ததனாலும் வரம்பு மீறிக் கொண்டிருந்ததனாலுமேயாகும்.

''யூதர்கள் நபிமார்களைக் கொலை செய்து கொண்டும்,

அல்லாஹுதஆலாவின் ஆயத்துகளாகிய திருக்குர்ஆனின் வசனங்களை நிராகரித்துக் கொண்டும் இருந்ததால் அவர்கள் மீது அல்லாஹு தஆலாவின் கோபம் ஏற்பட்டு விட்டது. அவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் இழிவும் வறுமையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைக்கு மாறு செய்து கொண்டும், அவன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களை மீறிக் கொண்டும் இருந்ததாற்றான் அவர்கள் மீது இழிவும் வறுமையும், அவனது கோபமும் ஏற்பட்டன. ஆனால், அல்லாஹ்வில் நின்றுமுள்ள அறுதிமானம் இன்னும் மூமின்களில் நின்றுமுள்ள அறுதிமானம் ஆகியவைகள் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர'' என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ஹப்லுன் மினல்லாஹி (அதாவது அல்லாஹ்வில் நின்றுமுள்ள கயிறு) என்பதற்கு அல்லாஹுதஆலாவுடைய அறுதிமானம் அல்லது பொறுப்பு என்பது கருத்து. ஏனெனில், வழிப்பிரயாணத்தில் விலகிச் செல்லாமலிருப்பதற்கு கயிறு உதவியாக இருப்பது போல் மனிதரது ஈடேற்றத்திற்கு அல்லாஹு தஆலாவுடைய அறுதிமானம் அல்லது பொறுப்பு உதவியாகவும் காரணமாகவும் இருப்பதால் கயிறு என்பதற்கு அறுதிமானம் அல்லது பொறுப்பு என்று கருத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அல்லாஹ்வில் நின்றுமுள்ள கயிறு என்றும், மனிதரில் நின்றுமுள்ள கயிறு என்றும், இங்கு பிரித்துக் கூறப்பட்டிருப்பதற்குக் காரணமென்ன வெனில் இஸ்லாமிய அரசாங்கங்களில் திம்மிகள் இரண்டு விதமான அமானிதம் பெறமுடியும். 1 அல்லாஹு தஆலாவே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிற ஜிஸ்யாவைக் கொடுத்து அமானிதம் (பாதுகாப்பு) பெறுதல் ஒருவகை. 2 அந்தந்தக் காலத்திலுள்ள முஸ்லிம் அரசருடைய யுக்தானுசாரத்திற்கு விடப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அரசர்கள் அளிக்கிற அமானிதம் மற்றொரு வகை. ஆகவே, அரசர்கள் சில சமயங்களில் ஜிஸ்யா வரி வாங்காமலும்கூட அபயம் கொடுப்பர். சில சமயங்களில் ஜிஸ்யா வரியை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வாங்கிக் கொண்டு அபயம் கொடுப்பர். இது அந்தந்தக்

காலத்தைய அரசர்களின் அபிப்பிராயத்தையும் யுக்தானுசாரத்தையும் பொறுத்திருக்கிறது. ஆகவே, இவ்விரு வகையில் முதலாவது வகைக்கு **அல்லாஹ்வில் நின்றுமுள்ள கயிறு** என்றும் இரண்டாவது வகைக்கு **மனிதர்களில் நின்றுமுள்ள கயிறு** என்றும் கூறப்பட்டது.

அன்னாஸ் (அதாவது மனிதர்) என்பது முஸ்லிம்களைக் குறிக்கும்.

ضُرِبَتْ عَلَيْهِمُ الْمَسْكَنَةُ **"அவர்களின் மீது வறுமையும் ஏற்படுத்தப்பட்டுவிட்டது"** அதாவது அவர்கள் எப்பொழுதும் தரித்திர திசையிலே இருப்பர். எவ்வாறெனில், அவர்கள் உண்மையாகவே தரித்திரர்களாக இருப்பர் அல்லது அவர்களிடம் செல்வமிருந்தாலும் அவர்களது எண்ணமும் எண்ணம் நடத்தையும் தரித்திரவான் களுடையதாகவே இருக்கும்.

யூதர்கள் எல்லோரும் நபிமார்களைக் கொலை செய்யவு மில்லை. சில காலத்திலுள்ள யூதர்களிற் சிலர்தான் நபிமார்களைக் கொலை செய்தனர். மற்றவர்கள் கொலை செய்யவில்லை. என்றாலும், அவர்கள் செய்த கொலையை மற்றவர்கள் நியாயமென எண்ணிக் கொண்டு திருப்தி யடைந்திருந்ததால் அவர்கள் எல்லோரையும் குறித்து நபிமார்களை "நியாயமின்றிக் கொலை செய்து கொண்டிருந்தார்கள்" என்று சொல்லப்பட்டது. தவிரவும் நபிமார்கள் பாவத்தை விட்டுக் காக்கப்பட்டிருப்பதால் அவர்களைக் கொலை செய்தது நியாயமில்லாத காரியமேயாகும். அவ்வாறு இருக்க "நியாயமின்றி" என்ற பதங்களையும் அடைமொழிகளாகச் சேர்த்தது "அவர்கள் நபிமார்களைக் கொலை செய்ததை நியாயம்" என்று எண்ணிக் கொண்டிருந்ததாலேயாகும்.

மேலும், யூதர்கள் நபிமார்களைக் கொலை செய்ததற்கும், அல்லாஹு தஆலாவுடைய வேத வசனங்களை நிராகரித்துக் கொண்டிருந்ததற்கும், அவனது கோபத்திற்கு ஆளானதற்கும் என்ன காரணம்? என்பது ذَٰلِكَ بِمَا عَصَوا وَّكَانُوا يَعْتَدُونَ **இது அவர்கள் மாறு செய்து கொண்டும், மீறிக் கொண்டும் இருந்ததனாலேயாகும்** என்ற

வசனத்திற் கூறப்பட்டிருக்கிறது. பாவம் சிறியதாயினும் அதனை ஒருவர் விட்டு விடாமல் அடிக்கடி திரும்பத் திரும்பச் செய்வது பெரும்பாவத்தை செய்யும்படி அவரைத் தூண்டிவிடும். பெரும் பாவத்தைத் திரும்பத் திரும்பச் செய்வது குஃப்ரின்பால் அவரைச் சேர்ந்துவிடும். ஆகவே, இதனைக் குறித்துத்தான் பெரியோர்கள் "எவர் அதபை (ஒழுக்கத்தை) விட்டு விடுகிறாரோ அவர் சுன்னத்தை விடுவதிற் நுழைந்து விடுவார். இன்னும் எவர் சுன்னத்தை விட்டு விடுகிறாரோ அவர் ஃபர்லை விடுவதிற் நுழைந்து விடுவார். இன்னும் எவர் ஃபர்லை விட்டு விடுகிறாரோ அவர் ஷரீஅத்தை அற்பமாக மதிப்பதிற் நுழைந்து விடுவார். இன்னும் எவர் ஷரீஅத்தை அற்பமாக மதிக்கத் தலைப்படுகிறாரோ அவர் குஃப்ரில் வீழ்ந்து விடுவார்" என்று கூறி இருக்கிறார்கள்.

ஆகவே, மூமின்கள் பாவத்தின் தலைவாசலைத் திறந்து விடக் கூடாது. ஏனெனில், அது அவர்களைப் பாவத்திலேயே சேர்த்துவிடும். இன்னும் ஷரீஅத்தில் தனக்கு அனுமதிக்கப்பட்ட காரியங்களைக் கூடச் செய்யாமல் இருக்க வேண்டும். இப்படிப் பேணுதலாக இருப்பதுதான் தக்வாவில் பரிபூரணமானது.

ஹதீஸ்:- "குற்றமுள்ள காரியத்தைச் செய்யாமற் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, குற்றமற்ற காரியத்தையும் கூடச் செய்யக் கூடாது. இவ்வாறில்லாத வரையில் அடியான் முத்தகீன்களில் சேர்ந்து விடமுடியாது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

لَيْسُوا سَوَاءً مِّنْ أَهْلِ الْكِتَابِ أُمَّةٌ قَائِمَةٌ يَتْلُونَ
آيَاتِ اللَّهِ آنَاءَ اللَّيْلِ وَهُمْ يَسْجُدُونَ

112. அவர்கள் (யாவரும் ஒன்று போல்) சமமாக இல்லை. வேதத்தையுடையவர்களில் (நீதியின் மீது) நிற்கும் படியான ஒரு கூட்டம் இருக்கிறது. அவர்கள் சுஜூது (சிரவணக்கம்) செய்கிறவர்களாய்

அல்லாஹ்வின் வசனங்களை இரவு நேரத்தில் ஓதிக் கொண்டு (இஸ்லாத்தைத் தழுவி) நிற்கும் கூட்டமும் இருக்கிறது.

அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு முதலியவர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தபோது யூதர்களிலுள்ள அஹ்பார்களான பாதிரியார்கள் "இவர்கள் எங்களிலுள்ள கெட்டவர்கள், இவர்கள் எங்களில் நல்லோர்களாக இருந்திருந்தால் இவர்களது மூதாதையரின் மார்க்கத்தை விட்டு விலகி இருக்க மாட்டார்கள்" என்று கூறினார்கள். இவர்களது இக்கூற்றை மறுத்து இந்த ஆயத்து இறக்கப்பட்டது. அல்லது ஸலாத்துல் அவ்வாபீன் என்ற தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்த மனிதர்களைப் போற்றி இந்த ஆயத்து அருளப்பட்டது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மக்ரிபுக்கும் இஷாவிற்குமிடையில் பன்னிரண்டு ரக்கஅத்துத் தொழுகை இருக்கிறது; இந்தத் தொழுகைக்கு ஸலாத்துல் அவ்வாபீன் என்று பெயர்.

يَتْلُوْنَ اٰيٰتِ اللّٰهِ اٰنَآءَ الَّيْلِ وَهُمْ يَسْجُدُوْنَ "ஸுஜூது செய்கிறவர்களாய் அல்லாஹ்வின் ஆயத்துகளை இரவு நேரத்தில் ஓதுகிறார்கள்" என்று கூறியது இரவு நேரத்தில் தஹஜ்ஜத்துத் தொழுகையை நிறைவேற்றுகிறார்கள் எனபதைக் குறித்துச் சொல்லப்பட்டது.

يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَيُسَارِعُوْنَ فِى الْخَيْرٰتِ ؕ
وَاُولٰٓـئِكَ مِنَ الصّٰلِحِيْنَ ۝

113. (இன்னும் அவர்கள்) அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து, நன்மையை ஏவித் தீமையை விலக்கி, நல்ல காரியங்களைச் செய்வதிலும் துரிதமாகின்றனர். மேலும், இவர்கள் நல்லவர்களில் உள்ளவராயிருக்கின்றனர்.

வேதக்காரர்களாகிய யூதர்கள் அல்லாஹ்வையும் கடைசி நாளாகிய நியாயத் தீர்ப்பு நாளையும் ஈமான் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஈமான் கொண்டிருக்கிற முறை வேறு அதாவது ஹளரத் உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹுத் தஆலாவின் புதல்வர் என்று கருதுகின்றனர். கடைசி நாளாகிய நியாயத்தீர்ப்பு நாளில் யூதர்களாகிய தாங்கள் மட்டுந்தான் ஈடேற்றம் பெறுவார்களென்றும், தங்களுக்கு நரக வேதனை கிடைத்தாலும் குறிப்பிட்ட சில நாள்களிற்றான் நரகவேதனை ஏற்படும் என்றும் ஈமான் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஈமான் கொள்வது அல்லாஹுதஆலாவையும் நியாயத் தீர்ப்புநாளையும் குறித்துச் சரியான விதமான ஈமான் கொள்வதாக இல்லையென்பதையும், ஷரீஅத்திற் கூறிய விதமாக ஈமான் கொள்வதுதான் சரியான ஈமான் என்பதையும் يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ **அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசிக்கிறார்கள்** என்ற வசனம் அறிவிக்கிறது. தவிரவும், அல்லாஹுதஆலாவால் அருளப்பட்ட வேதத்தில் தங்கள் மனதிற்குப் பிடித்தமான சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு சில விஷயங்களை நிராகரித்துக் கொண்டிருப்பதும் அல்லாஹு தஆலாவை உண்மையாகவே ஈமான் கொண்டதாக ஆகாது என்பதையும் இவ்வசனம் அறிவிக்கிறது.

وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ "**இன்னும் நன்மையை ஏவுவார்கள் இன்னும் தீயதை விலக்குவார்கள்**" என்ற வசனம் யூதர்களின் தீயநடத்தையை மறைமுகமாகக் கண்டித்துக் கூறுவதாக இருக்கிறது.

وَيُسَارِعُوْنَ فِى الْخَيْرٰتِ "**இன்னும் நல்லவை (களான காரியங்)களில் தீவிரமாகுவார்கள்**" என்ற வசனம் யூதர்கள் நல்ல காரியங்களில் தீவிரமாக ஈடுபடாமல், தீய காரியங்களில் முனைந்து நிற்பதை மறைமுகமாகக் கண்டிப்பதாக இருக்கிறது.

இந்த ஆயத்து யூதர்களிலுள்ள மூமின்களின் தன்மைகளைப் பற்றிப் போற்றிக் கூறுவதாக இருந்தாலும், அவர்களிலுள்ள காஃபிர்களின் செய்கைகளைக் கண்டிப்பதாகவும் இருக்கிறது.

وَمَا يَفْعَلُوا مِنْ خَيْرٍ فَلَنْ يُكْفَرُوهُ ۗ وَاللَّهُ عَلِيمٌ بِالْمُتَّقِينَ ۝

114. மேலும், இவர்கள் நன்மையிலிருந்து எதைச் செய்தாலும் அதற்காக (நற்கூலி வழங்கப் படுவதிலிருந்து) அவர்கள் மறுக்கப்பட மாட்டார்கள். இன்னும், அல்லாஹ் பயபக்தியுடையவர்களை மிகவும் அறிபவன்.

இந்த ஆயத்து இதற்கு முந்திய ஆயத்துகளிற் சொல்லப்பட்ட யூதர்களிலுள்ள மூமின்களுக்கு நற்செய்தியாக இருப்பதுடன் தக்வா என்னும் பயபக்திதான் நன்மைப்பயனை அளிப்பதற்கு அஸ்திவாரமாக இருக்கிறதென்பதை அறிவிக்கிறது.

إِنَّ الَّذِينَ كَفَرُوا لَنْ تُغْنِيَ عَنْهُمْ أَمْوَالُهُمْ
وَلَا أَوْلَادُهُمْ مِنَ اللَّهِ شَيْئًا ۖ وَأُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ ۚ
هُمْ فِيهَا خَالِدُونَ ۝

115. நிச்சயமாக எவர்கள் நிராகரிப்பவராகி விட்டனரோ அவர்களுக்கு அவர்களுடைய பொருள்களும் அவர்களுடைய பிள்ளைகளும் அல்லாஹ்வி(ன் வேதனையி)லிருந்து எந்த ஒன்றையும் தடுக்கவே முடியாது. மேலும், இவர்கள் (நரக) நெருப்பில் வசிப்பவர்களே. அதில் அவர்கள் என்னாளும் இருப்பார்கள்.

காஃபிர்கள் தங்களது அதிகமான மக்கள் தொகையையும் செல்வச் செருக்கையும் கூறி "நாங்கள் மறுமையில் வேதனைப்பட மாட்டோம்" என்று பெருமை பேசியதுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அவர்களைப் பின்பற்றிய முஸ்லிம்களையும் கேவலமாகக் கூறி "முஹம்மது உண்மையின் மீது இருந்தால் அவருடைய றப்பு அவரை ஏழையாக விட்டிருக்க மாட்டான்" என்று சொன்னார்கள். அவர்களுடைய இந்த எண்ணத்தையும் சொல்லையும் இந்த ஆயத்தில் இறைவன் மறுத்துக் கூறியுள்ளான்.

مَثَلُ مَا يُنْفِقُونَ فِي هَٰذِهِ الْحَيَاةِ الدُّنْيَا كَمَثَلِ
رِيحٍ فِيهَا صِرٌّ أَصَابَتْ حَرْثَ قَوْمٍ ظَلَمُوا
أَنْفُسَهُمْ فَأَهْلَكَتْهُ ۚ وَمَا ظَلَمَهُمُ اللَّهُ وَلَٰكِنْ
أَنْفُسَهُمْ يَظْلِمُونَ ۝

116. இவ்வற்ப (உலக) வாழ்வில் (இஸ்லாத்திற்கு விரோதமாக) அவர்கள் செலவு செய்வதற்கு உதாரணமாவது: அதிக உஷ்ணமுள்ள காற்றின் உதாரணத்தைப் போன்றதாகும். அதில் கடுங்குளிர் இருக்கிறது. தமக்குத் தாமே அநியாயஞ் செய்த ஒரு கூட்டத்தினரின் வேளாண்மையை தாக்கி அதை அழித்து விட்டது. ஆனால், அவர்களுக்கு அல்லாஹ் அநியாயஞ் செய்யவில்லை. எனினும் தங்களுக்குத் தாங்களே அநியாயஞ் செய்து கொண்டனர்.

கடுங்குளிர் அல்லது உஷ்ண முள்ள காற்றுக்கு **ரீஹுன் ஸிர்ருன்** என்று பெயர். இவ்விதமான காற்றுகளால் பயிர்கள் அழிந்து போய் விடுகின்றன. அதிலும், குஃப்ரு போன்ற காரியங்களைச் செய்து அல்லாஹு தஆலாவின் கோபத்திற்காளாகி விட்டவர்களுக்குத் தண்டனையாக அனுப்பப்படும் இக்காற்றுக்களால், அவர்களுடைய பயிர்களுக்கு அதிகமான சேதம் ஏற்படும். ஆகவே, தண்டனை என்ற முறையில் இக்காற்றுப்பட்ட பயிர்கள் அதனை வளர்த்தவர்களுக்கு எந்த விதப் பயனையும் அளிக்காமல் நஷ்டத்தை உண்டாக்குவது போல, சன்மார்க்கத்திற்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் விரோதமாகச் செலவிடும் பணம் அவர்களது நோக்கப்படி பயனளிக்காமற் போவதுடன் அவர்களுக்கு நஷ்டத்தையும் உண்டாக்குகிறது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَّخِذُوا بِطَانَةً مِنْ دُونِكُمْ

لَا يَأْلُونَكُمْ خَبَالًا ۚ وَدُّوا مَا عَنِتُّمْ ۚ قَدْ بَدَتِ
الْبَغْضَاءُ مِنْ أَفْوَاهِهِمْ ۖ وَمَا تُخْفِي صُدُورُهُمْ
أَكْبَرُ ۚ قَدْ بَيَّنَّا لَكُمُ الْآيَاتِ ۖ إِنْ كُنْتُمْ تَعْقِلُونَ ۝

117. விசுவாசங் கொண்டவர்களே! உங்க(ள் முஸ்லிம் சகோதரர்க)ளல்லாதவரை உங்கள் அந்தரங்க கூட்டாளிகளாக்கிக் கொள்ளாதீர்கள். அவர்கள் உங்களுக்குத் தீங்கு செய்வதைக் குறைப்பதில்லை. நீங்கள் கஷ்டப்படுவதை அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள் வாய்களிலிருந்தே நிச்சயமாக பகைமை வெளியாகி இருக்கிறது. இன்னும், அவர்கள் இருதயங்கள் மறைத்திருப்பது (இதைவிட) மிகப் பெரியதாகும். நீங்கள் அறிவுள்ளவர்களாயிருந்தால் (நீங்கள் உணர்ந்து கொள்ளுவதற்குரிய) அடையாளங்களை உங்களுக்கு நாம் நிச்சயமாக விவரித்து விட்டோம்.

மூமின்களிலிருந்து ஒரு கூட்டத்தினர் முனாஃபிக்குகளிடம் நட்பு கொண்டு அவர்களுடன் சேர்ந்திருக்க ஆரம்பித்தார்கள். இந்த நட்பு தீமையையே விளைவிக்கும் என்றும் முஸ்லிம்கள் அவர்களிடம் இரகசியங்களைக் கூறி அவர்களை அத்தியந்த நண்பர்களாக்கிக் கொள்ளக் கூடாது என்றும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முனாஃபிக்குகள் முஸ்லிம்களுடன் சேர்ந்திருப்பது உளவையறிந்து இஸ்லாத்தின் விரோதிகளிடம் சொல்லிக் கொண்டிருந்ததால் இரகசியத்தை அறியத்தக்க நண்பர்களாக அவர்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்ற விஷயம் لَا تَتَّخِذُوا بِطَانَةً مِنْ دُونِكُمْ உங்கள் முஸ்லிம் சகோதரர்க) ளல்லாதவரை உங்கள் அந்தரங்க கூட்டாளிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள் என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முனாஃபிக்குகள் எப்பொழுதும் முஸ்லிம்களுக்குத் தீமை செய்வதிலேயே முனைந்து நின்றனர். தங்களால் தீமை செய்ய முடியா விட்டாலும் வேறு வகையிலேனும் முஸ்லிம்களுக்குத் தீங்கு ஏற்படுவதைக் கண்டு சந்தோஷமடைந்து கொண்டிருந்தனர். இவ்விஷயம் لَا يَأْلُونَكُمْ خَبَالًا ۚ وَدُّوا مَا عَنِتُّمْ அவர்கள் உங்களுக்கு தீங்கு செய்வதைக் குறைப்பதில்லை. நீங்கள் கஷ்டப்படுவதை அவர்கள் விரும்புகிறார்கள் என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்கள்பால் தங்களுக்குள்ள கடுங்கோபத்தை முனாஃபிக்குகள் தங்கள் வாய்களின் மூலமாக வெளிப்படுத்தி விட்டனர். ஆனால் அவர்கள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிற துவேஷம் இன்னும் பல இருக்கிறது என்ற விபரம் “قَدْ بَدَتِ الْبَغْضَاءُ مِنْ أَفْوَاهِهِمْ ۖ وَمَا تُخْفِي صُدُورُهُمْ أَكْبَرُ “அவர்கள் வாய்களிலிருந்தே நிச்சயமாக பகைமை வெளியாகி இருக்கிறது. இன்னும் அவர்களது இருதயங்கள் மறைத்திருப்பது (இதிலும்) மிகப் பெரியதாகும்” என்ற வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

هَا أَنْتُمْ أُولَاءِ تُحِبُّونَهُمْ وَلَا يُحِبُّونَكُمْ وَتُؤْمِنُونَ
بِالْكِتَابِ كُلِّهِ ۚ وَإِذَا لَقُوكُمْ قَالُوا آمَنَّا ۖ وَإِذَا خَلَوْا
عَضُّوا عَلَيْكُمُ الْأَنَامِلَ مِنَ الْغَيْظِ ۚ قُلْ مُوتُوا
بِغَيْظِكُمْ ۗ إِنَّ اللَّهَ عَلِيمٌ بِذَاتِ الصُّدُورِ ۝

118. அறிந்து கொள்ளுங்கள். மூமின்களே! நீங்கள் அவர்களை நேசிக்கின்றீர்கள். ஆனால் உங்களை அவர்கள் நேசிக்கவில்லை. இன்னும், எல்லா வேதத்தையும் நீங்கள் விசுவாசிக்கின்றீர்கள். உங்களை அவர்கள் சந்திக்கும் போது (உங்களைப் போலவே) நாங்களும் விசுவாசித்தோம் என்று கூறுகின்றனர். ஆனால், அவர்கள் (உங்களை விட்டுப் பிரிந்து)

தனிக்கும் போது உங்கள் மீதுள்ள கோபத்தினால் விரல்களைக் கடிக்கின்றனர். (ஆதலால்) "உங்கள் கோபத்தினாலேயே நீங்கள் இறந்து விடுங்கள்" என்று (நபியே நீர் அவர்களுக்குக்) கூறும். நிச்சயமாக அல்லாஹ் இருதயங்களிலுள்ளதை நன்கு அறிபவன்.

முனாஃபிக்குகளுக்கும் உண்மை முஸ்லிம்களுக்குமிடையிலுள்ள வித்தியாசங்களும், முஸ்லிம்களைப் பற்றி அந்த முனாஃபிக்குகள் கொண்டுள்ள பகையைப் பற்றிய விபரமும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

"முஸ்லிம்கள் முனாஃபிக்குகளை நேசிக்கிறார்கள். எல்லா வேதங்களையும் முஸ்லிம்கள் விசுவாசிக்கிறார்கள். ஆனால், முனாஃபிக்குகள் முஸ்லிம்களை நேசிக்கிறதில்லை. வேதங்களை விசுவாசிப்பதில்லை. முஸ்லிம்கள்பால் தங்களுக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லையே என்று அவர்கள் தனித்திருக்கும் போது ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு தங்களது நுனிவிரல் களைத் தாங்களாகவே கடித்துக் கொள்கிறார்கள்" என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

إِن تَمْسَسْكُمْ حَسَنَةٌ تَسُؤْهُمْ وَإِن تُصِبْكُمْ
سَيِّئَةٌ يَفْرَحُوا بِهَا وَإِن تَصْبِرُوا وَتَتَّقُوا لَا
يَضُرُّكُمْ كَيْدُهُمْ شَيْئًا إِنَّ اللَّهَ بِمَا يَعْمَلُونَ مُحِيطٌ ۝

119. உங்களுக்கு ஒரு நலவு கிடைக்குமானால் அது அவர்களைத் துக்கப்படுத்துகிறது. இன்னும், உங்களுக்கு ஒரு தீங்கு ஏற்படுமாயின் அதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். ஆகவே, நீங்கள் (அவர்கள் செய்யுந் தீங்குகளைச்) சகித்து (அல்லாஹ்வை) அஞ்சி நடந்தால் அவர்களுடைய சதி உங்களுக்கு எந்தவிதத் தீங்கையும் செய்யாது. நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை அறிபவன்.

இந்த ஆயத்திலும் முஸ்லிம்கள்பால் முனாஃபிக்குகள் கொண்டுள்ள துவேஷத்தையும் பகையையும் சொல்லப்பட்டிருப்பதுடன், முஸ்லிம்கள் தங்கள் பகைவர்கள் செய்யும் தீமைகளைச் சகித்துக் கொண்டும், அல்லாஹு தஆலாவின் ஏவல் விலக்கல்களைக் கடைப்பிடித்து அவனுக்குப் பயபக்தி செலுத்திக் கொண்டும் இருந்தால், அவர்கள் எந்த விதத் தீங்கையும் விளைவித்து விட முடியாது என்று முஸ்லிம்களுக்கு ஆறுதலும் சொல்லப்பட்டிருக்கிறது.

وَإِذْ غَدَوْتَ مِنْ أَهْلِكَ تُبَوِّئُ الْمُؤْمِنِينَ مَقَاعِدَ
لِلْقِتَالِ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ۝

120. (நபியே) விசுவாசிகளை யுத்தத்துக்குரிய இடங்களில் தைரியப்படுத்தி வைக்க, உம்முடைய குடும்பத்தினரை விட்டு அதிகாலையில் நீர் புறப்பட்ட வேளையை (எண்ணிப்பாரும்). மேலும், அல்லாஹ் கேட்பவன், (இன்னும்) அறிபவன்.

இதற்கு முந்தின ஆயத்தில் பொறுமையாயிருக்கும்படியும், அல்லாஹு தஆலாவிற்குப் பயபக்தியாயிருக்கும்படியும் இறைவன் கட்டளையிட்டு, அவ்வாறு செய்தால் பகைவர்களால் முஸ்லிம்களுக்கு எந்தவிதத் துன்பமும் வராதென்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்தில் முஸ்லிம்கள் அவ்வாறு செய்யாமலிருந்ததால் நேர்ந்த கஷ்டத்தைக் குறித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

ஃபாயிதா:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மக்கத்துக் காஃபிர்களுக்கும் ஹிஜ்ரீ 2வது வருடத்தில் நிகழ்ந்த பத்ருப் போரில் கொல்லப்பட்ட காஃபிர்களது புதல்வர்களும் அபூசுஃப்யான் முதலானவர்களும் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 3 ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு பெரும் படையுடன் உஹது என்ற இடத்தில் வந்து பாளையமிறங்கி இருந்தனர். இவர்கள் படையெடுத்து வந்திருப்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களறிந்து, ஸஹாபாக்களையும் அப்துல்லாஹிப்னு

உபய்யி என்பவரையும் கூட்டிக் கலந்து பேசினார்கள். அப்பொழுது அவர்கள் "மதீனாவிற்கு வெளியில் பகைவரைத் தேடிச் சென்றால் நாங்கள் வெற்றியடைவதில்லை. அவர்கள் மதீனாவிற்குள் வந்தால் நாங்கள் வெற்றியடைவது வழக்கம். ஆதலால், தாங்கள் பகைவர் இருக்குமிடத்திற்குப் போக வேண்டாம். பகைவர்கள் ஊருக்குள் வந்தால் ஆண் பிள்ளைகள் அவர்களை எதிர்த்து வெட்டுவார்கள். பெண்களும் குழந்தைகளும் பகைவர்களை கல்லாலெறிந்து கொல்வார்கள்" என்று கூறினார்கள். ஆனால் வேறு சில முஸ்லிம்கள் "நாம் பகைவர் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டும். இல்லையேல் நாம் களைத்து விட்டதாகப் பகைவர்கள் எண்ணிக் கொள்வார்கள்" என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவின் விளக்கத்தைக் கவனிக்கும் போது மதீனாவிற்கு வெளியிற் செல்லாமலிருப்பதுதான் நல்லதென்று தோன்றுகிறது" என்று கூறினார்கள். அப்பொழுது பத்ருப் போரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உதவியாகச் செல்லச் சந்தர்ப்பம் வாய்க்காமற் போனவர்கள், ஷஹீதுடைய பலனும் சீதேவித் தனமும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் யுத்தத்திற்கு செல்ல வேண்டும் என்று கட்டாயமாகக் கூறவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆயிரம் பேருடன் இன்னொரு சொற்படி தொளாயிரத்து ஐம்பது பேருடன் யுத்தத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஆனால், அப்துல்லாஹிப்னு உபய்யும் முனாஃபிக்குகளும் புறங்காட்டி ஓடி வந்து விட்டார்கள். இவ்வாறு முன்னூறு பேர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய படையில் குறைந்து போயினர். இறுதியாக முஸ்லிம்களுக்கும் காஃபிர்களுக்கும் போர் தொடங்கிற்று. ஆரம்பத்தில் முஸ்லிம்கள் வெற்றி யடைந்தனர். காஃபிர்கள் தங்களது பொருட்களைப் போர்க்களத்தில் போட்டு விட்டு ஓடினர். முஸ்லிம்கள் அந்தப் பொருட்களை எடுப்பதில் முனைந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது படையில் ஒரு பிரிவினரை அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹுதஆலா

அன்ஹு அவர்களது தலைமையில் மலைக் கணவாயில் நிறுத்தி வைத்து, யுத்தத்தில் வெற்றியேற்பட்டாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் இந்தக் கணவாயை விட்டு அகலக் கூடாது. பகைவர்கள் இக்கணவாய் வழியாகப் பின் பக்கத்தில் வந்தால் அவர்களை அம்பாலெய்து இப்பக்கமாக வரவிடாமறறுடுப்பதுதான் உங்கள் வேலையென்று திட்டமிட்டிருந்தார்கள். பகைவர்கள் தோற்று ஓடுவதைக் கண்ட இந்தப் பிரிவினர் கணவாயை விட்டு வந்து அவர்கள் விட்டுச் சென்ற பொருள்களை எடுக்கவாரம்பித்தார்கள். இதற்குள் காஃபிர்கள் இக்கணவாயின் வழியாக வந்து முஸ்லிம்களைத் தாக்கியதால் முஸ்லிம்கள் சிதறிப் போனார்கள். முஸ்லிம்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பல்லுங்கூட இதில் ஷஹீதாகி விட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சிறிய தந்தையும் பால் குடி சகோதரருமான ஹளரத் அமீர் ஹம்ஜா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ஷஹீதானார்கள். கடைசியாக அன்ஸாரிகளில் ஏழு பேரையும், குறைஷியரில் இரண்டு பேரையும் தவிர மற்ற முஸ்லிம்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டுச் சிதறிப் போனார்கள். இதனால் முஸ்லிம்களில் எழுபத்திரண்டு பேர் ஷஹீதானார்கள். இவர்களையல்லாமல் பலர் காயமடைந்தனர். இறுதியாகச் சிதறிய படை மீண்டும் ஒன்று சேர்ந்து பலமாக எதிர்த்துப் பகைவர்களைத் துரத்திற்று.

எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளைக்கு மாறு செய்யாமல் அவர்கள் கூறிய இடத்தில் உறுதியாகவும், பகைவர்கள் விட்டுச் சென்ற பொருட்களை எடுப்பதில் கொஞ்சம் பொறுமையாகவும் இருந்திருந்தால் முஸ்லிம்களுக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்காது. இவ்விபரத்தை இறைவன் இங்கு எடுத்துக் காண்பித்து முஸ்லிம்களுக்குப் பொறுமையையும் தக்வாவையும் பற்றி உபதேசித்துள்ளான்.

وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ "மேலும் அல்லாஹ் செவியேற்பவன் (இன்னும் நன்கு) அறிந்தவன்" என்ற இவ்வசனத்திற்கு நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்தப் போரைப் பற்றி முஸ்லிம்களுடன் கலந்தாலோசித்த போது மனிதர்கள் கூறிய ஆலோசனையை செவியேற்பவனாகவும் அவர்கள் மனதினுள் மறைந்திருந்த எண்ணங்களை மிகவும் அறிந்தவனாகவும் இருக்கிறான் என்பது கருத்து.

إِذْ هَمَّتْ طَّآئِفَتَانِ مِنكُمْ أَن تَفْشَلَا ۙ وَٱللَّهُ وَلِيُّهُمَا ۗ
وَعَلَى ٱللَّهِ فَلْيَتَوَكَّلِ ٱلْمُؤْمِنُونَ ۝

121. அந்நேரத்தில் உங்களிலிருந்து இரண்டு கூட்டத்தினர் தைரியமிழந்து (உஹத் என்ற இடத்தில் யுத்தம் செய்யாமற்) பின்வாங்க நினைத்தனர். (ஆனால், அல்லாஹ் அவர்களின் கோழைத்தனத்தை அகற்றி அவர்களைப் பின் வாங்காமல் செய்தான்). இன்னும் அவ்விருவர் (கூட்டத்தின)ருக்கும் அல்லாஹ் உதவியாளனாக இருந்தான். மேலும், அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் நம்பிக்கை வைக்க வேண்டும்.

மேற்கண்ட படையில் அப்துல்லாஹிப்னு உபய்யி என்பவர் முன்னூறு பேரை அழைத்துக் கொண்டு முஸ்லிம்களை விட்டுப் பிரிந்து போன போது மதீனாவிலுள்ள அன்ஸாரிகளில் கஜ்ரஜ் கூட்டத்தைச் சேர்ந்த பனூ ஸல்மா என்ற கிளையாரும், அவ்ஸ் கூட்டத்தைச் சேர்ந்த பனூ ஹாரிதா என்ற கூட்டத்தாரும் அப்துல்லாஹிப்னு உபய்யியைப் பின்பற்றி யுத்தம் செய்யாமல் திரும்பிச் சென்று விடலாமா? என்று எண்ணினார்கள். இவ்விரு கிளையினரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது படைக்கு வலம் இடம் ஆகிய இரண்டு அணிப்படைகளில் இருந்தனர். இறைவன் இவர்களை அவ்வாறு செய்யாமல் காப்பாற்றிக் கொண்டான் என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஃபாயிதா:- மனிதன் தனக்குச் சம்பவிக்கும் ஆபத்துகளையும் வெறுக்கத்தக்க காரியங்களையும் அல்லாஹுத்தஆலாவின் மீது

தவக்கல் வைப்பதன் மூலம் நீக்கிக் கொள்ள வேண்டும் என்பதும், தனக்கு ஏற்படுகிற வருத்தத்தையும் திடுக்கத்தையும் இந்தத் தவக்கல் மூலமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதும் இந்த ஆயத்தில் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கிறதாக இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"கல்விகள் அனைத்தும் (துஅப்புத். அதாவது) வணக்கத்தின் தலைவாசல்களில் மிகவும் அற்பமான ஒரு தலைவாசல், வணக்கம் அனைத்தும் (வரஉ என்னும்) பேணுதலில் மிகவும் அற்பமான ஒரு தலைவாசல், (வரஉ என்னும்) பேணுதல் அனைத்தும் (ஜுஹ்து என்னும்) துறவரத்தில் மிகவும் அற்பமான ஒரு தலைவாசல். (ஜுஹ்து என்னும் துறவரம்) அனைத்தும் தவக்கலில் மிகவும் அற்பமான ஒரு தலைவாயல் என்று ஸஹ்லுப்னு அப்தில்லாஹில் துஸ்தரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். மனிதன் பிறரிடம் கேட்காமலும், பிறர் கேட்பதை ரத்துச் செய்யாமலும், கஞ்சத்தனம் செய்யாமலுமிருப்பது முத்தவக்கிலின் அடையாளம் என்றும் மேற்படி ஷெய்கு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அல்லாஹுதஆலாவிடம் பொறுப்புச் சாட்டி விடுவதில் ஈடுபடுபவருக்கு மணப் பெண்ணை மணமகனிடம் நெருக்கி வைப்பது போல், அவருடைய நாட்டத்தை அவருக்குச் சமீபத்தில் நெருக்கி வைக்கப்படும் என்று சில பெரியார்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹிக்காயத்து:- ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நம்ரூத் அரசன் நெருப்புக் கிடங்கில் போடுவதற்காக கவண் கல் பட்டை போன்றவைகளின் மூலம் நெருப்புக் குழிக்குள் விசிறி எறிந்தபோது, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து "உமக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா" என்று வினவினார்கள். அதற்கு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "உம்மிடத்தில் இல்லை. ஆனால், அல்லாஹ்விடத்தில் இருக்கிறது" என்று கூறினார்கள். அப்பொழுது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அவனிடம் நீர் அதனைக் கேட்கலாம்" என்று கூறினார்கள்.

அதற்கு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "எனது நிலையை அவன் அறிந்திருப்பதே போதுமானது, நான் அவனிடம் கேட்க வேண்டிய அவசியமில்லை" என்று கூறிவிட்டார்கள்.

قَالَ عَلَيْهِ السَّلَامُ يَقُوْلُ اللّٰهُ تَعَالٰى فَمَنْ شَغَلَهُ ذِكْرِيْ
عَنْ مَسْأَلَتِيْ أُعْطِيْ أَفْضَلَ مَا أَعْطَى السَّائِلِيْنَ

ஹதீஸ்:- "என்னிடத்தில் கேட்பதை அதாவது தனது நாட்டங்களைப் பற்றிக் கேட்பதைவிட்டு என்னை திக்ரு செய்வது எவரை மாற்றி விட்டதோ அவருக்கு என்னிடம் கேட்பவர்களுக்கு நான் கொடுப்பதைப் பார்க்கினும் சிறந்ததை நான் கொடுப்பேன் என்று அல்லாஹுத்தஆலா கூறுகிறான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஆகவே, பரமார்த்திகத்துறையிற் செல்லுகிற ஸாலிக் அல்லாஹு தஆலாவின் மீது தவக்கல் வைத்துத் தனது காரியத்தை அவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். ஏனெனில், அன்று ஏற்பட்டது (அதாவது தலை நாளில் எழுதப்பட்டது) மாறவே மாட்டாது.

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ ۚ
فَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۝

122. இன்னும், நீங்கள் தழுமையானவர் (ஆயுதமற்ற சொற்பமானவர்)களாக இருந்த நிலையில் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு பத்ரில் உதவி புரிந்தான். எனவே, நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு அல்லாஹ்வுக்குப் பயபக்தி செலுத்துங்கள்.

இந்த ஆயத்தில் தவக்கல் வைத்ததால் ஏற்பட்ட பலனைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பத்ரு என்பது மக்காவிற்கும் மதீனாவிற்குமிடையிலுள்ள ஒரு கிணறு. அதனை பத்ரு என்பவர் வெட்டினார். அவருடைய பெயரே அந்தக் கிணற்றுக்குப் பெயராக

ஏற்பட்டது. இந்த இடத்தில் ஹிஜ்ரீ 2வது வருடம் ரமலான் மாதம் 17ம் தேதி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மக்கத்து காஃபிர்களுக்கும் போர் நிகழ்ந்தது.

இந்தப் போரில் மிக்தாதுப்னுல் அஸ்வத் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ஒருவருக்குத்தான் ஒரு குதிரைகள் இருந்தது. வேறு குதிரை இல்லாமல் முஸ்லிம்கள் ஒட்டகத்தில் ஏறிச் சென்றார்கள். மொத்தம் தொண்ணூறு ஒட்டகைகள்தான் இருந்தன. ஐந்து குதிரைகளும் எழுபது ஒட்டகைகளும் இருந்தன வென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆறு கவச உடையும், எட்டு வாள்களும் இருந்தன. அன்று முஸ்லிம்களில் முன்னூற்றுப் பதின்மூன்று பேர்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உதவியாக சன்மார்க்க யுத்தத்திற்குச் சென்றார்கள். இவர்களில் 76 பேர் முஹாஜிர்கள். மற்றவர்கள் அன்ஸார்கள். ஹளரத் அலிய்யுப்னு அபீதாலிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கொடியைத் தாங்கிச் சென்றார்கள். ஸஅதுப்னு உபாதா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அன்ஸார்களது கொடியைத் தாங்கிச் சென்றார்கள். காஃபிர்கள் ஆயிரம் பேர் வரையில் வந்திருந்தனர். அவர்களிடம் நூறு குதிரைகள் 600 உருக்குச் சட்டைகள் இருந்தன. இதர யுத்த தளவாடங்களும் அவர்களிடம் ஏராளமாக இருந்தன.

وَّاَنْتُمْ اَذِلَّةٌ **"இன்னும் நீங்கள் தழுமையானவர்களாக இருந்தபோது"** என்ற ஆயத்திற்கு முஸ்லிம்கள் கேவலமாக இருந்தார்கள் என்பது கருத்தல்ல. அவர்கள் எண்ணிக்கையில் பகைவர்களைப் பார்க்கினும் கொஞ்சமாக இருந்தார்கள் என்பதும், யுத்தத் தளவாடங்கள் பகைவர்களுக்கிருந்த யுத்த தளவாடங்களைப் பார்க்கினும் குறைவாக இருந்தன என்பதும் கருத்து.

اِذْ تَقُوْلُ لِلْمُؤْمِنِيْنَ اَلَنْ يَّكْفِيَكُمْ اَنْ يُّمِدَّكُمْ
رَبُّكُمْ بِثَلٰثَةِ اٰلٰفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُنْزَلِيْنَ ۝

123. உங்களுடைய ரப்பு மூவாயிரம் அமரர்களை இறக்கி, உங்களுக்கு உதவி புரிவது உங்களுக்குப் போதாதோ? என்று

விசுவாசிகளுக்கு நீர் சொல்லிக் கொண்டிருந்தபோது (இவ்வெற்றி உங்களுக்குக் கொடுக்கப்பட்டது).

பகைவர்கள் எண்ணிக்கையிலும் தளவாடங்களிலும் அதிகமாக இருப்பதைக் கண்டு மூமின்கள் தங்களுக்கு வெற்றி கிடைக்குமா? என்ற நம்பிக்கை இழந்தனர். அப்போது அல்லாஹுத் தஆலா தமக்கு உதவியளிப்பதாக வாக்களித்திருப்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூமின்களுக்குச் சொல்லிக் காண்பித்தார்கள். தவிரவும் இவ்வாக்குறுதியை யுத்தம் நிகழுவதற்கு முன்பே அவர்களுக்கு முற்கூட்டி அறிவித்ததற்குக் காரணமென்னவெனில், அவர்களது உள்ளம் தைரிய மடைந்து போர்க்களத்தில் அவர்கள் ஸ்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக வேயாகும்.

அல்லாஹுதஆலா முதலில் ஆயிரம் பேரையும் அப்புறம் மூவாயிரம் பேரையும், அப்புறம் ஐயாயிரம் பேரையும் அனுப்பி மூமின்களுக்கு உதவி செய்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

بَلَىٰٓ ۚ إِن تَصْبِرُوا۟ وَتَتَّقُوا۟ وَيَأْتُوكُم مِّن فَوْرِهِمْ
هَٰذَا يُمْدِدْكُمْ رَبُّكُم بِخَمْسَةِ ءَالَٰفٍ مِّنَ ٱلْمَلَٰٓئِكَةِ
مُسَوِّمِينَ ۝

124. ஆம்! நீங்கள் (யுத்தம் செய்வதில்) பொறுமையாக இருந்து (அல்லாஹ்வை) அஞ்சியிருந்தால் (உங்களுக்கு அவ்வுதவி போதுமானதே). இன்னும், (உங்கள் எதிரிகளாகிய) அவர்கள் தங்களுடைய (குறிப்பிட்ட) அந்த நேரத்தில் உங்களிடம் வந்தால் அடையாளமிடப்பட்ட ஐயாயிரம் அமரர்களைக் கொண்டு உங்களுடைய ரப்பு (அந்த யுத்தத்தில்) உங்களுக்கு உதவி புரிவான்.

இந்த ஆயத்தில் ஐயாயிரம் பேரைக் கொண்டு உதவி செய்வதாக அல்லாஹு தஆலா வாக்களித்திருக்கிற விபரம் கூறப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- மலக்குகள் வெள்ளைத் தலைப்பாகை அணிந்து வந்திருந்தார்கள் என்றும், ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் ஜுபைருப்னுல் அவாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைப் போல் மஞ்சள் தலைப்பாகை அணிந்திருந்தார் என்றும், மிக்தாது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ஏறிவந்த குதிரை போன்ற குதிரைகளில் ஏறிவந்தார்கள் என்றும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- மலக்குகளுடைய குதிரைகளின் முன்நெற்றி உரோமம், செவி ஆகியவற்றில் வெண்பஞ்சு வைக்கப்பட்டிருந்த தாகவும், இந்த ஐயாயிரம் மலக்குகளும் கியாமத்துநாள் வரை மூமின்களுக்கு உதவியாயிருப்பார்களென்றும் பத்ருப் போரைத் தவிர மற்றைய போர்களில் அவர்கள் வெட்டவில்லையென்றும், உஹதுப் போரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வலது புறமும் இடது புறமும் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் இருந்து வெட்டினார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

وَمَا جَعَلَهُ ٱللَّهُ إِلَّا بُشْرَىٰ لَكُمْ وَلِتَطْمَئِنَّ
قُلُوبُكُم بِهِۦ ۗ وَمَا ٱلنَّصْرُ إِلَّا مِنْ عِندِ ٱللَّهِ
ٱلْعَزِيزِ ٱلْحَكِيمِ ۝

125. மேலும், அல்லாஹ் அதை (அவ்வுதவியை) உங்களுக்கு நற்செய்தியாகவும், அதனால் உங்கள் இருதயங்கள் திருப்தியடை வதற்காகவுமே அன்றி (வேறு எக்காரணத்துக்காகவும் அதைச்) செய்யவில்லை. விவேகமுள்ளவனான, (யாவற்றிலும்) மிகைத் தவனான அல்லாஹ்வின் புறத்திலிருந்தே தவிர (வேறு எங்கிருந்தும் உங்களுக்கு) உதவி (கிடைக்க) வில்லை.

அல்லாஹுதஆலா மனிதருக்கு உதவி செய்ய நாடுவானாயின் அதற்காக அவன் மலக்குகளை அனுப்பித்தான்

உதவி புரிய வேண்டுமென்பதில்லை. என்றாலும், மூமின்களது மனம் தைரியமடைந்து போரில் அவர்கள் உற்சாகமாக ஈடுபடுவதற்காகவும், அவர்களுக்குத்தான் வெற்றி கிடைக்கும் என்பதைக் குறித்து அவர்கள் நற்செய்தி பெற்றுக் கொள்வதற்காகவுமே மலக்குகளை அனுப்பி உதவி புரிவதாகக் கூறப்பட்டது என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

لِيَقْطَعَ طَرَفًا مِّنَ الَّذِينَ كَفَرُوا أَوْ يَكْبِتَهُمْ
فَيَنقَلِبُوا خَائِبِينَ

126. நிராகரிப்பவர்களிலிருந்து ஒரு சாராரை அழிப்பதற்காக அல்லது (அவர்கள் தோல்வியுறுவதனால்) அவர்களைக் கேவலப்படுத்தி (த் தங்களின் கெட்ட எண்ணத்தில்) அவர்கள் வெற்றி பெறாதவர்களாய்த் திரும்பிச் செல்லுவதற்காக (உங்களுக்கு அல்லாஹ் உதவி புரிந்தான்).

பத்ருப் போரில் காஃபிர்களில் முக்கியமானவர்களாக இருந்தவர்களுள் எழுபது பேர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டுப் போயினர். இன்னொரு எழுபது பேர் கைது செய்யப்பட்டனர். இம்முறையில் அல்லாஹுதஆலா காஃபிர்களிலிருந்து ஒரு கூட்டத்தை அழித்தான். மற்றவர்கள் தோல்வியுற்று, தங்களது கோரிக்கை நிறைவேறாமல் போர்க்களத்தை விட்டு புறமுதுகு காட்டி ஓடினர். ஆகவே, அவர்கள் இழிவுபடுத்தப்பட்டுத் திரும்பத் துரத்தப்பட்டனர். ஆகவே, இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி அழிதல், இழிவடைதல் ஆகிய இரண்டு காரியங்களும் பத்ருப் போரில் காஃபிர்களுக்கு நிகழ்ந்திருக்கின்றன.

لَيْسَ لَكَ مِنَ الْأَمْرِ شَيْءٌ أَوْ يَتُوبَ عَلَيْهِمْ أَوْ
يُعَذِّبَهُمْ فَإِنَّهُمْ ظَالِمُونَ

127. அல்லது (நிராகரிப்பவர்களாகிய) அவர்களது தவ்பாவை அங்கீகரிப்பதற்காக அல்லது அவர்களை வேதனை செய்வதற்காக (உங்களுக்கு பத்ருப் போரில் உதவி செய்தான்) ஏனெனில் (அவர்களின்) காரியத்தில் உமக்கு எதுவும் (உரிமை) இல்லை. (நிராகரிப்பவர்களாகிய) அவர்கள் நிச்சயமாக அக்கிரமக்காரர்களாக இருக்கின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் காஃபிர்களுக்கும் நிகழ்ந்த உஹதுப் போரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பல் ஷஹீதாகி முகத்தில் காயம்பட்டு, உதிரத்தைக் கையால் வழித்து ஊற்றியபோது "தங்களுடைய நபியின் முகத்தை ரத்தத்தால் சாயங் காய்ச்சினவர்கள் எப்படி ஈடேற்றம் பெறுவார்கள்?" என்று சொன்னபோது இந்த ஆயத்து அருளப்பட்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியும் அதற்குக் கட்டுப்படாமல் மீறியவர்களுடன் ஜிஹாது செய்யும்படி ஏவப்பட்டிருக்கிறார்களே தவிர அவர்களைப் பற்றிய மற்ற காரியங்களில் எதற்கும் பொறுப்பேற்படுத்தப்பட வில்லை என்பதும், அவர்களது தவ்பாவை அங்கீகரித்து மன்னிப்பதும், அவர்களை வேதனை செய்வதும் அல்லாஹுதஆலாவின் பொறுப்பிலிருந்து வருகிறது என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

وَلِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ يَغْفِرُ لِمَن يَشَاءُ
وَيُعَذِّبُ مَن يَشَاءُ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ

128. மேலும், வானங்களிலிருப்பதும் பூமியிலிருப்பதும் அல்லாஹ்வுக்கு உரியவைகளே. தான் நாடியவர்களை அவன் மன்னிப்பான். இன்னும், தான் நாடியவர்களை வேதனை செய்வான். மேலும் அல்லாஹ் மிகவும் மன்னிப்போன், பேரன்புடையோன்.

يَغْفِرُ لِمَن يَشَاءُ "அவன் நாடியவரை மன்னிப்பான்" என்ற வாக்கியத்தை முந்தியும் وَيُعَذِّبُ مَن يَشَاءُ "அவன் நாடியவரை

வேதனை செய்வான்" என்ற வாக்கியத்தைப் பிந்தியுஞ் சொல்லி இருப்பது அவனது ரஹ்மத்தென்னும் கருணை அவனது கோபத்தைப் பார்க்கினும் முந்தி இருக்கிறது என்பதை அறிவிக்கிறது.

ஆகவே, அல்லாஹு தஆலாவின் ரஹ்மத்தை வாஜிபாகத் தக்க அமல்களைச் செய்வதில் தீவிரமாகுவது அறிவுடையோரின் வேலையாகும்.

ரிவாயத்து:- "தாவூதே! பாவிகளுக்கு நற்செய்தி கூறுவீராக. இன்னும் (ஸித்தீக்கீன்களான) உண்மையாளருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" என்று அல்லாஹுதஆலா ஹளரத் தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹி அறிவித்தான். அதற்கு ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "எனது றப்பே! பாவிகளுக்கு எவ்விதம் நான் நற்செய்தி சொல்ல வேண்டும்? இன்னும் ஸித்தீக்கீன்களுக்கு எவ்விதம் நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும்?" என்று வினவினார்கள் அதற்கு அவன் "பாவத்தை நான் மன்னிப்பதில்தான் என்னுடைய மகிமை இருக்கிறது என்று பாவிகளுக்கு நற்செய்தி கூறுவீராக. இன்னும் ஒருவர் மீது எனது நீதியையும் கேள்வி கணக்கையும் வைத்தால் அது அவரை அழிக்காமல் விடாது என்றும் தங்களுடைய நற்செயல்களைப் பற்றி பெருமையடைந்து கொண்டிருக்க வேண்டாமென்றும் ஸித்தீக்கீன் களான உண்மையாளர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" என்றும் கூறினான்.

ரிவாயத்து:- ஒரு முறை ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்றபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழுது கொண்டிருப்பதைப் பார்த்து "யா ரசூலல்லாஹ் தங்களுக்கு அழுகை வந்ததற்குக் காரணமென்ன?" வென்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இஸ்லாத்தில் நறைத்து விட்ட எவரையும் வேதனை செய்வதற்கு அல்லாஹு தஆலா வெட்க மடைகிறான் என்று ஜிப்ரயீல் என்னிடம் வந்து சொன்னார். எனவே இஸ்லாத்தில் நறைத்துப்போன

ஒருவர் அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்வதில் வெட்கமடையாமல் இருப்பது எப்படி?" என்று கூறினார்கள்.

ஆகவே வயோதிகத்தை அடைந்தவர்கள் இந்த கௌரவத்தை உணருவதும், அல்லாஹு தஆலாவிற்கு நன்றி செலுத்துவதும், இறைவனுக்கும் மனிதர்கள் செய்யும் கிரியைகளை எழுதி வைப்பவர் களான கிராமன்காத்திபீன் என்ற மலக்குகளுக்கும் வெட்கப்பட்டு, பாவங்களைத் தவிர்த்துக் கொள்வதுடன், இறைவனுக்கு வழிப்படுவதில் முன் செல்லவும் வேண்டும்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَأْكُلُوا الرِّبَا أَضْعَافًا مُضَاعَفَةً ۖ
وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ۝

129. விசுவாசங் கொண்டவர்களே! அதிகமதிகமாக வட்டியை (வாங்கித்) தின்னாதீர்கள். நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு (வட்டி வாங்கும் விஷயத்தில்) அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.

வட்டியைத் தின்னாதீர்கள் என்பதற்கு வட்டி வாங்காதீர்கள் என்பது கருத்து. ஆனால், இவ்வாறு பணத்தை அதிகமாகச் சேர்த்து அதன் மூலம் உணவுப் பொருள்களை வாங்கிப் புசிப்பதுதான் பெரும்பாலும் வழக்கமாக இருப்பதால் இங்கு வட்டியைத் தின்னாதீர்கள் என்று சொல்லப்பட்டது.

அறிந்துகொள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திற்கு முன்னுள்ள ஜாஹிலிய்யத்தான காலத்தில் ஒருவர் மற்றொருவரிடத்தில் நூறு ரூபாய் கடன் வாங்கி, அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டிய தவணைப்படி கொடுக்க முடியா விட்டால், அந்த ரூபாயை வேறு தவணைக்கு மாற்றுவதற்காக அசல் முதலிலேயே அதிகப்படுத்திக் கொள்வது வழக்கம். இவ்வாறு அதிகப்படுத்தி அந்தத் தொகை இருநூறு முன்னூறு ரூபாயாக அதிகமாகி விடுவதுண்டு. இதனை இந்த ஆயத்தில் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

وَاتَّقُوا النَّارَ الَّتِيْٓ اُعِدَّتْ لِلْكٰفِرِيْنَ ۝

130. இன்னும், நிராகரிப்பவர்களுக்காக தயார் செய்யப்பட்டிருக்கிற (நரக) நெருப்பை அஞ்சிக் கொள்ளுங்கள்.

பாவம் செய்த முஸ்லிம்கள் நரகில் போடப்பட்டாலும் அது காஃபிர்களுக்கென்றே முக்கியமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிற தென்பது இந்த ஆயத்திலிருந்து விளங்குகிறது. மேலும், இந்த ஆயத்தில் காஃபிர்களுக்கென்று தயார் செய்யப்பட்டிருக்கிற நரகினில் மூமின்களை அவர்கள் பாவம் செய்வதை விட்டுவிடாமலிருந்தால் போட்டு விடுவதாக அல்லாஹுதஆலா கூறி இருப்பதால் இந்த ஆயத்துதான் மூமின்களை பொறுத்தமட்டில் திருக்குர்ஆனில் மிகவும் கண்டிப்பாக எச்சரிக்கை செய்யப்பட்ட ஆயத்து என்று இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

وَاَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ۝

131. மேலும், நீங்கள் கிருபை செய்யப்படும் பொருட்டு அல்லாஹ்வுக்கும் (அவனது) தூதருக்கும் (நீங்கள்) வழிப்படுங்கள்.

இந்த ஆயத்தும் இதற்கு முந்திய ஆயத்தும் வட்டி சம்மந்தமாகச் சொல்லப்பட்ட விஷயத்துடன் சம்மந்தப்பட்டனவே யாகும்.

வட்டித் தொழில் செய்பவர் பாவத்தில் மூழ்கி இருக்கிறார் என்பதும், இவ்விதமான பாவத்தைச் செய்து கொண்டு அல்லாஹு தஆலாவின் ரஹ்மத்தை அவர் ஆதரவு வைப்பதற்கில்லை என்பதும், அவனது ரஹ்மத்தென்னும் கருணை வேண்டுமானால் அல்லாஹு தஆலாவிற்கும் அவனது ரசூலுக்கும் கீழ்ப்படிந்து அவர்கள் ஏவிய சகல காரியங்களிலும் கீழ்ப்படியவேண்டும் என்பதும் இந்த ஆயத்துகளில் இருந்து வெளியாகின்றன.

அறிந்துகொள்:- வட்டி இவ்வுலகச் செல்வத்தைப் பல மடங்கு அதிகமாகச் சம்பாதிப்பதன் மீது பேராசை கொள்ளும்படி செய்கிறது. பேராசை நரகத்தின் படித்தரங்களில் ஒரு படித்தரமாகும். ஆகவே, உலகத்திற்காகப் பேராசை கொள்வதும், அதற்காக முயலுவதும், அதனைச் சேகரிப்பதும் பழிக்கப்பட்ட காரியங்களாகும். இதனைச் செலவு செய்தல், தியாகஞ் செய்தல், உலகத்தை விட்டு விடல், கிடைத்ததைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளல் ஆகிய காரியங்கள் புகழத்தக்கவைகளாகும். எனவே, பொருளின் மீது தேவையில்லாதவன் அதனை அதிகப்படுத்துவதற்காக வட்டி வாங்கினால் அவன் தனது தாயிடம் சென்றவரைப் போலாகி விடுகிறான்.

ரிவாயத்து:- வட்டிக்கு எழுபத்திரண்டு வகைப் பாவங்கள் இருக்கின்றன. அதில் மிகவும் சிறியது, ஒருவன் முஸ்லிமாக இருந்து கொண்டு தனது தாயிடம் சென்றவனின் பாவத்தைப் போலிருக்கிறது என்று அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாக **தன்பீஹுல் காஃபிலீன்** என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இது போன்ற பாவங்களை விட்டு விலகியிருப்பது அவசியமாகும். ஏனெனில், வட்டி மூமின்களது ஈமானுக்குத் தீங்கு செய்யும். அத்தொழிலால் பொருள் அதிகமாகுவதாகத் தோன்றிய போதினும் அந்தரங்கத்தில் அது நஷ்டத்தை விளைவிப்பதாகவே இருக்கிறது.

"செல்வந்தர்கள் ஏழைகளுக்குப் பிறகு 500 வருடங் கழித்து சுவர்க்கம் செல்வர்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. ஷரீஅத்தில் சொல்லப்பட்டபடி ஹலாலாகச் சம்பாதித்த செல்வந்தர்களது நிலையே இவ்விதமிருக்குமாயின், ஹராமான முறையில் சம்பாதித்த செல்வந்தர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, மனிதன் தனக்குத் தரித்திரமும் தேவையுமிருக்கும் போது அல்லாஹு தஆலாவின் மீது தவக்கல் வைத்து அவனது அடியார்களிடம் அழகாய் நடந்து கொள்வானாயின் அல்லாஹு தஆலா அவனை வீணாகவும் உலகில் பசித்தவனாகவும் விட்டு விடமாட்டான். மேலும், அவனது கௌரவத்தையும் புகழையும் நாளுக்கு நாள் அதிகப்படுத்துவான்.

وَسَارِعُوٓا إِلَىٰ مَغْفِرَةٍ مِّن رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا
السَّمٰوٰتُ وَالْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ ۝

132. இன்னும், உங்கள் ரப்பில் நின்றுமுள்ள மன்னிப்பின் பக்கமும், சுவர்க்கத்தின் பக்கமும் விரைந்து செல்லுங்கள். அதன் அகலம் வானங்களும் பூமியுமாக இருக்கிறது. பயபக்தி உடையவர்களுக்கென அது தயார் செய்யப்பட்டிருக்கிறது.

பூமி முதலியவற்றிற்கு நீளம் அகலம் ஆகிய இரண்டும் இருக்க, நீளத்தைச் சொல்லாமல் அகலத்தை மட்டும் சொன்னதானது, நீளம் அகலம் ஆகிய இரண்டில் நீளத்தைப் பார்க்கினும் அகலம் குறைந்தது என்பதனாலேயாகும். குறைவாகவுள்ள அகலம் மட்டும் வானங்களுடையவும் பூமியினுடையவும் அகலத்தைப் போலிருந்தால் நீளம் இன்னும் அதிகமாக இருக்கும் என்பது இதிலிருந்து விளங்குகிறது.

தவிரவும், சுவர்க்கம் இந்தப் பூமிக்குள்ளும் வானங்களுக் குள்ளும் இல்லாமல் அவற்றிற்குப் புறம்பில் இருக்கிறதென்பதும், அது தற்போதும் இருந்து கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது.

ஹிக்காயத்து:- ஹிர்க்கல் சக்கிரவர்த்தியின் தூதன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தபோது "வானங்களினுடையவும் பூமியினுடையவும் அகலமுள்ள சுவர்க்கத்தின் பால் நீர் அழைக்கிறீர். அவ்வாறானால் நரகம் எங்கே இருக்கும்?" என்று வினவினான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஸுப்ஹானல்லாஹ் பகல் வந்தால் இரவு எங்கே" என்று பதில் கூறினார்கள். அதாவது வானம் சுற்றுவதால் இரவு பகலுண்டாகிறது. ஆகவே, இவ்வுலகின் ஒரு பகுதியில் பகலிருந்தால் மறுபகுதியில் இரவு வருகிறது. இதுபோல் சுவர்க்கம் பூமிக்கு மேல் பக்கத்திலிருக்கிறது. நரகம் அதற்கு நேர்மாறான திசையில் கீழ்ப்பக்கமிருக்கிறது" என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய பதிலின் கருத்து.

தவிர ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் இவ்வாறு வினவிய போது "சுவர்க்கம் ஏழு வானத்திற்கு மேலில் அர்ஷுக்கு முன்பாக இருக்கிறது" என்று கூறினார்கள் என்று ஒரு ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

الَّذِينَ يُنفِقُونَ فِي السَّرَّآءِ وَالضَّرَّآءِ
وَالْكٰظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ ۗ
وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ ۝

133. இவர்களே இன்பத்திலும், துன்பத்திலும் (நன்மையான காரியத்தில்) செலவு செய்கின்றனர். இன்னும் கோபத்தை அடக்குபவர்கள். இன்னும், (தங்களுக்குத் தீங்கு செய்த) மனிதர்களை மன்னிக்கிறவர்கள். மேலும், அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கிறான்.

இன்பத்திலும் துன்பத்திலும் என்றதற்கு "செல்வந்தர் செல்வமுள்ள காலத்திலும் தரித்திர முள்ள காலத்திலும்" என்பது கருத்து. மனிதனுக்கு இன்பமும் துன்பமும் ஏற்படுவது இயல்பு. இவ்விரண்டில் ஒன்று அவனுக்கு இல்லாமலிருக்காது. இவ்விருவகைக் காலத்திலுங் கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ செலவழிக்காமலிருக்க மாட்டான். ஆனால், தங்களுக்குள்ள எல்லா நிலையிலும் அல்லாஹு தஆலாவிற்காக தர்மம் செய்வார்கள் முத்தக்கீன்கள்.

அறிந்துகொள்:- பிறருக்கு உபகாரம் செய்வது இரண்டு வகை. 1. மற்றவருக்குப் பிரயோஜன முண்டாக்குவது. 2. பிறருக்கு வந்த தீங்கை நீக்குவது. இவ்விரண்டு வகையில் முதலாவது வகைதான் الَّذِينَ يُنفِقُونَ فِي السَّرَّآءِ وَالضَّرَّآءِ **இவர்களே இன்பத்திலும் துன்பத்திலும் செலவு செய்வார்கள்** என்ற வசனத்தின் கருத்து. அறியாத மனிதர் களுக்குக் கல்வி போதித்தல், வழி கெட்டவருக்கு நேர்வழி காட்டுதல் நன்மையான காரியங்களிலும் வணக்கங்களிலும் பொருளைச் செலவு செய்தல் முதலியவைகள் இவ்வினத்தைச் சேர்ந்தவை.

قَالَ عَلَيْهِ السَّلَامُ السَّخِيُّ قَرِيْبٌ مِنَ اللهِ قَرِيْبٌ مِنَ الْجَنَّةِ قَرِيْبٌ مِنَ النَّاسِ بَعِيْدٌ مِنَ النَّارِ وَالْبَخِيْلُ بَعِيْدٌ مِنَ اللهِ بَعِيْدٌ مِنَ النَّاسِ قَرِيْبٌ مِنَ النَّارِ

ரிவாயத்து:- தர்மம் செய்பவர் அல்லாஹு தஆலாவிற்கு நெருங்கியவன், சுவர்க்கத்திற்கு நெருங்கியவன், மனிதர்களுக்கு நெருங்கியவன், நரகத்திற்குத் தூரமானவன். ஆனால் கஞ்சன் அல்லாஹுதஆலாவிற்குத் தூரமானவன், மனிதர்களுக்குத் தூரமானவன், நரகத்திற்கு நெருங்கியவன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

பிறருக்கு நிகழ்ந்த தீங்கை நீக்கக்கூடிய இரண்டாவது வகையானது உலகத்தில் சம்மந்தமுள்ளதாக இருக்கும் அல்லது மறுமையில் சம்மந்த முள்ளதாக இருக்கும். ஒருவர் செய்த தீமைக்குப் பதில் தீமை செய்தல் என்பதுதான் உலகத்தில் சம்மந்தமுள்ளது. இதனைக் குறித்துத்தான் وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ **"கோபத்தை அடக்குபவர்கள்"** என்ற வசனத்திற் கூறப்பட்டிருக்கிறது.

قَالَ عَلَيْهِ السَّلَامُ مَنْ كَظَمَ غَيْظًا وَهُوَيَقْدِرُ عَلَى اَنْفَاذِهٖ مَلَأَ اللهُ قَلْبَهُ اَمْنًا وَاِيْمَانًا

"ஒருவர் தனது கோபத்தை நிறைவேற்றிக் கொள்ளச் சக்தி பெற்றவராக இருந்து, அதனை நிறைவேற்றாமல் அடக்கிக் கொள்வாராயின் அவருடைய இருதயத்தில் ஈமானையும் அமனை (அபயத்தை) யும் அல்லாஹு தஆலா நிரப்புகிறான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

தனக்குத் தீங்கு செய்தவரிடம் மறு உலகில் தொடரும் உரிமையை விட்டுக் கொடுத்து, தீங்கு செய்த அவரைத் தள்ளி விடுவதுதான் மறுமையில் சம்மந்தமுள்ளது. இதனைக் குறித்துத்தான் وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ **மனிதர்களை மன்னிப்பவர்கள்** என்ற வசனத்திற் கூறப்பட்டிருக்கிறது. "எவர்களுக்குக் கூலி கொடுப்பது அல்லாஹு தஆலாவின் மீது பொறுப்பாக இருக்கிறதோ அவர்கள் எங்கே? என்று கியாமத்து நாளில் அழைக்கப்படும். அப்போது மனிதர்களை மன்னித்தவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த அழைப்பைக் கேட்டு எழுந்திருக்க மாட்டார்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"ஒருவர் செய்த உபகாரத்திற்குப் பிறகு அவருக்கு உபகாரம் செய்வது பிரதி செய்வதாகும். ஒருவர் செய்த தீங்குக்குப் பிறகு அவருக்குத் தீங்கு செய்வது தண்டனையாகும். ஒருவர் செய்த தீங்குக்குப் பிறகு அவருக்கு உபகாரம் செய்வது தர்மமும் உபகாரமுமாகும். ஒருவர் செய்த உபகாரத்திற்குப் பிறகு அவருக்குத் தீங்கு செய்வது பழிக்கத்தக்கதாகும்" என்று ஃபுலைலுப்னு இயால் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَالَّذِيْنَ اِذَا فَعَلُوْا فَاحِشَةً اَوْ ظَلَمُوْٓا اَنْفُسَهُمْ ذَكَرُوا اللّٰهَ فَاسْتَغْفَرُوْا لِذُنُوْبِهِمْ ۗ وَمَنْ يَّغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اللّٰهُ ۗ وَلَمْ يُصِرُّوْا عَلٰى مَا فَعَلُوْا وَهُمْ يَعْلَمُوْنَ ۝

134. இன்னும், அவர்கள் மானக்கேடானவற்றைச் செய்தால் அல்லது தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டால் அல்லாஹ்வை அஞ்சி தங்களின் பாவங்களை மன்னிக்கத் தேடுவார்கள்; மேலும், அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் யார்? அவர்கள் தெரிந்து கொண்டே தாங்கள் செய்த (பாவத்)தின் மீது நிலைத்திருப்பதில்லை (அல்லாஹ்விடத்தில் உடனே பாவ மன்னிப்புத் தேடுகிறார்கள்).

ஃபாஹிஷத்துன் என்பது விபச்சாரம் போன்ற மானக் கேடானதைக் குறிக்கும். ஆயினும், பிறருக்குத் தீங்கு செய்யும் காரியங்களையும் குறிக்கும்.

"தங்களுடைய பாவங்களுக்குப் பிழை பொறுக்கத் தேடுவார்கள்" என்பதற்கு நாவால் மட்டும் இஸ்திஃபார் செய்வது என்பது கருத்தல்ல. தான் செய்த காரியத்திற்காக உண்மையாகவே வருந்தி இனிமேல் அவ்வாறு செய்வதில்லையென்று உறுதி கொள்ள வேண்டும்.

أُولَٰٓئِكَ جَزَآؤُهُم مَّغْفِرَةٌ مِّن رَّبِّهِمْ وَجَنَّٰتٌ تَجْرِى مِن تَحْتِهَا ٱلْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَا ۚ وَنِعْمَ أَجْرُ ٱلْعَٰمِلِينَ ۝

135. (எனவே) இவர்கள் - இவர்களுக்குக் கூலியாகிறது தங்கள் ரப்பிடமிருந்துள்ள மன்னிப்பும், (சுவர்க்கத்துச்) சோலைகளுமாக இருக்கின்றன. அவற்றிற்குக் கீழே அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் எந்நாளும் (நிலைப்பட்டவர் களாய்) இருப்பார்கள். மேலும், நற்கிரியை புரிபவர்களின் கூலி (மிக) நல்லதாக இருக்கிறது.

மனிதர்களுக்கு அல்லாஹுதஆலா மன்னிப்பளித்தலும், சுவர்க்கங்களை அளிப்பதும் அவனது தயையையும் கிருபையையும் பொறுத்த காரியங்களாக இருந்தாலும், அவற்றிற்கு **ஜஸாஉ** அதாவது **கூலி** என்று கூறியது நன்மையான காரியங்களைச் செய்வதில் மனிதர்கள் உற்சாகமாக ஈடுபட வேண்டும் என்பதைத் தூண்டு வதற்காகவேயாகும்.

قَالَ عَلَيْهِ السَّلَامُ عَنْ رَبِّهِ تَبَارَكَ قَالَ ابْنُ اٰدَمَ اِنَّكَ مَا دَعَوْتَنِيْ وَرَجَوْتَنِيْ غَفَرْتُ لَكَ مَا كَانَ مِنْكَ ابْنُ اٰدَمَ اِنَّكَ اِنْ تَلْقَنِيْ بِقُرَابِ الْاَرْضِ خَطَايَا لَقِيْتُكَ بِقُرَابِهَا مَغْفِرَةً بَعْدَ اَنْ لَاتُشْرِكْ

بِيْ شَيْأً ابْنُ اٰدَمَ اِنَّكَ اِنْ تُذْنِبْ حَتّٰى يَبْلُغَ ذَنْبُلْكَ عَنَانَ السَّمَاءِ ثُمَّ تَسْتَغْفِرُنِيْ اَغْفِرْلَكَ

ரிவாயத்து:- "ஆதமுடைய மகனே! நீ என்னை ஆதரவு வைத்து அழைக்கும் போதெல்லாம் உன்னிலிருந்து உண்டான பாவத்தை நான் மன்னிப்பேன். ஆதமுடைய மகனே! நீ எனக்கு இணை வைக்காமல் இருந்து கொண்டு, பூமி நிறம்பப் பாவத்தை என்னிடம் நீ கொண்டு வந்தால் நான் உன்னிடம் பூமி நிறம்பப் பிழை பொறுக்குதலைக் கொண்டு வருவேன். ஆதமுடைய மகனே! வானத்தைத் தொடும் அளவுக்கு பாவத்தைச் செய்து விட்டுப் பிறகு என்னிடம் நீ பிழை பொறுக்கத் தேடுவாயாயின் அவைகள் அனைத்தையும் நான் பொறுத்திடுவேன் என்று அல்லாஹு தஆலா கூறியதாக" நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

رُوِيَ اَنَّ اللهَ تَعَالٰي اَوْحٰي اِلٰي مُوْسٰي عَلَيْهِ السَّلَامُ مَا اَقَلَّ حَيَاءَ مَنْ يَّطْمَعُ فِيْ جَنَّتِيْ بِغَيْرِ عَمَلٍ يَامُوْسٰي كَيْفَ اَجُوْدُ بِرَحْمَتِيْ عَلٰى مَنْ يَّبْخَلُ بِطَاعَتِيْ

ரிவாயத்து:- நற்செயல் புரியாமல் சுவர்க்கத்துக்கு ஆசைப்படுகிறவனுக்கு மானம் குறைவாக இருப்பதைக் குறித்து நான் என்ன செய்யட்டும்? மூஸாவே! எனக்குக் கீழ்ப்படிந்து வணங்குவதற்கு கஞ்சத்தனம் செய்தவருக்கு எனது ரஹ்மத் என்னுங் கிருபையைக் கொண்டு நான் எப்படி கொடை கொடுப்பேன்? என்று அல்லாஹு தஆலா ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹி அறிவித்தான் என்று ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது.

"நற்செயல் புரியாமல் சுவர்க்கத்திற்கு ஆசைப்படுவது பலவிதமான பாவங்களில் ஒருவகைப் பாவமாகும். காரணமில்லாமல் ஷஃபாஅத்தை எதிர் பார்ப்பது அகந்தையில் ஒருவகை. எவனுக்குக்

கீழ்ப்படியவில்லையோ அவனிடமிருந்து கிருபை கிடைக்குமென ஆதரவு வைப்பது மூடத்தனமும் அறியாமையுமாகும்" என்று ஷஹ்ருப்னு ஹுஷ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"என்னை திக்ரு செய்பவர்களை நானும் திக்ரு செய்வதாக என் மீது நான் வாஜிபாக்கிக் கொண்டிருக்கிறேன். எனவே, அநியாயக் காரர்களுக்கு நான் திக்ரு செய்வது அவர்களை நான் சபிப்பதுதான். ஆதலின், அநியாயக்காரர்கள் என்னை நினைக்கக்கூடாதென்று அவர்களுக்கு நீர் கூற வேண்டும் என்று ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹுதஆலா வஹி அறிவித்திருக்கிறான்" என்று குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

தக்கீபுக் கிளையிலுள்ள ஒருவரும் ஒரு அன்ஸாரியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சொற்படி உடன்பிறந்த சகோதரர்கள் போலிருந்தார்கள். ஒரு முறை அந்த அன்ஸாரி தக்கீபுக் கிளையைச் சேர்ந்தவரைத் தமது வீட்டில் வைத்து விட்டு சன்மார்க்க யுத்தத்திற்குப் போயிருந்த போது அந்த அன்ஸாரியின் மனைவியின் கையை அவர் முத்தமிட்டு விட்டார். ஆனாலும், உடனே இதற்காக மிகவும் கவலைப்பட்டு "நான் கெட்டேனே" என்று கூறி மண்ணை வாரித் தன் தலையிற் போட்டுக் கொண்டு "தவ்பா" செய்வதற்காக மலையடிவாரம் போய் விட்டார். பின்னர், அந்த அன்ஸாரி படையிலிருந்து திரும்ப வந்து விஷயத்தை உணர்ந்து அவர் மீது இரக்கங் கொண்டு அவரைத் தேடிச் சென்று கண்டு பிடித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அழைத்துக் கொண்டு வந்தார். அது சமயம் இந்த ஆயத்துகள் இறங்கின.

قَدْ خَلَتْ مِن قَبْلِكُمْ سُنَنٌ فَسِيرُوا فِي الْأَرْضِ
فَانظُرُوا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِينَ ۝

136. (நிராகரிப்பவர்களை உடனே தண்டிக்காமல் தாமதித்து வைப்பதாகிய இந்த) வழக்கங்கள் நிச்சயமாக உங்களுக்கு முன் (காலத்திலும்) சென்றிருக்கின்றன. ஆகவே, நீங்கள் பூமியில் (சுற்றுப்) பிரயாணஞ் செய்யுங்கள். (நபிமார்களைப்) பொய்ப்படுத்தியவர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைப் பாருங்கள்.

நபிமார்களை நிராகரித்துக் கொண்டு அவர்களுக்குக் கீழ்ப்படியாமலிருந்தவர்கள் அல்லாஹுதஆலாவின் தண்டனைக்கு ஆளாகி அழிந்து போனதை உணர்ந்து கொள்ளும்படி இந்த ஆயத்தின் மூலம் கட்டளையிடப்பட்டிருக்கிறது. எனவே فَسِيرُوا فِي الْأَرْضِ பூமியில் சுற்றுப் பிரயாணஞ் செய்ய வேண்டுமென்பதற்கு நாடு நாடாக அலைய வேண்டுமென்பது மட்டும் கருத்தல்ல, எந்த விதத்திலும் விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த ஆயத்தின் கருத்தாகும். ஆனால், கேள்விப்படுவதைப் பார்க்கினும் நேரில் பார்த்து தெரிந்து கொள்வதில் அதிகம் படிப்பினையும் பிரயோஜனமும் இருப்பதால் "**இங்கு பூமியில் நீங்கள் (சுற்றுப்) பிரயாணஞ் செய்யுங்கள்**" என்று சொல்லப்பட்டது.

هَٰذَا بَيَانٌ لِّلنَّاسِ وَهُدًى وَمَوْعِظَةٌ لِّلْمُتَّقِينَ ۝

137. இ(ந்த குர்ஆனான)து மனிதர்களுக்கு (ச் சத்திய மார்க்கத்தை) விளக்குவதாகவும், நேர்வழி காட்டியாகவும், பயபக்தியுடையவர்களுக்கு உபதேசமாகவும் இருக்கின்றது.

அன்னாஸ் அதாவது மனிதர்கள் என்ற பதம் பொதுவாக எல்லா மனிதரையும் குறிப்பிடுவதாக இருந்தாலும் இந்த இடத்தில் மறு உலக வாழ்க்கையையும் சன்மார்க்கத்தையும் மறந்து நபிமார் களையும் மறுத்துக் கொண்டிருக்கிற மனிதர்களை மட்டும் குறிப்பிடுகிறது.

وَلَا تَهِنُوا وَلَا تَحْزَنُوا وَأَنتُمُ الْأَعْلَوْنَ إِن كُنتُم مُّؤْمِنِينَ ۝

138. மேலும், நீங்கள் அதைரியமடையாதீர்கள். இன்னும் கவலைப்படாதீர்கள். நீங்கள் உண்மை விசுவாசிகளாக இருந்தால் (பகைவர்களை வென்று) மேன்மையடைபவர்கள் நீங்கள்தான்.

உஹதுப் போரில் முஸ்லிம்களிற் சிலர் ஷஹீதாகியும் சிலர் காயமடைந்தும் போனதை எண்ணி முஸ்லிம்கள் வருந்திக் கொண்டு சோர்வடைந்து விடக்கூடாது என்பதைக் குறித்து இந்த ஆயத்தில் முஸ்லிம்களுக்கு ஆறுதல் சொல்லப்பட்டிருக்கிறது.

إِن يَمْسَسْكُمْ قَرْحٌ فَقَدْ مَسَّ الْقَوْمَ قَرْحٌ مِّثْلُهُ ۚ وَتِلْكَ الْأَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ وَلِيَعْلَمَ اللَّهُ الَّذِينَ آمَنُوا وَيَتَّخِذَ مِنكُمْ شُهَدَاءَ ۗ وَاللَّهُ لَا يُحِبُّ الظَّالِمِينَ ۝

139. (உஹத் யுத்தத்தில்) உங்களுக்குக் காயம்பட்டால், நிச்சயமாக (இதற்குமுன் பத்ரில் நிராகரிப்பவர்களான) கூட்டத்தினருக்கு இதுபோன்ற காயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், இந்த (மாறுதலுக்குரிய சம்பவ) தினங்களை நாம் மனிதர்களுக்குள் மாற்றி மாற்றிக் கொண்டு வருவோம். இன்னும், விசுவாசங் கொண்டவர் களை அல்லாஹ் (வெளிப்படையாக) அறிவதற்காகவும், உங்களிலிருந்து ஷஹீது (மார்க்க யுத்தம் புரிந்து உயிர் துறந்தவர்)களை உண்டாக்குவதற்காகவும் (உஹத் யுத்தத்தில் உங்களுக்குச் சேதத்தைக் கொடுத்தான்). ஆனால், அக்கிரமக்காரர் களை அல்லாஹ் நேசிக்கமாட்டான்.

முஸ்லிம்கள் சோர்வடைந்து கோழையராகி விடக்கூடாது என்பதற்காக இந்த ஆயத்தில் பத்ருப் போரின் நிலையும் உஹதுப் போரின் நிலையும் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. பத்ருப் போரில் முஸ்லிம்களால் காஃபிர்களில் 70 பேர் கொல்லப்பட்டு, 70 பேர்

கைதி செய்யப்பட்டனர். இது போல உஹதுப் போரில் காஃபிர்கள் முஸ்லிம்களில் 70 பேரை ஷஹீதாக்கினார்கள். இன்னும் எழுபது பேரை கைதிகளாக்கினார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அவர்கள் பத்ரில் நஷ்டமடைந்தும் கோழையராகாமல் மீண்டும் போருக்கு வந்தது போல முஸ்லிம்களும் கோழையராகக் கூடாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

தவிரவும், وَتِلْكَ الْأَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ **“இந்த தினங்களை நாம் மனிதர்களுக்குள் மாற்றி மாற்றிக் கொண்டு வருவோம்”** என்ற வசனம், உஹது பத்ருப் போர்கள் நிகழ்ந்த நாட்களை மட்டும் குறித்ததன்று. எல்லாக் காலத்திற்கும் பொதுவானதேயாகும். அதாவது வெற்றி சில சமயங்களில் முஸ்லிம்களுக்கும் மற்றும் சில சமயங்களில் காஃபிர்களுக்கும் கிடைப்பது இயல்பு என்பது கருத்து. ஆனால், அல்லாஹுதஆலா ஒரு முறை முஸ்லிம்களுக்கு உதவி செய்வான் என்பதும் இன்னொரு சமயம் காஃபிர்களுக்கு உதவி செய்வான் என்பதும் கருத்தல்ல. ஏனெனில், அல்லாஹு தஆலா உதவி செய்வது பெரும் பாக்கியமாகும். காஃபிர்கள் அதற்குத் தகுதியானவர்களல்லர். அல்லாஹுதஆலா காஃபிர்களுக்கும் கஷ்டத்தை விடுகிறான், மூமின்களுக்கும் கஷ்டத்தை விடுகிறான் என்பதுதான் இதன் கருத்து. எல்லாக் காலத்திலும் காஃபிர்களுக்கே கஷ்டத்தை விட்டுக் கொண்டும், மூமின்களுக்கு அவ்வாறு செய்யாமலுமிருந்தால் ஈமான் கொள்வதுதான் ஹக்கு என்பதையும் மற்றவை பாதில் (தவறு) என்பதையும் காஃபிர்களுக்கு நிர்ப்பந்தமாக உணர வைப்பதாக ஏற்படும். அவ்வாறு நிர்ப்பந்தமாய் அதனை உணர்த்துவதால் ஈமான் கொண்டவர்களுக்கு மறுமையில் நன்மைப் பயன் அளித்தல் என்பதற்கும் காஃபிர்களுக்கு தண்டனை கொடுத்தல் என்பதற்கும் இடமில்லாமல் ஏற்பட்டுவிடும். இதனால்தான் அல்லாஹு தஆலா கஷ்டத்தைக் காஃபிர்களுக்கும் மூமின்களுக்கும் விடுகிறான்.

وَاللَّهُ لَا يُحِبُّ الظَّالِمِينَ **ஆனால் அநியாயக்காரர்களை அல்லாஹ் நேசிக்க மாட்டான்** என்ற வசனத்திலிருந்து காஃபிர்களுக்கு அல்லாஹுதஆலா உதவி செய்யவே மாட்டான் என்பதும், சில

நேரங்களில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும்படி செய்வது மூமின்களைச் சோதிப்பதற்காக என்பதும் வெளியாகின்றன.

وَلِيُمَحِّصَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَيَمْحَقَ الْكٰفِرِيْنَ ۝

140. இன்னும், அல்லாஹ் (உங்களில் உண்மையாக) விசுவாசங் கொண்டவர்களைப் பரிசுத்தப்படுத்தி (விசுவாசிகளைப் போல் பாவனை செய்யும்) நிராகரிப்பாளர்களை அவன் அழிப்பதற்காகவும் (உங்களுக்கு உஹத் யுத்தத்தில் கஷ்டத்தைக் கொடுத்துச் சோதித்தான்).

யம்ஹகு என்பது **மிஹக்** என்ற சொல்லிலிருந்து பிறந்தது. **மிஹக்** என்பதற்கு கொஞ்சமாக அழித்தல் என்பது பொருள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உஹதில் எதிர்த்து யுத்தஞ் செய்தவர்களில் குஃப்ரிலேயே பிடிவாதமாக இருந்தவர்களை அல்லாஹு சுப்ஹானஹு வத்தஆலா கொஞ்சங் கொஞ்சமாக அழித்து விட்டான். மேலும், மூமின்களுக்கு ஒரு முறை வெற்றியையும் இன்னொரு முறை தோல்வியையும் கொடுத்துச் சோதித்ததால் அவர்களுக்குள் இருக்கிற பொறுமை, வீரம், ஈமானில் உறுதி, அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் முதலிய காரியங்கள் எல்லாம் புறத்தில் வெளியாகின்றன என்பதுதான் பிரயோஜனம் என்று காஷானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَعْلَمِ اللّٰهُ الَّذِيْنَ
جٰهَدُوْا مِنْكُمْ وَيَعْلَمَ الصّٰبِرِيْنَ ۝

141. ஆயினும், உங்களில் (மார்க்க) யுத்தம் புரிபவர்களை (இன்னாரென) அல்லாஹ் அறியாமலும், பொறுமையாளர் களை(யும் இன்னாரென வெளிப்படையாக) அறியாமலுமிருக்கும் நிலையில் நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்துவிடலாமென நீங்கள் எண்ணிக் கொண்டீர்களா?

கஷ்டமான காலத்தில் பொறுமையாயிருக்க வேண்டும் என்ற தன்மையும், நீங்கள் ஜிஹாது செய்வதும் உங்களிலிருந்து வெளியாகாமலிருக்கும் போது நீங்கள் சுவர்க்கத்தில் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டீர்களா? என்பது இந்த ஆயத்தின் கருத்து.

அல்லாஹுதஆலா எல்லாம் அறிந்தவனாக இருப்பதால் அவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆகவே, மூமின்களில் பொறுமையாளர்கள் யார்? ஜிஹாது செய்பவர்கள் யார்? என்பதை அல்லாஹுதஆலா தெரிந்தே இருக்கிறான். ஆயினும், அவர்கள் தங்களிலுள்ள இந்தத் தன்மைகளை வெளிப்படையாகப் பிறர் அறியும்படி செய்து காண்பிக்க வேண்டும் என்பதுதான் **உங்களில் (மார்க்க) யுத்தம் புரிபவர்களை (இன்னாரென) அல்லாஹ் அறியாமலும், பொறுமையாளர்களை அறியாமலுமிருக்கும் நிலையில்** என்ற வசனத்தின் கருத்து.

وَلَقَدْ كُنْتُمْ تَمَنَّوْنَ الْمَوْتَ مِنْ قَبْلِ اَنْ تَلْقَوْهُ ۖ
فَقَدْ رَاَيْتُمُوْهُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ۝

142. மேலும், நீங்கள் மரணத்தைச் சந்திப்பதற்கு முன் அதை நீங்கள் நிச்சயமாக விரும்பிக் கொண்டே இருந்தீர்கள்; ஆகவே, (உஹத் யுத்தத்தில்) அதை நீங்கள் நிச்சயமாகக் கவனித்தவர் களாகவே (உங்களில் பலர் ஷஹீதாவதன் மூலம்) கண் கூடாகக் கண்டு கொண்டீர்கள்.

இந்த ஆயத்து பத்ருப் போருக்குப் போகாமலிருந்தவர்களை முன்னோக்கிச் சொல்லப்பட்டதாகும். பத்ருப் போரில் ஷஹீதானவர் களுக்குக் கிடைத்த கௌரவத்தை நாமும் அடைய வேண்டுமே என்ற எண்ணத்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யுத்தத்திற்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினார்கள். அவர்களது விருப்பப்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உஹதுப் போருக்காக மதீனாவை விட்டு

வெளியேறிய பின்னர் அவர்களிடம் அதற்கு மாறான காரியங்கள் வெளியாயின.

யுத்தம் மரணத்திற்கு ஒரு காரணமாக இருப்பதால் இங்கு காரியத்தைச் சொல்லிக் காரணம் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, மரணம் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிற பதத்திற்கு யுத்தம் என்பது கருத்து.

அறிந்துகொள்:- இவ்வுலகின் மீது பிரியங் கொள்வது மறு உலகில் சீதேவித்தனம் பெறுவதுடன் சேர்ந்திருக்க மாட்டாது. ஆகவே, உலகின் மீது பிரியம் ஏற்பட்ட அளவிற்கு மறுமையில் சீதேவித் தனமடைவது குறைந்து கொண்டே போகும். இதுபோல மறுமையில் சீதேவித்தனம் அடைவது அதிகமாக ஏற்படுகிற மட்டிற்கு இவ்வுலகின் பாலுள்ள பிரியம் குறைந்து கொண்டே இருக்கும். ஏனெனில், இவ்வுலகத்தின் பெருமையை அடைய வேண்டுமாயின் இந்த உலகத்தைத் தேடுவதில் மனதை ஈடுபடுத்த வேண்டும். மறு உலகில் சீதேவித்தனமேற்பட வேண்டுமாயின் அல்லாஹுதஆலாவை தவிரவுள்ள மற்றைய எல்லாவற்றையும் விட்டு இருதயத்தைக் காலியாக வைப்பதுடன், அல்லாஹ்வின் மீதுள்ள பிரியத்தால் இருதயத்தை நிறப்ப வேண்டும். ஆகவே, ஏக காலத்தில் இவ்விரண்டும் அதாவது இம்மையின் மீதுள்ள பற்றும் மறுமையின் மீதுள்ள பற்றும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்க மாட்டா.

எனவே, மரணத்தை விரும்பினால் இவ்வுலக வாழ்க்கையை அற்பமாக மதிக்க வேண்டும். அவ்வாறு மதித்திருந்தால் உஹதில் நடந்த போரில் அவர்கள் கோழையராகிப் பின்வாங்கி இருக்க மாட்டார்கள். ஆகவே, இந்த ஆயத்து அவர்கள் பின் வாங்கியதைக் குறித்து அவர்களை மிகவும் பலமாகக் கண்டித்திருக்கிறது.

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ
اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ ؕ وَمَنْ يَّنْقَلِبْ

عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ

143. மேலும், முஹம்மது (நமது) தூதரைத் தவிர (வேறு) இல்லை. இவருக்கு முன்னரும் (பல) தூதர்கள் சென்று விட்டனர். ஆகவே, அவர் மரணமடைந்தால் அல்லது கொல்லப்பட்டால் நீங்கள் உங்கள் குதிங்கால்களால் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களோ? மேலும், எவன் தன் குதிங்காலின் மீது (புறங்காட்டித்) திரும்பிவிட்டால் அல்லாஹ்வுக்கு அவர் எந்த தீங்கும் செய்யவே முடியாது. இன்னும், நன்றி செலுத்துவோருக்கு அல்லாஹ் விரைவில் நற்கூலியைக் கொடுப்பான்.

ரிவாயத்து:- மக்கத்துக் குறைஷியர்கள் படையெடுத்து வருவதைக் கேள்விப்பட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் மதீனாவிலிருந்து ஸஹாபாக்களில் எழுநூறு பேருடன் உஹத் மலைக் கணவாயை நோக்கி வந்தார்கள். ஹளரத் அப்துல்லா ஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை அம்பு வீரர்களுக்குத் தளபதியாக நியமித்து "இந்த மலைக்கணவாய் வழியாகப் பின்னால் இருந்து பகைவர் வந்தால் அவர்களை நீங்கள் தடுத்துக் கொண்டிருக்க வேண்டும். எனது உத்தரவில்லாமல் இந்த இடத்தை விட்டு அகலக் கூடாது. இந்த இடத்தில் நீங்கள் இருக்கும் வரை நீங்கள் வெற்றியடைவீர்கள்" என்று திட்டமிட்டருந்தார்கள். முஷ்ரிக்குகள் யுத்தத்தை ஆரம்பித்துக் கடுமையாக போர் நடந்து கொண்டிருக்கும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு வாளை எடுத்துக் கொண்டு "இதற்குரிய கடமையுடன் இதனைப் பிடித்துக் கொள்பவர் யார்?" என்று வினவினார்கள். ஹளரத் அபூதுஜானா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அந்த வாளை வாங்கிக் கொண்டார்கள். ஹளரத் அபூதுஜானா ரலியல்லாஹுதஆலா அன்ஹு, ஹளரத் அலி ரலியல்லாஹுதஆலா அன்ஹு, ஹளரத் ஸஅதுப்னு அபீவகாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ஆகியவர் களும் மிக வீரதீரமாகப் போரிட்டார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹளரத் ஸஅதுப்னு அபீவகாஸ்

ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைப் பார்த்து "எனது தாயும் தந்தையும் உமக்கு தத்தம்" என்று கூறினார்கள். இவ்வமுத மொழியைக் கேட்டவுடன் ஹளரத் ஸஅதுப்னு அபீவகாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும், அவர்களுடன் இருந்தவர்களும் முஷ்ரிக்குகள் மீது பாய்ந்து மிக உக்கிரமாகத் தாக்கினார்கள். ஆகவே, முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. முஷ்ரிக்குகள் மனமுறிந்து புற முதுகு காட்டிப் பின்வாங்கினர். என்றாலும் அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது தலைமையின் கீழ் கணவாய்க்குக் காவலாக நிறுத்தப்பட்டிருந்த அம்பு வீரர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று பகைவர்கள் போர்க்களத்தில் விட்டுச் சென்ற பொருட்களை எடுப்பதற்காக வந்தனர். ஹளரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அந்த வீரர்களை நோக்கி "உங்களிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய கட்டளையை மீறாதீர்கள்" என்று கூறினார்கள். அதையும் கவனியாமல் அவர்கள் வந்து விட்டனர். ஹளரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும் அவர்களுடன் அம்பு வீரர்களில் எட்டுப்பேரும்தான் அங்கு குறித்த இடத்தில் நின்று கொண்டிருந்தனர். இச்சமயத்தில் முஷ்ரிக்குகளது குதிரைப்படைக்குத் தலைவரான காலிதுப்னுல் வலீத் என்பவர் இருநூற்றைம்பது குதிரை வீரர்களுடன் அவ்வழியாக வந்து அங்கு காவல் புரிந்து கொண்டு நின்ற எட்டுப் பேரையும் ஷஹீதாக்கி விட்டு, முஸ்லிம்களுக்குப் பின்புறமாக அவர்கள் வந்து ஆவேசமாக தாக்கினார்கள். இதனால் முஸ்லிம்கள் சிதறிப் போனார்கள். முஷ்ரிக்குகளில் ஒருவனான இப்னு கம்அத் என்பவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறி வைத்துக் கல் எறிந்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது முன் பல் ஷஹதீதாகி விட்டது. முகத்தில் காயமும் ஏற்பட்டது. தலையில் காயம் ஏற்பட்டதென்றுஞ் சிலர் கூறி இருக்கிறார்கள். அதே சமயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டு ஸஹாபிகள் விலகிச் சென்றிருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொன்று

விடவேண்டுமென்று இப்னு கம்அத் என்பவன் முன்னேறி வந்தான். அன்றைய தினம் முஸ்லிம்களது கொடியைத் தாங்கி நின்ற முஸ்அபுப்னு உமைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அவனை மடக்கித் தடுத்தார்கள். இதில் இப்னு கம்அத்தென்பவன் முஸ்அபு ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைக் கொன்று விட்டான். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொன்று விட்டதாக எண்ணிக் கொண்டு "முஹம்மதை கொன்று விட்டேன்" என்று சப்தமிட்டான். உடனே, வேறொரு பக்கமிருந்து "முஹம்மது கொல்லப்பட்டார்" என்று சப்தம் வந்தது. இதனைக் கேட்டு தோழர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். அப்பொழுது ஒருவர் ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடமும், ஹளரத் தல்ஹா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடமும் வந்து "நீங்கள் ஏன் வீணாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, அவ்விருவரும் "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்" என்று கூறினர். அதற்கவர் "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு உயிருடனிருந்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொல்லப்பட்டது போல நீங்களும் கண்ணியத்துடன் இறந்து விடுங்கள்" என்று சொல்லிக் கொண்டு, பகைவர்கள் மீது பாய்ந்து விழுந்து யுத்தம் செய்து ஷஹீதாகி விட்டார். இந்நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மேட்டின் மீதிருந்து கொண்டு "அல்லாஹுதஆலாவின் அடியார்களே! என்னிடம் வாருங்கள்" என்று இரண்டு முறை சப்தங் கொடுத்தார்கள். உடனே, தோழர்கள் அவ்விடம் சென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூடினார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழர்கள் மனமுடைந்து விட்டதைக் குறித்து அவர்களைக் கண்டித்தார்கள். அதற்கு அவர்கள் "நாயகமே! எங்கள் தாய் தந்தை தங்களுக்கு தத்தமாக இருக்கட்டும். நாங்கள் ஒரு தீங்கான செய்தியைக் கேட்டு நாங்கள் சோர்ந்து விட்டோம்" என்று கூறினார்கள். அதனைக் குறித்து இறைவன் இந்த ஆயத்தில் "ஸஹாபாக்கள் செய்தது தவறு" என்று கூறிக் கண்டித்திருக்கிறான். நபி ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் கொல்லப்பட்டதாகச் சப்தம் வந்தபோது முனாஃபிக்குகள் உண்மை முஸ்லிம்களைப் பார்த்து "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொல்லப்பட்டு விட்டதால் நீங்கள் பழைய மார்க்கத்தில் திரும்பி விடுங்கள்" என்று கூறினர் என்றும், அவர்களது இக்கூற்றை கண்டித்து இந்த ஆயத்து அருளப்பட்தென்றுஞ் சிலர் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தபோது முஸ்லிம்கள் மிக வருந்தித் துடித்தனர். சிலர் திகைத்தனர். சிலர் இருந்த இடத்திலேயே இருந்தனர். சிலருக்கு எழுந்திருக்கவும் முடியவில்லை. சிலருக்கு பேச நா எழவில்லை, சிலர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வஃபாத்தை நிராகரித்தனர். ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு இந்த ஆயத்து ஞாபகத்திற்கு வரவில்லை. அவர்கள் மனிதர்களின் மத்தியில் நின்றுகொண்டு "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள் என்று முனாஃபிக்குகள் நினைக்கின்றனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணிக்கவில்லை. ஆனால், ஹளரத் மூஸப்னு இம்ரான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது றப்பிடம் சென்று நாற்பது நாட்கள் வரை தமது உம்மத்துகளை விட்டு மறைந்திருந்து பின்னர் திரும்ப வந்ததுபோல, தமது றப்பிடம் சென்றிருக்கிறார்கள். அல்லாஹு தஆலாவின் மீது சத்தியமாகச் சொல்கிறேன். நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திரும்ப வருவார்கள். அவர்கள் வஃபாத்தாகி விட்டார்களென்று கூறுபவர்களது கால்களையும் கைகளையும் துண்டித்து விடுவேன்" என்று மடக்கி மடக்கிக் கூறிக் கொண்டிருந்தார்கள். பிறகு, ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் வந்து அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து "மனிதர்களே! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வணங்கிக் கொண்டிருந்தவர் யார்? நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்து விட்டார்கள். இன்னும் அல்லாஹுதஆலாவை வணங்கிக் கொண்டிருப்பவர் யார்? நிச்சயமாக

அல்லாஹ் ஜீவித்திருப்பவன் (ஹய்யுன்) மரணிக்க மாட்டான்" என்று கூறிப் பிரசங்கித்து இந்த 143வது ஆயத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

இந்த ரிவாயத்தைக் கூறியவர் இவ்விபரத்தைக் கூறிவிட்டு இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துத்தான் இறங்கிற்று என்ற விபரத்தை ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் இதனை ஓதிக் காண்பிக்கும் வரையில் மற்றவர்கள் உணரவில்லை. ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள் என்ற செய்தி அப்பொழுதுதான் மனிதர்களுக்கும் உறுதியாயிற்று என்று கூறி இருக்கிறார்.

"ஒருவர் ஈமான் கொண்டுள்ளார், அதனால் நானும் ஈமான் கொள்கிறேன்" என்ற முறையில் மற்றவர்களைப் பின்பற்றி ஈமான் கொள்வதாகிய தக்லீதியான ஈமான் மதிக்கத்தக்க தல்லவென்று இந்த ஆயத்தில் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. ஒருவரைப் பின்பற்றி ஈமான் கொண்டவர், பின்பற்றப்பட்ட அவர் இல்லாதபோது தம்முடைய ஈமானை விட்டு மாறி விடுவார். எனவே, தந்தையையோ, ஆசிரியரையோ, ஊரார்களையோ பின்பற்றி ஒருவர் ஈமான் கொள்வாராயின் அந்த ஈமான் அவருடைய இருதயத்தில் பிரவேசிக்காமலும், இஸ்லாத்தின் பிரகாசத்தினால் அவருடைய இருதயம் மலராததாலும் பின்பற்றுவதற்கு உரிய காரணங்கள் அவரை விட்டு மரணத்தின் மூலம் பிரிந்து விடுகின்றன. ஆதலால், கப்ரில் இரண்டு மலக்குகள் வந்து "உமது றப்பு யார்?" என்ற வினாவைக் கேட்கும் போது அவர் பதிற் கூற முடியாமல் "ஹா நானறியேனே?" என்று கூறுவர். இன்னும் "இவரைக் குறித்து நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவ்விரு மலக்குகளும் கேட்கும் போது "ஹா நானறியேனே மனிதர்கள் சொல்லிக் கொண்டிருந்ததையே நானுஞ் சொல்லிக் கொண்டிருந்தேன்" என்று கூறுவார். அப்பொழுது அவ்விரு மலக்குகளும் "நீர் உணரவு மில்லை, ஓதவுமில்லை" என்று கூறுவார்கள் என்று அஷ்ஷெய்கு நஜ்முத்தீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"இதற்கு முன்னுள்ள நபிமார்கள் இவ்வுலகில் வந்து தங்களது ஷரீஅத்தை மக்களுக்குப் போதித்து விட்டுச் சென்று விட்டது போல, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தீனுல் இஸ்லாத்தைப் போதித்து விட்டுச் செல்வார்கள். அந்த நபிமார்களது உம்மத்துகள் அந்த ஷரீஅத்துகளைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டிருப்பது போல, முஸ்லிம்களும் தங்களது இஸ்லாம் மார்க்கத்தில் ஸ்திரமாக இருந்து வர வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு இஸ்லாம் மார்க்கத்தை விட்டு விடக்கூடாது" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

அஷ்ஷாக்கிரீன் என்பதற்கு நன்றியுள்ளவர்கள் என்பது பொருள். ஆயினும், தீனுல் இஸ்லாத்தின் மீது ஸ்திரமாக இருப்பவர்கள் என்பது கருத்து. ஏனெனில், தீனுல் இஸ்லாம்தான் மனிதருக்கு அருளப்பட்ட எல்லா அருட்கொடைகளிலும் மிகச் சிறந்ததும் அருமையானதுமாகும். ஆகவே, அந்த அருட்கொடையை அடைந்தவர்கள் அதிலேயே ஸ்திரமாக இருப்பதுதான் அதற்குரிய நன்றி மறவாமையும், அதற்குரிய கடமையை நிறைவேற்றுவதுமாகும். எனவே, தீனுல் இஸ்லாத்தை அடைந்தவர்கள் அதனை விட்டு மாறுவது நன்றி மறந்த செய்கையாகும் என்பதும் இதிலிருந்து சமிக்ஞையாக அறிவிக்கப்படுகிறது.

وَمَا كَانَ لِنَفْسٍ أَنْ تَمُوتَ إِلَّا بِإِذْنِ اللّٰهِ كِتٰبًا
مُّؤَجَّلًا ۚ وَمَنْ يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۚ
وَمَنْ يُّرِدْ ثَوَابَ الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا ۚ وَسَنَجْزِي
الشّٰكِرِيْنَ ۝

144. மேலும், அல்லாஹ்வின் கட்டளையின்றி எவருக்கும் மரணம் சம்பவிக்காது. (மரணத்தைத்) தவணையிடப்பட்ட விதியாக (அல்லாஹ் விதித்திருக்கிறான்). இன்னும், எவர் இவ்வுலகத்தின் பிரதிபலனை விரும்புகிறாரோ அவருக்கு அதிலிருந்து கொடுப்போம். இன்னும், எவர் மறுமையின் பிரதிபலனை நாடுகின்றாரோ அவருக்கு அதிலிருந்து கொடுப்போம். மேலும், நன்றி செலுத்துவோருக்கு விரைவில் நற்கூலி அளிப்போம்.

ஒவ்வொரு ஆத்மாவுக்கும் குறிப்பிட்ட ஒரு தவணை இருக்கிறது. அதனை அல்லாஹு தஆலாதான் அறிவான். குறிப்பிட்ட அந்தத் தவணை வரும்போது ஒரு கணப்பொழுது கூட முந்தாமலும் பிந்தாமலும் மரணத்தை அனுபவிக்க வேண்டியது ஏற்படும். யுத்தத்திற்குச் செல்லாமல் வீட்டிலிருந்து கொள்வதால் மரணத்தை விட்டுத் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதும் போர்க்களஞ் சென்று பகைவரை எதிர்த்துப் போரிடுவதால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக மரணம் வந்துவிடாது என்பதும் இந்த ஆயத்தின் கருத்து. தவிரவும், மூமின்கள் அஞ்சாமல் யுத்தத்திற்குச் செல்ல வேண்டும், என்பதும் அவர்கள் எங்களிடமிருந்தால் மரணித்திருக்கவும் மாட்டார்கள் கொல்லப்பட்டிருக்கவும் மாட்டார்கள் என்று முனாஃபிக்குகள் கூறியதற்கு மறுப்பும் இந்த ஆயத்தில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, போர் வீரன் தனது மரணத்திற்கேற்பட்ட தவணை வராமல் மரணமடையப் போவதுமில்லை. யுத்தத்திற்குச் செல்லாமல் வீட்டிலிருந்து கொள்பவர் மரணத்திற்குரிய வேளை வந்தால் அதனை விட்டு தப்பித்துக் கொள்ளப்போவதுமில்லை.

இந்த ஆயத்து ஜிஹாதுக்குச் செல்வோரைக் குறித்து அருளப்பட்டிருந்தாலும், எல்லாக் கிரியைகளைக் குறித்தும் பொதுவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், ஒரு காரியத்திற்கு நன்மைப் பயனை அளிப்பதும், தீமைப் பயனை அளிப்பதும், அக்காரியத்தைச் செய்வதற்குரிய காரணங்களையும், எண்ணத்தையும், நோக்கத்தையும் பொறுத்திருக்கிறது. ஒரு தொழுகையில் சுஜூது செய்வதற்காகத் தனது நெற்றியைப் பூமியில் வைப்பதாகவும், அது சமயம் அவருக்கு எதிரில் சூரியன் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அவர் அந்தத் தொழுகையை அல்லாஹு தஆலாவுக்கு வணக்கம் புரிவதாக நிய்யத்துச் செய்திருந்தால், அந்தத் தொழுகை

நற்பயனுள்ளதாக ஆகிவிடுகிறது. ஆனால், சூரியனை வணங்குவதாக நிய்யத்துச் செய்திருந்தால், அது குஃப்ரானதாகவும் தீமைப் பயனை அளிப்பதாகவும் ஆகிவிடுகிறது.

وَكَأَيِّنْ مِّنْ نَّبِيٍّ قٰتَلَ مَعَهٗ رِبِّيُّوْنَ كَثِيْرٌ فَمَا وَهَنُوْا لِمَآ اَصَابَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَمَا ضَعُفُوْا وَمَا اسْتَكَانُوْا وَاللّٰهُ يُحِبُّ الصّٰبِرِيْنَ

145. இன்னும், எத்தனையோ நபிமார்களும் அன்னவருடன் இருந்த ரிப்பிய்யூன்கள் பலர் (சேர்ந்து கொண்டு) யுத்தம் புரிந்தனர். ஆயினும், அல்லாஹ்வின் பாதையில் (புரிந்த யுத்தத்தில்) அவர்களுக்கு நிகழ்ந்த (கஷ்டத்)தினால் அவர்கள் தைரியம் இழந்து விடவில்லை, பலங்குன்றிவிடவுமில்லை, (பகைவருக்கு) அடங்கிவிடவுமில்லை. மேலும், (கஷ்டத்தைச்) சகித்துக் கொள்கிறவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்.

அர்ரிப்பிய்யூன் என்பதற்கு உலமாக்கள் அதாவது படித்த அறிஞர்கள் என்பது பொருள். கூட்டத்தினர் என்றும் பொருளுண்டு.

அல்லாஹுதஆலாவின் கலிமாவாகிய ஓர் இறைக் கொள்கையை அறிவிக்கும் கலிமாவை ஓங்கச் செய்வதற்காகவும், அவனது சத்திய சன்மார்க்கத்திற்குக் கண்ணியத்தை உண்டாக்குவதற்காகவும் பல நபிமார்கள் யுத்தம் செய்தனர். அவர்களுடன் சேர்ந்து உலமாக்களும் பகைவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்தனர். அல்லாஹுதஆலாவின் சன்மார்க்கத்தை நிலைநிறுத்தி அவனது ஓர் இறைத் தன்மையை விளக்கும் கலிமாவை ஓங்கச் செய்வதற்காக அவர்கள் செய்த யுத்தத்தில் அவர்களுக்கேற்பட்ட காயங்களாலும், அவர்களது தோழர்கள் வெட்டப்பட்டதாலும் அவர்கள் தங்களது ஊக்கத்தை இழந்து விடவுமில்லை, பகைவர்களுக்கு ஒடுங்கிப் போய் விடவுமில்லை, பகைவர்களுக்குப் பணிந்துவிடவுமில்லை. சன்மார்க்கத்தை ஓங்கச் செய்யும் விஷயத்தில் ஏற்படும் இவ்வாறான கஷ்டங்களைப் பொறுத்துக்

கொள்வோரை அல்லாஹுதஆலா நேசிக்கிறான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

உஹதுப் போரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொன்று விட்டதாக, காஃபிர்கள் பரப்பிய புரளியைக் கேள்விப்பட்டு முஸ்லிம்களிற் பலர் மனமுடைந்து தைரியம் இழந்தார்கள். ஆதலின், அவர்களுக்கு இந்த ஆயத்தின் மூலம் ஆறுதல் சொல்லப்பட்டிருக்கிறது.

وَمَا كَانَ قَوْلَهُمْ اِلَّآ اَنْ قَالُوْا رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

146. மேலும், "எங்கள் ரப்பே! எங்கள் பாவங்களையும், எங்கள் காரியத்தில் நாங்கள் வரம்பு மீறியதையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக; இன்னும் (யுத்தத்தில்) எங்கள் பாதங்களை ஸ்திரமாக்கி வைப்பாயாக; இன்னும் நிராகரிக்கும் கூட்டத்தாருக்கு விரோதமாக எங்களுக்கு உதவி செய்வாயாக" என்று அவர்கள் கூறுவதைத் தவிர்த்து அவர்களுடைய சொல் (வேறு எதுவாகவும்) இருக்கவில்லை.

இந்த ஆயத்தும் இதற்கு முந்திய ஆயத்துடன் சம்மந்தப்பட்டது. இதற்கு முன்னுள்ள நபிமார்களும், அவர்களுடன் சேர்ந்த ரிப்பிய்யூன்களும் சன்மார்க்கத்தை ஓங்கச் செய்வதற்காகச் செய்த யுத்தத்தில் ஏற்பட்ட கஷ்டங்களைச் சகித்துக் கொள்வதுடன் இந்த ஆயத்திற் கண்டவாறு இறைவனிடம் துஆ செய்வார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

فَاٰتٰىهُمُ اللّٰهُ ثَوَابَ الدُّنْيَا وَحُسْنَ ثَوَابِ الْاٰخِرَةِ وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ

147. எனவே, அவர்களுக்கு அல்லாஹ் இவ்வுலகத்தின் நன்மையையும், மறுமையில் அழகிய நன்மையையும் கொடுத்தான். மேலும், அல்லாஹ் நல்லவர்களை நேசிக்கின்றான்.

ثَوَابَ الدُّنْيَا இவ்வுலகில் நன்மையை என்பது அல்லாஹு தஆலாவின் உதவி, பகைவர்கள் விட்டுச் சென்ற பொருள்கள் கிடைத்தல், கண்ணியம், புகழுரை முதலியவைகளாகும். மறுமையில் அழகிய நன்மை என்பது சுவர்க்க பதவியையும், நிரந்தரமானமான பாக்கியத்தையும் அடைதல் முதலியவைகளாகும். மறுமைப்பயன் பல இருக்க அவற்றில் சுவர்க்கமும், நிரந்தரமான நிஃமத்தென்னும் அருட்கொடைகளும் சிறந்தது என்பதை அறிவிப்பதற்காகவே **ஹுஸ்ன** அதாவது அழகிய தென்று சொல்லப்பட்டது.

மேற்கண்ட கூட்டத்தினர் யுத்தத்தில் பொறுமையாக இருந்து இறைவனைப் பிரார்த்தித்ததன் காரணமாக அவர்களுக்கு அவனளித்த அருட்கொடைகள் இந்த ஆயத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன.

وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ **மேலும் அல்லாஹ் நல்லோர்களை நேசிக்கிறான்** என்ற ஆயத்தைக் குறித்து இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருப்பதாவது:- "இந்த ஆயத்தில் மிக நுணுக்கமான விஷயம் அடங்கி இருக்கிறது. எவ்வாறெனில், அந்த மனிதர்கள் தங்களது பாவங்களை ஒப்புக் கொண்டு "எங்கள் றப்பே! எங்கள் பாவங்களையும், எங்கள் காரியத்தில் நாங்கள் (வரம்பு) மீறியதையும் எங்களுக்கு மன்னிப்பாயாக" என்று கூறி இருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு ஒப்புக் கொண்டதால் அல்லாஹுதஆலா அவர்களுக்கு **முஹ்ஸினீன்** என்ற பெயரைக் கூறி இருக்கிறான். இது "உனது தீங்கையும் உனது இயலாமையையும் நீ அறிந்து கொண்டமையால் நான் இஹ்ஸான் என்பதைக் கொண்டு உன்னை நான் வர்ணித்து எனக்கு உன்னை ஹபீபாக ஏற்படுத்திக் கொள்கிறேன். ஏனெனில், இயலாமையையும், பணிவையும், தாழ்மை யையும் வெளியிடுவதைக் கொண்டே அல்லாமல் அல்லாஹு தஆலாவின் ஹலறத்தை அடியான் அடைய முடியாது. இதனைத் தவிர வேறு

வழியல்லை என்பது வெளியாகுவதற்காக. மேலும், அல்லாஹ் முஹ்ஸின்களை நேசிக்கிறான்" என்று அல்லாஹு தஆலா கூறுவது போலிருக்கிறது என்பதே.

ஹிக்காயத்து:- ஆஸிபுப்னு பர்கியா என்பவர் ஒரு நாள் ஒரு பாவத்தைச் செய்தார். அவர் ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து "எனக்காக அல்லாஹுதஆலாவிடம் பாவ மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதன்படி ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆக் கேட்டார்கள். அந்தப் பாவம் மன்னிக்கப்பட்டது. பின்னர், அவர் இரண்டாவது, மூன்றாவது முறையும் அதே பாவத்தைச் செய்தார். ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆ கேட்டுக் கொண்டே இருந்தார்கள். இவ்வாறு பல முறை நிகழ்ந்த பிறகு "இனிமேல் அவர் மீண்டும் அப்பாவத்தைச் செய்தால் அவருக்காக நீர் கேட்கும் துஆவை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்" என்று ஹளரத் சுலைமான் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு இறைவன் வஹி மூலம் அறிவித்து விட்டான். அவர் மீண்டும் அதனைத் திரும்பச் செய்து விட்டு ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்றபோது உம்முடைய பாவத்தை அல்லாஹுதஆலா மன்னிக்க மாட்டான் என்ற விபரத்தை ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அறிவித்தார்கள். இதனைச் செவியேற்ற அவர் தமது கைத்தடியை உயர்த்திக் கொண்டு கானகஞ் சென்று அதனைப் பூமியில் அடித்துக் கொண்டு தமது கையை உயர்த்தி "எனது றப்பே! நீ நீதான், நான் நான்தான். நீ பாவத்தை மீண்டும் மீண்டும் மன்னிப்பவன். நான் பாவத்தை மீண்டும் மீண்டும் செய்பவன். நான் குற்றவாளி, பலஹீனன். நீ பிழை பொறுப்பவன் கிருபை செய்பவன். நீ பாவத்தை விட்டு என்னைக் காப்பாற்றவில்லையானால் நிச்சயமாக நான் அதனை மீண்டும் செய்பவன்தான்" என்று வருத்தத்துடன் பலமுறை கூறி மயங்கி விழுந்து விட்டார். உடனே, அல்லாஹுதஆலா ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு "நீர் மீண்டும் மீண்டும் பாவம் செய்தால் நான் மீண்டும் மீண்டும் மன்னிப்பேன் என்று உமது தாயின் சகோதரி புதல்வருக்குக் கூறும்" என்று வஹி அறிவித்தான்.

பாவத்தை மீண்டும் மீண்டும் ஒருவர் செய்தாலும் அவர் தனது பலஹீனத்தையும் குற்றத்தையும் உணர்ந்து அவனிடம் பணிந்து மன்னிப்புக் கேட்டால் அவன் அதனையும் மன்னித்து விடுவான் என்பது இந்த ஹிக்காயத்திலிருந்து தெரிய வருகிறது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِن تُطِيعُوا۟ ٱلَّذِينَ كَفَرُوا۟
يَرُدُّوكُمْ عَلَىٰٓ أَعْقَٰبِكُمْ فَتَنقَلِبُوا۟ خَٰسِرِينَ ۝

148. விசுவாசங் கொண்டவர்களே! நிராகரிப்போருக்கு நீங்கள் வழிப்பட்டால், உங்கள் பின் கால்களின் மீது உங்களை அவர்கள் திருப்பி விடுவார்கள். அப்பொழுது நீங்கள் நஷ்டவாளிகளாக மாறிவிடுவீர்கள்.

முஸ்லிம்களுக்கும் காஃபிர்களுக்கும் நடந்த பல யுத்தங்களில் இரண்டொரு சமயம் முஸ்லிம்களுக்குத் தோல்வி ஏற்பட்டது. இவ்வாறு தோல்வி ஏற்படும் சமயங்களில் முனாஃபிக்குகள் மூமின்களை நோக்கி "உங்களது பூர்வீக மார்க்கத்தில் நீங்கள் திரும்பி விடுங்கள். இன்னும் உங்களது சகோதரர்கள் பால் மீண்டு விடுங்கள். அவர் நபியாக இருந்திருந்தால் அவர்கள் வெற்றி பெற்றிருக்க மாட்டார்கள்" என்று கூறினார்கள். இதனை மறுத்து இறைவன் இந்த ஆயத்தை அருளியுள்ளான்.

إِن تُطِيعُوا۟ ٱلَّذِينَ كَفَرُوا۟ **நிராகரிப்போருக்கு நீங்கள் வழிப்பட்டால்** என்ற இவ்வாக்கியத்திற் சொல்லப்பட்டுள்ள காஃபிர்கள் என்ற வார்த்தை முனாஃபிக்குகளைக் குறித்துச் சொல்லப்பட்டது. ஏனெனில் அவர்கள் சொல்லை மெய்யென்று நம்பி அவர்கள் கூறுவதுபோல் நடப்பதில் இருக்கிற தீமைகளை மூமின்கள் உணருவதற்காகவும், அவர்களை வெறுக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவுமேயாகும்.

بَلِ ٱللَّهُ مَوْلَىٰكُمْ ۖ وَهُوَ خَيْرُ ٱلنَّٰصِرِينَ ۝

149. ஆயினும், அல்லாஹ்வே உங்கள் எஜமான். இன்னும், அவன் உதவி செய்பவர்களில் மேலானவன்.

"உங்களுக்கு உதவி செய்பவர்களுக்குத்தான் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். காஃபிர்கள் உங்களுக்கு உதவி செய்பவர் களாயில்லை. ஆதலின் அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படியக் கூடாது. அல்லாஹு தஆலாதான் உங்களுக்கு உதவி புரிபவன். அவனுக்கே நீங்கள் கீழ்ப்படியுங்கள். காஃபிர்களின் பால் உள்ளன்பு கொள்வதை விட்டு நீங்கள் தேவையற்றவர்களாயிருங்கள்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

سَنُلْقِى فِى قُلُوبِ ٱلَّذِينَ كَفَرُوا۟ ٱلرُّعْبَ بِمَآ أَشْرَكُوا۟
بِٱللَّهِ مَا لَمْ يُنَزِّلْ بِهِۦ سُلْطَٰنًا ۖ وَمَأْوَىٰهُمُ ٱلنَّارُ ۚ
وَبِئْسَ مَثْوَى ٱلظَّٰلِمِينَ ۝

150. இ(ணை வைப்ப)தற்கு எந்தவித ஆதாரத்தையும் அவன் இறக்காமலிருக்க அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைத்துக் கொண்டிருப்பதால், (அந்) நிராகரிப்போரின் இருதயங்களில் விரைவில் திகிலை நாம் போடுவோம். இன்னும், அவர்கள் ஒதுங்கும் இடம் (நரக) நெருப்பேயாகும். அன்றியும், அநியாயக்காரர்கள் ஒதுங்கும் இடம் மிகக் கெட்டதாகும்.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி அல்லாஹுதஆலா காஃபிர்களது இருதயங்களில் உஹதுப் போரின் போது திகிலை உண்டாக்கி விட்டான். ஆகவே, முதலில் காஃபிர்கள் தோற்றாலும் எந்தவிதமான புறக்காரணங்களில்லாமலே அவர்கள் போரை நிறுத்தி விட்டுப் பின் வாங்கிப் போய் விட்டார்கள். அவர்களது இருதயங்களில் இவ்வாறு திகில் ஏற்பட்டதற்குக் காரணம் அவர்கள் அல்லாஹு தஆலாவிற்கு இணை வைத்து விக்கிரகங்களை வணங்குவதேயாகும்.

சுல்த்தான் என்பதற்கு **சக்தி** என்பது பதப் பொருள். ஆயினும், இது உபயோகிக்கப்படும் இடத்திற்குத் தக்கவாறு சொற்ப மாறுதல்களும் ஏற்படும். ஆகவே, சுல்த்தானுல் மலிக் என்று சொல்லும் போது அரசனது சக்தி, அவனது அதிகாரம் என்று பொருள் வரும். சுல்த்தானுல் முத்தகி என்று சொல்லும் போது தாவாச் செய்பவரது ஆதாரம், அவர் கூறும் காரணம் என்று பொருள் கொள்ளும்.

அல்இஷாரத்து:- அல்லாஹு தஆலாதான் அடியார்களது உள்ளங்களில் பயம், திடுக்கம், பயமின்மை, ஆசை முதலியவற்றை உண்டாக்குகிறான் என்பது இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது. இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அடியார்களது இருதயங்கள் அல்லாஹ்வின் கையிலிருக்கின்றன. அவன் நாடியபடி அவற்றைத் திருப்புகிறான்" என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, காஃபிர்களை நாங்கள் வெற்றி கொள்ள வேண்டும் என்று அல்லாஹு தஆலாவிடம் அடியார்கள் கெஞ்சிக் கேட்பது அவசியமாகும். முக்கியமாக நஃப்ஸுல் அம்மாராவை அதாவது தீமையைச் செய்யும்படி மனிதரை ஏவுகிற மனப்பான்மையை மிகைக்கும் ஆற்றலை அளிக்கும்படி இறைவனை இறைஞ்சுவது அவசியமாகும். ஏனெனில், மனிதர்கள் அந்த நஃப்ஸுல் அம்மாராவின் இச்சையைப் பின்பற்றி, அதனுடைய அபிலாசைகளில் அதற்குக் கீழ்ப்படிந்தார்களாயின் அவர்களை அது ஜனங்களில் மிகவும் கீழான படித்தரத்திற்றள்ளி விடும். அப்புறம் அவர்கள் நஷ்டவாளர்களாகி விடுவார்கள்.

وَلَقَدْ صَدَقَكُمُ اللّٰهُ وَعْدَهٗۤ اِذْ تَحُسُّوْنَهُمْ بِاِذْنِهٖ ۚ حَتّٰۤى
اِذَا فَشِلْتُمْ وَتَنَازَعْتُمْ فِى الْاَمْرِ وَعَصَيْتُمْ مِّنْۢ بَعْدِ
مَاۤ اَرٰٮكُمْ مَّا تُحِبُّوْنَ ؕ مِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الدُّنْيَا
وَمِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الْاٰخِرَةَ ۚ ثُمَّ صَرَفَكُمْ عَنْهُمْ

لِيَبْتَلِيَكُمْ ۚ وَلَقَدْ عَفَا عَنْكُمْ ؕ وَاللّٰهُ ذُوْ فَضْلٍ
عَلَى الْمُؤْمِنِيْنَ ۝

151. மேலும் (உஹத் யுத்தத்தில்) அவனது கட்டளைப்படி (பகைவர்களாகிய) அவர்களுடன் நீங்கள் யுத்தம் செய்து கொண்டிருந்த போது (அமரர்களைக் கொண்டு உதவி புரிவதாகக் கூறிய) அவனது வாக்குறுதியை உங்களுக்கு அல்லாஹ் நிச்சயமாக உண்மைப்படுத்தி வைத்தான். ஆகவே, நீங்கள் விரும்பியதை (வெற்றியை) உங்களுக்குக் காட்டிய பின்னர் (பொருளாசையினால்) நீங்கள் கோழையர்களாகி விட்டீர்கள். இன்னும், (நாயகமவர்களின்) அக்கட்டளையில் பிணங்கிக் கொண்டீர்கள். இன்னும் (அதற்கு) நீங்கள் மாறு செய்தீர்கள். (ஆதலால், தனது உதவியை அல்லாஹ் மாற்றிக் கொண்டான்) உங்களில் இம்மையை விரும்புபவரும் உண்டு. இன்னும் உங்களில் மறுமையை விரும்புபவரும் உண்டு. பின்னர் உங்களைச் சோதிப்பதற்காக (நிராகரிப்பவர்களாகிய) அவர்களை விட்டு உங்களைத் திருப்பினான். இன்னும், நிச்சயமாக அவன் உங்களை மன்னித்தான். மேலும், அல்லாஹ் விசுவாசிகள் பால் கருணையுள்ளவன்.

இந்த ஆயத்து உஹதுப் போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட சேதத்தைக் குறித்து அருளப்பட்டது. அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஸஹாபிகளில் ஒரு பிரிவினரை உஹது மலைக் கணவாயில் நிறுத்தி "நாங்கள் போரிட்டு வெற்றி பெற்றாலும் நீங்கள் இந்த இடத்தை விட்டு அகலக் கூடாது. இவ்வழியாகப் பகைவர்கள் வந்தால் அவர்களை நீங்கள் அம்பினால் தாக்கி நிறுத்திவிடவேண்டும். அவ்வாறு நீங்கள் இந்த இடத்தில் இருக்கும்வரை வெற்றி நமக்குத்தான்" என்று கூறி இருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய இவ்வாக்குறுதி வஹியை ஆதாரமாகக் கொண்டு சொல்லப்பட்டதால், இது அல்லாஹு தஆலாவால் அளிக்கப்பட்ட வாக்குறுதி என்று மனிதர்கள் உறுதி